வருமானத்துக்காக புதிய வழிமுறைகளை உருவாக்கும் ஐ.எஸ்.
முதற்கட்டமாக வரிகள் அதிகரிப்பு
பக்கம் 14-15

விலை ரூபா 20
பக்கங்கள் 32

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 200 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 31, திங்கட்கிழமை 13.06.2016

# சூழலுக்கு ஏற்ற அரசமைப்பையே தற்போது உருவாக்குவதற்கு முடியும்

## ஆகச் சிறந்ததை அல்ல என்கிறார் அரசமைப்பு உருவாக்கக் குழுத் தலைவர்

யாழ்ப்பாணம், ஜூன் 13
ஆகச் சிறந்த அரசமைப்பை தற்போது உருவாக்க முயற்சிக்கவில்லை. சூழலுக்குஏற்பஓர்திறமையான சிறந்த அரசமைப்பையே எம்மால் உருவாக்க முடியும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் புதிய அரசமைப்பு உருவாக்கக் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்கிரமரட்ண.

யாழ்ப்பாணம் முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்றையதினம் இடம்பெற்ற அரசமைப்பு தொடர்பான கருத்துப் பரிமாற்றல்அமர்வில்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்கிரமரட்ண தெரிவித்ததாவது:
ஆகச் சிறந்த அரசமைப்பை தற்போது உருவாக்க முயற்சிக்கவில்லை. சூழலுக்கு ஏற்ப ஓர் திறமையான சிறந்த அரசமைப்பையே எம்மால் உருவாக்க முடியும். ஏனெனில் நாடாளுமன்றில் எவருக்கும் பெரும்பான்மை கிடையாது. தமிழ்க் கட்சிகளையும் பக்.29



வடக்கு கிழக்கு எண்டபடியால் அமைதியாய் இருக்கினம் பாருங்கோ

# அரசியல் தீர்வே முதலில் உலக நாடுகள் அதில் உறுதி

## அவற்றின் ஆதரவில்லாததால் ரோக்கியோ நிதி வழங்கும் மாநாடு கைவிடப்பட்டது

கொழும்பு, ஜூன் 13
இலங்கையில் தமிழர்களின் பிரச்சினைக்கு முதலில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும், அதன் பின்னரே வடக்கு - கிழக்கில் பொருளாதார அபிவிருத்தி விடயங்களுக்கு உதவ முடியும் என்ற நிலைப்பாட்டை உலக நாடுகள் கொழும்புக்குத் தெளிவுபடுத்தியுள்ளன. இதனால் போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதியின் பொருளாதார அபிவிருத்திக்கான நிதியைத் திரட்டும் நோக்கோடு திட்டமிடப்பட்ட ரோக்கியோ மாநாடு கைவிடப்பட்டுள்ளது.
நிரந்தரத் தீர்வு ஒன்று பக்.27

“நிரந்தரத் தீர்வு ஒன்று ஏற்படுத்துவதற்கு முன்னர் வடக்கு - கிழக்கின் பொருளாதார அபிவிருத்திக்கு என்று கொழும்பு அரசுக்கு நிதி உதவிகளை வழங்குவதற்குத் தயாராக இல்லை.”

## வாகரையில் கடற்படைக்கு ஈரூடகப் பயிற்சி



கொழும்பு, ஜூன் 13
கடற்படையின் தரையில் போரிடும் படைப் பிரிவுக்கான ஈரூடக நடவடிக்கைப் பயிற்சி நெறியின், இரண்டாவது தரையிறக்கப் பயிற்சி, மட்டக்களப்பு வாகரை பக்.29

## வெளிநாட்டு நீதிபதிகளுக்கு ஒருபோதும் இடமளியோம்

### அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு இதுதான் என்கிறார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, ஜூன் 13
இறுதிப் போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இலங்கைக்கு வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை.
அவர்களுக்கு பக்.27

## வடக்கு மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கை துரிதப்படுத்தப்படும்

### வவுனியாவில் தெரிவித்தார் மைத்திரி



யாழ்ப்பாணம், ஜூன் 13
வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வவுனியா போகஸ்வெளவில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் பெரும்பான்மையின மக்கள் வாழும் பிரதேசமான போகஸ்வெளவில், சிறுநீரக நோய்த் தடுப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டம் நேற்று நடத்தப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றினார் மைத்திரி. பக்.29

## ஜெனிவா கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்

ஜெனிவா, ஜூன் 13
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32ஆவது கூட்டத் தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.
நல்லாட்சி எனக் கூறப்படும் பக்.27

## முதலமைச்சர் விக்கி பிரதமருக்குக் கடிதம்

### பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் நிறுவ அனுமதி கேட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 13
வடபகுதிக்கான பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைக்க உத்தரவிடுமாறு கேட்டு வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதமர் ரணில் விக்கிரம பக்.27

## எந்தவொரு ராணுவ முகாமையும் வடக்கிலிருந்து விலக்க வேண்டாம்

### அஸ்கிரிய மகாநாயக்கர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 13
வடக்கிலிருந்து எந்தவொரு இராணுவ முகாமையும் அகற்றவேண்டியதில்லை என அஸ்கிரிய மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மகிந்த சமரசிங்க அஸ்கிரிய மகாநாயக்கரை நேற்றுச் சந்தித்தார். இதன்போதே ஞானரத்ன தேரர் வலியுறுத்தி உள்ளார்.
“வடக்கில் மீள்குடியமர்வுக் கியம். சிங்கள மக்களின் மீள்குடியமர்வு தொடர்பிலும் கூடுதல் அக்கறை செலுத்தப்பட வேண்டும். சிங்கள - தமிழ் மக்களை அவர்களுக்குச் பக்.27

## மயிலிட்டி - பலாலி மக்கள் ஏதிலிகளாகி 26 ஆண்டு

### புதனன்று தெல்லிப்பழையில் விசேட வழிபாடு

யாழ்ப்பாணம், ஜூன் 13
மயிலிட்டி - பலாலியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து நாளை மறுதினம் புதன்கிழமையுடன் 26 ஆண்டுகள் நிறைவடைகின்றது. இதனை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் பக்.28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சாயில் தாக்கப்பட்டவர் திருடச் செல்லவில்லை

## வெளிநாட்டில் இருந்து வந்தவர் எனப் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

கச்சாயில் இரவு நேரம் வீடு புகுந்தார் என்ற குற்றஞ்சாட்டித் தாக்கப்பட்டு பின்னர் உயிரிழந்த நபர் திருடச் சென்றிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டபோதும், அவர் திருடச் செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த நோயாளியான அவரிடமிருந்தே நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன என்றும் நோயாலேயே அவர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அவரைத் தாக்கியவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மறவன்புலவைச் சேர்ந்தவரும் வெளிநாட்டிலிருந்து வந்து மீண்டும் வெளிநாடு செல்லவிருந்தவருமான அப்பர் உமாபதிசிவம் என்பவரே உயிரிழந்தார்.

அவர் திருமணம் செய்து குடும்பத்துடன் வெளிநாட்டில் வசித்து வருகிறார். கச்சாயில் உள்ள கோயிலுக்குச் செல்வதற்காக வெளிநாட்டிலிருந்து கடந்த மாதம் கொடிகாமம் - கச்சாய்க்கு வந்திருந்த அவர், மீண்டும் வெளிநாடு செல்லவிருந்தார்.

அவர் நீரிழிவு நோயாளி என்றும் இன்சுலின் மருந்து பயன்படுத்துபவர் என்றும் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்ற கடந்த 20 ஆம் திகதியன்று அவர் குறித்த மருந்தைப் பயன்படுத்தியிருக்கவில்லை. அவர் 2 மோதிரங்களும் தோடும் தங்கமாலை ஒன்றும் அணிந்திருந்த நிலையில், வீட்டுக்கு வெளியே சென்றிருந்தார் என்று உறவினர் கூறுகின்றனர்.

பல கிலோமீற்றர் தூரத்தில் அவர் இரவு நேரம் யாருமற்ற இடத்தில் விடப்பட்டிருந்தார் என்றும் அவரைச் சென்று பார்த்தபோது அவர் நகைகள் எதுவுமின்றிய நிலையில் காணப்பட்டார் என்றும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

நோய்க்கான மருந்து உட்கொள்ளாத நிலையில், அவர் உதவி தேடி அங்குள்ள வீட்டுக்குச் சென்றிருக்கலாம் என்றும் அதன்போதே அவரைத் திருடர் என நினைத்து அங்கிருந்தவர்கள் தாக்கியுள்ளனர் என்றும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

அங்கு சுற்றுக் காவலில் இருந்த பொலிஸார், தாக்கப்பட்ட குறித்த வயோதிபரை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். சில நாள்களின் பின்னர் அவர் உயிரிழந்தார்.

குறித்தநபர் பற்றிய விடயம் தெரியாத நிலையில் அவர் திருட வந்திருக்கலாம் என்ற அடிப்படையில் அங்குள்ளவர்கள் தாக்கியிருந்தனர் என்றும், 2 பேர் தப்பிச் சென்றுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்திருந்தமை செய்தியாக வெளியாகியிருந்தது. ஆனால் தமது விசாரணை மற்றும் சாவகச்சேரி நீதிமன்ற விசாரணை மூலமாக அவர் திருடச் சென்றிருக்கவில்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.

தாக்கப்பட்டது ஒரு காரணமாக இருந்திருந்தாலும், அவருக்கு ஏற்பட்டிருந்த நோய் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ற-4)

# போக்குவரத்து நியதிச் சட்டத்தில் திருத்தம் செய்ய ஆளுநர் பரிந்துரை

## வடக்கு மாகாண சபை நாளை ஆராயும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட போக்குவரத்து நியதிச் சட்டத்தில் மூன்று திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே மாகாண சபையைக் கேட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கான போக்குவரத்து அதிகார சபையை உருவாக்குவதற்கு, வடக்கு மாகாண போக்குவரத்து நியதிச் சட்டம் கடந்த ஏப்ரல் மாதம் நிறைவேற்றப்பட்டது.

நியதிச் சட்டம் ஒப்புதல் பெற்றுக் கொள்வதற்காக வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல் கூரேக்கு, பேரவைச் செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதன்போது வடக்கு மாகாண ஆளுநர், நியதிச் சட்டத்தில் மூன்று விடயங்களில் திருத்தம் மேற்கொள்ளுமாறு பரிந்துரைத்தார்.

ஆளுநர் கோரிய திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் வடக்கு மாகாண சபையின் நாளைய அமர்வில் பரிசீலிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-5)

# சங்கானைக் கோட்ட ஆசிரியர் மீது பாலியல் முறைகேடு குற்றச்சாட்டு

## இன்று விசாரணை நடத்தப்படும் என்று வலி. வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

சங்கானைக் கோட்டத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் அங்கு கற்கும் மாணவிகளுடன் பாலியல் முறைகேடுகளில் ஈடுபடுகிறார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

"குறித்த குற்றச்சாட்டு முன்னரும் தெரிவிக்கப்பட்ட நிலையில், தற்போது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் இன்று திங்கட்கிழமை விசாரணை மேற்கொள்ளப்படும்" என்று வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சந்திரராஜா தெரிவித்தார்.

குறித்த ஆசிரியர் முன்னர் வன்னியிலுள்ள பாடசாலை ஒன்றில் பணிபுரிந்தார். பின்னர் இடமாற்றம் மூலமாக மாவிட்டபுரத்திலுள்ள பாடசாலை ஒன்றுக்கு நியமிக்கப்பட்டார். ஆனால் அங்கு மாணவர்கள் இல்லாத காரணத்ததால் தற்போது சங்கானைக் கோட்டத்திலுள்ள பாடசாலைக்கு மாற்றப்பட்டார்.

"அவர் மீது முன்னரும் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த ஆசிரியர் தமது பாடசாலைக்குத் தேவையில்லை என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார். அதுமட்டுமன்றிக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஆசிரியரும் இடமாற்றம் கோரியுள்ளார். அது பற்றிய விசாரணை இன்று மேற்கொள்ளப்பட்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்" - என்று வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

அதேவேளை, குற்றச்சாட்டு உண்மை எனக் கண்டால், குறித்த ஆசிரியரை இடமாற்றம் செய்வது சரியான நடைமுறையாக இருக்காது. குற்றஞ் சாட்டப்படும் ஆசிரியரின் குற்றச் செயல் தொடரவே செய்யும் என்று கருத்துத் தெரிவித்துள்ள குறித்த பாடசாலை மாணவர்களின் பெற்றோர், ஆசிரியரை இடமாற்றம் செய்யாது பணியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி மேலதிக விசாரணையைத் தொடரவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். (ற-4)

# எரிகாயமடைந்த இளம் தாய் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 13

தவறுதலாக மண்ணெண்ணெய் முதுகில் ஊற்றுண்டதால் இளம் தாய் எரிகாயமடைந்து சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் நடந்தது.

குறித்த பெண் கடந்த 5 ஆம் திகதி குப்பைகூட்டி அதற்கு மண்ணெண்ணெய் ஊற்றிவிட்டு போத்தலின் மூடியை மூடாது அருகிலுள்ள தண்ணீர்த் தொட்டியில் வைத்து விட்டு குப்பைக்குத் தீ மூட்டியுள்ளார்.

கடும் காற்று வீசியதாகவும், அதனால் தண்ணீர்த் தொட்டியில் மூடப்படாது வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணெய்ப் போத்தல் தவறி அவரின் முதுகில் விழுந்து எண்ணை ஊற்றுண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அந்த நேரம் கீழே எரிந்து கொண்டிருந்த குப்பையிலிருந்த நெருப்பு அவர் அணிந்திருந்த உடையில் பட்டுத் தீ பற்றிக் கொண்டது என்றும் கணவன் கடைக்குச் சென்றிருந்தார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

எரிகாயமடைந்த பெண் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர், யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பயனளிக்காது அவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மற்றும் பொலிஸார் விசாரணையை மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-ஐ-4)

# இலங்கைப் பொலிஸ் சேவைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

## தகுதியுடையோரை விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 13

இலங்கைப் பொலிஸ் சேவையில் உப பொலிஸ் பரிசோதகர், விசேட அதிரடிப்படை ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகுதியுடையவர்கள், ஆர்வமுள்ளவர்களை விண்ணப்பிக்குமாறு பொலிஸ் சேவைப் பிரிவு கோரியுள்ளது.

விண்ணப்பங்களைப் பதிவுத் தபாலில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதால் குறித்த திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இது பற்றிய விவரங்கள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியாகிய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத் திகதியன்று விண்ணப்பிப்பவர்களின் வயது 18 - 28க்கும் இடைப்பட்டதாக இருக்கவேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 27 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தாய்மொழி உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும். ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஆகக் குறைந்தது உயரம் 5 அடி 6 அங்குலம் உடையவர்களாகவும் மார்பு ஆகக் குறைந்தது 32 அங்குலமாகவும் இருத்தல் வேண்டும்.

பொலிஸ்சேவையில் இணைந்து கொண்டால் 7 வகையான கொடுப்பனவுகளும், இலவச சீருடை, போக்குவரத்து உட்பட 6 வகைகளுக்கான இலவச கொடுப்பனவுகளும் வழங்கப்படும். மேலதிக விவரங்களை கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானியில் பார்க்க முடியும் என்றும் பொலிஸ் சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது. (ற-4)

# தாதிய உத்தியோகத்தர் பணிக்கு ஆண்களை அதிகம் உள்வாங்குக

## வடக்கு சுகாதார அமைச்சு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 13

தாதிய உத்தியோகத்தர் பணிக்கு ஆட்சேர்க்கும்போது தற்போது உள்ள 5 வீதமான ஆண்களை மட்டும் உள்வாங்கும் முடிவை 10 வீதமாக அதிகரிக்க வேண்டும் என்று வட மாகாண சுகாதார அமைச்சு, மத்திய சுகாதர அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தாதியர் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இருப்பினும் இதற்காக க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்பவர்கள் போதிய அளவில் விண்ணப்பிக்காத காரணத்தால் தேவையான அளவு ஆளணியைப் பெற முடியாத சூழல் நிலவுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் 5 வீத வரையறை காரணமாக பல ஆண்கள் விண்ணப்பித்தும் அதற்கான சந்தர்ப்பத்தை இழக்கின்றனர்.

எனவே ஆண்களுக்குரிய குறித்த 5 வீத ஒதுக்கீட்டை, இந்த ஆண்டு முதல் 10 வீதமாக அதிகரிப்பதன் மூலம் விண்ணப்பிக்கும் தகுதியான ஆண்கள் அனைவரையும் இணைத்துக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டும் என்பதால் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ற-ஐ-101)

தேசிய போசணை மாதம் - ஜூன் - 2016

- பல்வகை உணவுகளை தினமும் எடுப்போம்.
- ஒரே வகையானதைத் தொடர்ந்து உண்பதைத் தவிர்ப்போம்.
- தானிய உணவுகளை மூன்று வேளை உணவிலும் சேர்ப்போம்.
- உள்ளூர்த் தானியங்களை உணவில் எடுப்போம்.
- நீரிழிவு நோயிலிருந்து எம் சந்ததியைக் காப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கப் பொறிமுறைக்கு வலயச் செயலணிகள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பில், பொதுமக்களுடன் கலந்தாலோசித்து அவர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளவதற்காக, வலயச் செயலணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. வலயச் செயலணியில் உள்வாங்கப்பட்டவர்களுக்கான செயலமர்வு கடந்த மூன்று தினங்களாக பொலநறுவையில் இடம்பெற்றுள்ளது.

நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பில் கலந்தாலோசிப்பதற்கான செயலணி நிறுவப்பட்டுள்ளது. இந்தச் செயலணியின் கீழ் வலயச் செயலணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வாறு உருவாக்கப்பட்ட வலயச் செயலணியினரே மக்களிடமிருந்து கருத்துக்களை நேரடியாகப் பெற்றுக் கொள்ளவுள்ளனர். மக்களிடமிருந்து கருத்துக்களைப் பெறவுள்ள வலயச் செயலணியினருக்கான பயிற்சிகள் கடந்த மூன்று தினங்களாக பொலநறுவை கிரித்தல விடுதியில் நடத்தப்பட்டது.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களும், ஏற்கனவே நடைபெற்ற பயிற்சியில் கலந்து கொள்ள முடியாத அநுராதபுரம், மொனறாகலை, கொழும்பு ஆகிய மாவட்டங்களைச்சேர்ந்தவர்களுமாக 49 பேர் பங்குபற்றியுள்ளனர்.

பொதுமக்களுடனான சந்திப்புக்களை எப்படி நடத்துவது? அதற்கான செயல்முறைகள், அவற்றை கட்டமைக்கும்முறை இவை தொடர்பாக வலயச் செயலணியினருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான வளவாளர்களாக பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு, கௌதமன், செயலணியின் தலைவர் மனோரி முத்தெட்டுவேகம, செயலணியின் செயலாளர் பாக்கியசோதி சரவணமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

(வ-5-101)

## APPRECIATION



### Ms.Puvaneswary Loganathan

It is with deep sorrow that we the Alumni, Faculty of Agriculture, University of Jaffna acknowledge the departing of Ms.Puvaneswary Loganathan presently of the staff of Faculty of Applied Science, Vavuniya Campus, University of Jaffna.

She was in the staff of theFaculty of Agriculture, University of Jaffna, when those of us of the very first batch of undergraduates began their studies at the Faculty. During this period of our stay at the faculty we observed her to be painstaking, understanding and encouraging in the performance of her duties. We the Alumni of the Faculty of Agriculture greatly appreciate her conscientious approach to teaching which was exhaustive in nature self-discipline and her consistent and regular sustained application towards the subject matter. During the difficult days when we had to endure hardships,harassment and unnecessary obstacles Ms.Puvaneswary Loganathanwas with us throughout out the displacement. She continued to be with us until we arrived finally at the University of Jaffna in the peninsula.

We take this opportunity to express our deepest sympathies to her husband, parents and siblings on her departure. We send this message is the gratitude and humility to a teacher of excellence.

**Alumni association Faculty of Agriculture, University of Jaffna (AAFA-UJ)**

## வேலையாள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பொருள் காட்சிப்படுத்துனர் தேவை. (ஆட்டோ சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர் விரும்பத்தக்கது) நேரில் சமுகம் தரவும்.

தேனு களஞ்சியம் (நெஸ்லே)
மில்லேன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்
021 4921258, 075 6420131

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி புதிய மக்கள் வங்கிக்கு முன்பாக அமைந்துள்ள 6 அறைகள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும்.

077 9916589, 077 1688380

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் யாழ் இந்துக் கல்லூரிக்கு முன்பாக BA தம்பி லேன் என்னும் விலாசத்தில் சகல வசதிகளுடன் மேல் மாடி வீடு வாடகைக்கு உண்டு.
வீடு பார்வையிடும் நேரம் (மாலை 4.00-7.00 மணிவரை)

077 4434501, 076 7083271

## VACANCY

ஆங்கிலம்/சிங்களம் சரளமாகப் பேசக்கூடிய 28 வயதிற்குட்பட்ட பெண் பணியாளர் யாழில் இயங்கும் ஆலோசனை நிறுவனத்துக்கு உடனடியாகத் தேவை.

Basic Salary: 20,000/-
0702 363676

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சக ஆசிரியை
**செல்வி சந்திரலதா தம்பிராசா**
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமும் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**கிளி/பூநகரி நல்லூர் ம.வி**

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 12.06.2016 | 1990 | ஊதா
மேடம்
18 24 28 58
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 3,014,520 /-

Galaxy Star
வெற்றி வாரம் 065
திகதி 12.06.2016
04 05 22 37 45
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 5,623,560/-

# மரண அறிவித்தல்

# மாணிக்கம் பிறைசூடி



மீசாலை வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வீர சிங்கம் வீதி, மீசாலை தெற்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் பிறைசூடி கடந்த (11.06.2016) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம்-இராசம்மா தம்பதி களின் அருமை மகனும் காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை-இலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சரோஜாவின் அன்புக் கணவரும் பிரதினி (பிரபா) , நவாஸ்கன் (நவாஸ்-மீன் பிடி போக்குவரத்து அமைச்சு), கபின்(கவி-ஆஸ்திரேலியா), கபிஸ்ரன் (புவி-பிரான்ஸ்), பிறைசன் (செந்தூரன்) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் கமலாதேவி, காலஞ்சென்ற நவரஞ்சித மலர் மற்றும் மலர்சூடி, மலர்மாலை, மணிமேகலை ஆகியோ ரின் பாசமிகு சகோதரனும் பாலச்சந்திரன் (சிறி), செல்வறமா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் கீர்த்திகா, வினுசயன், தனுஷயன், நதி, அபிஷேக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2016) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

| பிறப்பு | இறப்பு | | தகவல்: |
|---|---|---|---|
| 01.05.1953 | 11.06.2016 | மீசாலை தெற்கு, மீசாலை. | குடும்பத்தினர் 077 962 7027 (மகன்) |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மீனவரை காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 13
கடற்றொழிலுக்குச் சென்ற மீனவரைக் காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை – ஆலடி பொலிகண்டியைச் சேர்ந்த பற்றிக் அன்ரன் றயிந்தன் (வயது - 26) என்பவரே காணாமற் போயுள்ளார் என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி குறித்த நபர் வலையுடன் படகில் கடலுக்குச் சென்றுள்ளார். அதன் பின்னர் அவர் கரை திரும்பவில்லை. அவரைப் பல மீனவர்கள் தேடினர். கடற்படையினரும் தேடியுள்ளனர்.

ஆனால் அவர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-4,26)

# பரிந்துரைக்கு அனுமதி கிடைக்காததால் நிரந்தர நியமனம் வழங்குவதில் தாமதம்

## சுகாதாரத் தொண்டர்கள் நியமனம் தொடர்பில் வடக்கு சுகாதார அமைச்சின் செயலாளர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 13
நியமனம் வழங்குமாறுகோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதாரத் தொண்டர்களுக்கு, நிரந்தர நியமனத்தை வழங்குவதற்காக ஆளணியை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அதற்கான அனுமதி கிடைக்காத காரணத்தால் நிரந்தர நியமனம் வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது- இவ்வாறு வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக சுகாதாரத் தொண்டர்களின் சேவையை நிரந்தரமாக்கக் கோரும் கோரிக்கைகள் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விடயம் தொடர்பாக அமைச்சின் மீது குறைகாணும் நடவடிக்கைகளும் தொடர்கின்றன. எனவே இந்த விடயம் தொடர்பாக அமைச்சின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தல் அவசியமாகிறது என்று அமைச்சின் செயலாளர் திருவாகரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மாகாண அமைச்சு ஒன்று தனக்கு ஆளுநரால் வழங்கப்பட்டுள்ள அதிகாரக் கையளிப்புக்கு ஏற்ப, அனுமதிக்கப்பட்ட ஆளணியில் உள்ள வெற்றிடங்களுக்கு நிரந்தர நியமனங்களை மேற்கொள்ளலாம்.

இவை நடைமுறையில் உள்ள ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு அமைவாகவே மேற்கொள்ளப்படும்.

ஆயினும் விசேட சந்தர்ப்பங்களின் கீழாக, 25/2014, 25/2014(I) பொது நிர்வாக சுற்றறிக்கைக்கமைவாகதற்காலிக அடிப்படையில் பணிபுரிந்தவர்கள் இந்த அமைச்சால் சுகாதா ரப்பணி உதவியாளர்களாக நியமிக்கப்பட்டனர்.

சுற்றறிக்கைக்கு அமைவாகத் தகுதிபெறாதவர்கள் தொடர்பாக ஆளணியில் வெற்றிடமில்லாத நிலையில், ஆளணிக்கு மேற்பட்டவர்கள் கடமை புரியும் இந்தச் சந்தர்ப்பத்தில் நிரந்தர நியமனங்களை வழங்குதல் அமைச்சின் அதிகாரத்துக்கு உட்பட்ட விடயமல்ல.

25/2014, 25/2014(I) பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாகவும் 24.10.2014 ஆம் திகதியன்று 180 நாள்களுக்கு மேலாக அரச நிதியிலிருந்து ஊதியம்பெற்றுக்கொண்டிருந்த ஊழியர்களையே நிரந்தரமாக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

ஆயினும் தற்போது நிரந்தர நியமனம் கோரும் தொண்டர்கள் ஏதோ ஒரு வகையில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு தகுதியற்றவர்களாக இருந்தனர்.

24.10.2014 ஆம் திகதிக்கு உடன் முன்பதாக 180 நாள்கள் கடமை புரியாதவர்கள், அமைச்சின் அனுமதி பெற்று நியமிக்கப்படாதவர்கள், அரச நிதியிலிருந்து ஊதியம் பெறாதவர்கள் என்பன போன்ற காரணங்களால் நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறாதவர்களே இத்தகைய போராட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அமைச்சினால் நியமனம் செய்யப்படாத, அமைச்சிலிருந்து வேதனம் பெற்றுக்கொண்டிராத தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவது நடைமுறையில் உள்ள எந்தச் சுற்றறிக்கைக்கும் ஏற்புடையதல்ல.

எனினும் இவர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்குவதற்காக ஆளணியை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டிருப்பினும், அதற்கான அனுமதி கிடைக்காத காரணத்தால் மேற்கொண்டு நிரந்தர நியமனம் வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் 25/2014, 25/2014(I) சுற்றறிக்கைக்கு அமைவாக நிரந்தர நியமனம் வழங்குவதற்கான அனுமதியும் தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற-ஜ-4)

**வீடு வாடகைக்குத் தேவை**
4பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.
இடம் : நல்லூர், திருநெல்வேலி, யாழ்ப்பாணம், கந்தர்மடம், கச்சேரி, கொக்குவில்.
தொடர்பு: 077 290 6703

**காணி விற்பனைக்கு உண்டு**
பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின்றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**
புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகவும் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
1kg சுத்தம் செய்தது 500/=
கூடுதல் கொள்வனவுக்கு 480/= மட்டும்.
U.S.A பாம்
குளப்பிட்டி றோட், ஆனைக்கோட்டை.
077 9493 776, 077 868 9500


ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
DMI COMPUTER EDUCATION
ஆங்கிலத்தில் சரளமாக பேச
ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி
Spoken English
Veta Fluency Diploma
# Foundation
# Dip in English
# Part - 1
# Part - 2
இம் மாதத்திற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் ....

| யாழ் நகர் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Sat, Sun 4.00 p.m. Mon, Wed 9.30 a.m. | Tue, Thu 11.00 am. | Sat, Sun 8.00 a.m. | Mon, Wed, 11.30 a.m. | Sat, Sun 10.00 a.m. |

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
IELTS
# Academic # General
• Latest training materials. ( BOOK 11 )
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு
# UK இல் இருந்து கணினி மூலமான 40 online listening மாதிரி பரீட்சைகள்
# அனுபவம் வாய்ந்த பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் ஆசிரியர் குழாம்.
# இதுவரை 2200 க்கும் மேற்பட்டோர் பயின்று UK சென்றுள்ளார்கள்.
# நடைமுறைகள் தொடர்பான இலவச விளக்கங்கள்
DMI BRITISH COUNCIL இன் அங்கிகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்.
நீங்களும் ஆங்கில ஆசிரியர் ஆகலாம்
Diploma in Teaching English
as a Second Language
This course will introduce key ideas and principles in English Language Teaching (ELT). The course will examine different approaches to English Language Teaching. It will also examine the basic principles of teaching the four skills.
ஆங்கிலத்தில் முழுமையான புலமையை பெற்றுக்கொள்வதோடு, ஆங்கிலம் கற்பிக்க விரும்புவோர்களுக்கான கற்கை நெறி.
கற்கைநெறியை வெற்றி கரமாக பூர்த்தி செய்பவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு
Programme Duration : 06 months
Applicants should be above 18 years
Pass in English Language at G.C.E (Ordinary Level) or an equivalent qualification.
Start : 20/6/2016 (Mon) at 8.30 a.m.

DMI COMPUTER EDUCATION
No.113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174, கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130, K.K.S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
No.19, A9 வீதி, கிளிநொச்சி Tel.: 021-228 5655

# நிதி மோசடிப் பிரிவை கலைக்க அரசு முயற்சி

## சுனில் ஹந்துன்நெத்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 13
நல்லாட்சி அரசு, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவை கலைப்பதற்கு தயாராகி வருகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ்சுமத்தியுள்ளது.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த அரசின் கீழ் அமைச்சுப் பதவிகளை பெற்று ஊழல் செயற்பாடுகளை முன்னெடுத்த ஊழல்வாதிகள் உட்பட தற்போதைய நல்லாட்சி அரசின் ஊழல்வாதிகளைக் காப்பாற்றும் முகமாகவே அரசானது இவ்வாறான செயற்பாடுகளை முன் னெடுக்கின்றது என்றும் அவர் சுட்டிகாட்டியுள்ளார். (ற-ஜ-5)

# தகவல் அறியும் சட்ட மூலம் 23ஆம் திகதி வாக்கெடுப்பு

கொழும்பு, ஜூன் 13
தகவல்கள் அறிந்து கொள்வதற்கான சட்ட மூலம் எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 6.30 மணி வரையில் இது தொடர்பான விவாதம் நடத்தப்பட்டு வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது என்று நாடாளுமன்ற விவகாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார்.

இந்தச் சட்ட மூலம் நிறைவேற்றப்படுவதன் மூலம், பொது மக்களுக்குத் தேவையான தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமை உறுதிப்படுத்தப்படுகின்றது எனவும் ஊடகத்துறை அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் 24ஆம் திகதி இந்தச் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், தவிர்க்க முடியாத காரணங்களால் அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(ற-ஜ-5)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 13
பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் வருடாந்த தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 5 மணிக்கு முதல் திருப்பலியுடன் பூசைகள் ஆரம்பமாகி மாலை 4 மணிக்குப் புனிதரின் தேர்ப்பவனி வீதிவலம் நடைபெறவுள்ளது. (ற-ஜ-17)

## கோடியக்கரை கடலில் தத்தளித்த இலங்கை அகதிகள் மூவர் மீட்பு

கொழும்பு, ஜூன் 13
இந்தியாவின் நாகை மாவட்டம் கோடியக்கரைக் கடற்பரப்பில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கை அகதிகள் மூன்று பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

மூவர் பயணித்த படகு பழுது காரணமாக நடுக்கடலில் நின்றுள்ளது. அதனால் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை மீனவர்கள் பாதுகாப்பாக மீட்டுள்ளனர் என்று இந்திய ஊடகச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன.

இவர்கள் வவுனியாவைச் சேர்ந்த ஒரே குடும்பத்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தியக் கடல் எல்லைக்குள் ஏன் வந்தார்கள் என்பது தொடர்பில் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்று இந்தியக் கடலோர பாதுகாப்பு கட்டளைத் தளபதி தெரிவித்தார். (ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசால் வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களில் மோசடி

## கமக்கார அமைப்புக்கள் குற்றச்சாட்டு விசாரிப்பதற்கு குழு அமைக்கப்பட்டது

கிளிநொச்சி, ஜூன் 13

இந்திய அரசால் கிளிநொச்சி கமநல அபிவிருத்தி நிலையத்துக்கு வழங்கப்பட்ட 110 உழவு இயந்திரங்களில், தற்போது 75 உழவு இயந்திரங்களே உள்ளன. இருக்கும் உழவு இயந்திரங்களிலும் சிலதே பயன்பாட்டில் உள்ளன. இதில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன என்று கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புக்கள் குற்றஞ் சாட்டியுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆராய்வதற்காக மேலதிக அரச அதிபர் தலைமையில் இணைத் தலைவர்கள் குழு ஒன்றை நியமித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், கமநல சேவைகள் தொடர்பான ஆராய்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போதே இந்தக் குற்றச்சாட்டு எழுப்பப்பட்டது.

போரின் பின்னரான மீள் குடியமர்வைத் தொடர்ந்து, இந்திய அரசால் கிளிநொச்சி கமநல அபிவிருத்தி நிலையத்துக்கு 110 உழவு இயந்திரங்கள் வழங்கப்பட்டன. ஆனால் அவற்றில் தற்போது 75 இயந்திரங்கள் மட்டுமே உள்ளன.

அதிலும் சிலதே மக்களுடைய பயன்பாட்டில் உள்ளன. கமக்காரர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட குறித்த உழவு இயந்திரங்கள் எங்கே? அவற்றில் மோசடி இடம்பெற்றுள்ளது. உழவு இயந்திரங்களுடைய பற்றாக்குறையால் பல விவசாயிகள் பெருமளவு பணத்தை செலவு செய்ய வேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கடன்கள் அதிகரித்துள்ளன. எனவே காணாமற்போன உழவு இயந்திரங்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்டத்தைச் சேர்ந்த கமக்கார அமைப்புக்கள் ஒருங் கிணைப்புக் குழு இணைத் தலை வர்களிடம் கோரிக்கை விடுத்த னர்.

இதற்குப் பதிலளித்த கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், மீள் குடியமர்வின் போது, 110 உழவு இயந்திரங்கள் கிடைக்கப்பெற்றன. தற்போது 75 இயந்திரங்களே உள்ளன. ஏனையவை முன்னைய அரசால் உள்ளூராட்சி திணைக்களம், உணவு உற்பத்திச் சபை என்பவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார்.

அதையடுத்து குறித்த பிரச்சினை தொடர்பாக இணைத் தலைவர்கள் மூவரும் கலந்துரையாடி, மேலதிக அரச அதிபர் சத்தியசீலன் தலைமையில் குழு ஒன்றை நியமித்தனர். உழவு இயந்திர மோசடி விவகாரம் தொடர்பில் குறித்த குழு விசாரணைகளை முன்னெடுக்கும் எனவும் இணைத்தலைவர்கள் தெரிவித்தனர்.

(ற-ஐ-21)

# மோதலைத் தடுக்க முற்பட்டவர் கத்தி குத்துக்கு இலக்காகி சாவு

கொழும்பு, ஜூன் 13

இரண்டு தரப்பினருக்கான மோதலைத் தடுக்க முற்பட்டவர் கத்தி குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம் மஹாபுலன்குலம பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

குறித்த பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட ஒருவர் குடி போதையில் மனைவியுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டார். அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு சென்ற அவரது நண்பன் தர்க்கத்தைத் தடுக்க முயற்சித்தார்.

அதனால் கோபமடைந்த குடும்பஸ்தர், நண்பனைக் கத்தியால் குத்தினார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கத்தியால் குத்தினார் என்று கூறப்படும் நபர் அங்கிருந்து தப்பிச் சென்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஐ-4)

# சுதந்திரக் கட்சியின் தலைமையில் 2020ஆம் ஆண்டு ஆட்சி அமையும்

## அமைச்சர் ஜோன் செனவிரட்ன நம்பிக்கை

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையில் 2020ஆம் ஆண்டு ஆட்சி அமையும். இதுவே எனது இலக்காகும். அதற்காகக் கட்சியை வெற்றிபெறும் கட்சியாக கட்டியெழுப்ப வேண்டியது அத்தியாவசியமாகும்.

இவ்வாறு தொழில் மற்றும் தொழிலாளர் விரிவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் பசில் ராஜபக்சவுக்கு முன்னுரிமை வழங்கக்கூடாது. பசில் தான் எமது தோல்விக்கு மூல காரணம்.

கோத்தபாய ராஜபக்சவுக்கு இரண்டாம் தரப் பதவி வழங்கக் கூறவில்லை. மாறாக இரண்டாம் தரவரிசையில் இடம்கொடுக்க வேண்டுமென்றே வலியுறுத்தினேன் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

(ற-ஐ-5)

# வீதியோரத்தில் இருந்தவர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

போதையில் வந்தார்கள் என்று கூறப்படும் 5 பேர் கொண்ட குழு, வீதியோரத்தில் அமர்ந்திருந்த நால்வரை மோசமாகத் தாக்கியதில் ஒருவர் காயமடைந்தார் என்று முறையிடப்பட்டுள்ளது.

இரவு 9 மணிக்குப் பின்னர் வீதியில் ஒன்றாக இருக்கக்கூடாது என நீதிபதி அறிவித்தது தெரியாதா எனக் கேட்டு, அவர்கள் தாக்கினர் என்று காயமடைந்தவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் சரசாலை வடக்கில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றது. குறித்த 4 பேரும் அங்கு வீதியோரத்தில் உரையாடிக்கொண்டிருந்த போது, அங்கு வந்த 5பேரும், நால்வரையும் பார்த்து நீதிபதி கூறியது தெரியாதா எனக் கேட்டுள்ளனர். இரவு 9 மணிக்குப் பின்னர்தான் கூட்டமாக நடமாடவேண்டாம் என்று நீதிபதி கூறியுள்ளார் என்று நால்வரும் தெரிவித்ததும் ஐந்து பேரும் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த வழியே பொதுமக்கள் வருவதைக் கண்டதும் தாக்குதலாளிகள் தப்பிச் சென்றனர் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. குறித்த கும்பல் தினமும் போதையில் சரசாலைப் பகுதியில் வீதியில் நிற்பவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுபவர்கள் என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ற-ஐ-9)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வருட கால நல்லாட்சியில் தமிழருக்கு விருத்தி இல்லை

## துரைரெட்ணசிங்கம் எம்.பி. சுட்டிக்காட்டு

மூதூர், ஜூன் 13

நல்லாட்சி ஆரம்பிக்கப்பட்டு, ஒரு வருடமாகியும் எமது மக்களின் வாழ்வில் அபிவிருத்தி ஏற்படுத்தப்படவில்லை. - இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்தார்.

திருகோணமலை உட்துறைமுக வீதியில் உள்ள ஜெசுவிட் அக்கடமி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வைத்தியர்.அ.ஸதீஸ்குமாரின் 'அனல் மின் அலையில் சம்பூர்' என்ற நூல் வெளியீடு இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது-

நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திரக் கட்சி என அனைத்து கட்சிகளும் தாம் சார்ந்த மக்களின் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன.

எனினும் எமது கட்சிக்கு அவ்வாறான வாய்ப்பு இல்லை. நல்லாட்சி அரசு ஆரம்பமாகி ஒரு வருடமாகியும் எமது மக்களுடைய வாழ்வில் எவ்வித அபிவிருத்தியும் இல்லை.

இந்த விடயம் தொடர்பாக கடந்த சில தினங்களுக்கு முன் இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில், எதிர்க்கட்சித்தலைவரால் பேசப்பட்டுள்ளது.

இன்னும் சில தினங்களில், இவ்வாறான விடயங்கள் தொடர்பாக தீர்க்கமான முடிவு ஒன்றைப் பெற அரசுடனான உயர் மட்டப் பேச்சு இடம்பெறக்கூடிய சந்தர்ப்பம் உள்ளது - என்றார்.(ற-ஐ-40)

# சம்பூர் காளி கோயில் உடைக்கப்பட்டு தங்க நகைகள் மற்றும் பணம் திருட்டு

கொழும்பு, ஜூன் 13

திருகோணமலை சம்பூர் பகுதியிலுள்ள காளி கோயில் உடைக்கப்பட்டு, தங்க நகைகள் மற்றும் பணம் என்பவை திருடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சுமார் 77 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும், 8 ஆயிரம் ரூபா பணமும் கோவிலிலிருந்து திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்கள் எவரும் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இது தொடர்பான விசாரணைகள் நிறைவுபெறும் வரை காளி கோயில் பகுதியில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்பட்டது.

ஆலய நிர்வாகத்தால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய சம்பூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ஐ-5)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது வித்தியாசாலை ஆசிரியை திருமதி
செ.நாகேஸ்வரி அவர்களின்
அன்புக் கணவர்
நாகையா செந்தூர்ச்செல்வன்
(யாழ்ப்பாண எழுச்சி அபிவிருத்தி
உத்தியோகத்தர் J/192 உடுவில்) அவர்கள்
30.04.2016 சனிக்கிழமை அகால
மரணமடைந்தார். அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்பதோடு அன்னாரின்
பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



பாடசாலைச் சமூகம்,
யா/அராலி வள்ளியம்மை,
ஞாபகார்த்த வித்தியாசாலை, அராலி மேற்கு.

## 11 ஆம் ஆண்டு நினைவு



நகுலேஸ்வரி
குகேந்திரன்

பிறப்பு
26.05.1950

இறப்பு
16.05.2005

அன்புள்ள அம்மாவுக்கு----
நலம் நலம் அறிய ஆவல் !
ஆண்டுகள் பதினொன்று
ஆகிவிட்டது
உயிர் எழுத்தில் "அ" எடுத்து
மெய் எழுத்தில் "ம்" எடுத்து
உயிர்மெய் எழுத்தில் "மா" எடுத்து
அழகு தமிழில் கோர்த்தெடுத்த
" அம்மா " எனும் சொல்லை உச்சரித்து.....

உங்கள் பிரிவின் வெறுமையில்
குடும்பத்தினர்.

c/ 2108) (12,18)

# தெல்லிப்பழை வைத்தியசாலையின் தேவைகள் குறித்து நேற்று ஆராய்வு

## யாழ். மாவட்டச் செயலர் நேரில் சென்று பார்வையிட்டார்



வலி.வடக்கு, ஜூன் 13

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் நேற்று நேரில் சென்று வைத்தியசாலையின் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் அழைப்பின் பேரிலேயே மாவட்டச் செயலர் அங்கு சென்று கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

நோயாளர் நலன்புரி சங்க செயலாளர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ராகவன், மகப்பேற்று வைத்திய நிபுணர் குழந்தைவேலு, சத்திர சிகிச்சை நிபுணர் கிரிதரன், புற்றுநோய் வைத்திய நிபுணர் கவிதா, சுஜந்தா மற்றும் முன்னாள் வைத்திய அத்தியட்சகர்களான வைத்தியர் த.விநோதன், வைத் தியர் மு.உமாசங்கர் மற்றும் வைத்திய உத்தியோகத்தர்கள், தாதிய பரிபாலகர், நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது நோயாளர் நலன்புரி சங்கத்தினரால் வைத்தியசாலையின் தேவைகள் குறித்து தெரிவிக்கப்பட்டது.

அங்கு கலந்துகொண்டவர்களால் தெரிவிக்கப்பட்ட முக்கிய விவரங்கள் வருமாறு:

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையானது, வடக்கு மாகாணசபை நிர்வாகத்தின் கீழுள்ள யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய வைத்தியசாலையாகும். வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஒட்டுமொத்த மக்களின் சுகாதார தேவைகளை நிறைவு செய்யும் அதிசிறப்பு சிகிச்சைப் பிரிவுகளாக மனநோய் சிகிச்சைப் பிரிவு, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஆகியன உள்ளன.

ஆயினும், ஆதார வைத்தியசாலை என்னும் சாதாரண தரப்படுத்தலின் கீழுள்ள இந்த வைத்தியசாலையால், இந்தச் சிகிச்சைப் பிரிவுகளை இயக்குவதென்பது மிகச் சவாலான பணி என்பதுடன், நோயாளிகளும் உரிய சிகிச்சையைப் பெற முடியாமல் கடுமையான பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர்.

தமிழர்களின் மிக முக்கிய கொதிநிலைப் பிரச்சினையான உயர் பாதுகாப்பு வலயங்களின் மத்திய இடத்தில், ஒரு மீள்குடியேற்றப் பிரதேசத்தில் இந்த வைத்திய சாலை அமைந்துள்ளமை இதற்கு இராஜ தந்திர ரீதியான முக்கியத்துவத்தையும் அளித்துள்ளது.

மீள்குடியேற்றப் பிரதேசத்தில் உள்ள எமது வைத்தியசாலைக்கு நாளுக்கு நாள் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் காணப்படுகின்றது. அத்துடன், வடமராட்சியையும், வலிகாமத்தையும் இணைத்து தெல்லிப்பழை சந்தியிலிருந்து கட்டுவனூடாக அச்சுவேலி நோக்கி மக்கள் பயணிக்கும் வீதியும் இராணுவத்தால் அணை போடப்பட்டு மூடப்பட்ட நிலையில் உள்ளது.

தற்போது நாட்டில் இயல்பு நிலை காணப்படுவதால் அந்த வீதியையும் உடனடியாகத் திறந்து உதவ வேண்டும். அதன் மூலம் வடமராட்சி மக்களுக்கும் எமது வைத்தியசாலை தரமான சேவையை வழங்க முடியும்.

தற்போது யாழ். பல்கலைக் கழகத்தின் மருத்துவபீட மாணவர்களின் உள மருத்துவம், புற்றுநோய் தொடர்பான கற்கை நெறிகளுக்கான போதனா வைத்தியசாலையாக எமது வைத்தியசாலையே விளங்குகின்றது.

இந்த வைத்தியசாலையை அதிசிறப்பு வைத்தியசாலையாக்கி அபிவிருத்தி செய்வதன் மூலமாக இப்பிரதேசத்தின் மீள்குடியேற்ற செயற்பாடுகளைத் துரிதப்படுத்த முடிவதுடன், போரால் மிகக்கடுமையாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சுகாதார நிலைகளையும் மேம்படுத்த முடியும்.

தெற்கில் மகரகமவுக்கு இணையாக வடக்கில் எமது வைத்தியசாலை உருவெடுத்து வருகின்றது. எமது வைத்திய சாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, உளநலச் சிகிச்சைப் பிரிவு என்பன சிறப்பாக இயங்க எமது வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள், மருத்துவ தொழிநுட்பவியலாளர்கள், ஊழியர்கள் போன்ற ஆளணிகள் போதாமலுள்ளன. எமது வைத்தியசாலைக்கான பௌதீக வளங்களும் பற்றாக்குறையாக உள்ளன.

இதனை அதிசிறப்பு வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதனூடாக வைத்தியசாலையின் தேவைகளை ஓரளவுக்காவது பூர்த்தி செய்து மக்களுக்கு சிறப்பான சேவையை எம்மால் வழங்கமுடியும் என்றனர். (ற-ஐ-25)

# அக்கராயன் ஆற்றுக்கு குறுக்கே புதிய பாலம் அமைக்க மதிப்பீடு

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் பணிப்பு

கிளிநொச்சி, ஜூன் 13

அக்கராயன் ஆற்றுக்குக் குறுக்காக ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள பாலம் சிதைவடைந்த நிலையில் உள்ளது. அதையடுத்து அங்கு தரம்மிக்க பாலம் ஒன்றை அமைப்பதற்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களங்களுக்கு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன் பணிப்புரை விடுத்தார்.

அக்கராயன் பகுதிக்கு நேற்று முந்தினம் சென்ற அமைச்சர், குறித்த பாலத்தை நேரில் சென்று பார்வையிட்டார். அதன் பின்னரே இந்த பணிப்புரையை வழங்கியுள்ளார்.

முறிகண்டி - ஜெயபுரம் வீதியில் உள்ள அக்கராயன் சந்தியில் காணப்படும் ஆற்றுக்குக் குறுக்கான பாலம் சிதைவடைந்து தாழ்வானநிலையில்காணப்படுகின்றது. மழை காலங்களில் குறித்த பாலத்தின் மேலாக 5 அடிக்கு மேல் தண்ணீர் பாய்கின்றது. கடந்த வாரங்களில் பெய்த அடை மழையால் ஒரு வாரத்துக்கு மேலாக அந்தப் பாதை தடைப்பட்டிருந்து.

அதனால் பாடசாலைகள், மருத்துவமனை, நகரபகுதிக்கு பயணம் செய்யும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் பாலத்தைப் பார்வையிட்ட அமைச்சர் தெரிவித்ததாவது:

இந்தப் பாலம் வீதி அபிவிருத்தி திணைக்களம், நீர்ப்பாசனதிணைக்களம் என்பவற்றுடன் தொடர்புபட்டுள்ளது. அதனால் அத்திணைக்கள அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடினேன்.

அதனடிப்படையில் குறித்த பகுதியில் தரமான, போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத பாலம் ஒன்றை அமைப்பதற்கு மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளேன், என்றார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மற்றும் கிராமமட்ட அமைப்புக்களின் தலைவர்கள், பொதுமக்களும் உடனிருந்தனர். (ற-ஐ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைதீவு நிலையை ஆராய இணைத் தலைவர்கள் பயணம்

## எதிர்வரும் 26ஆம் திகதி செல்லவுள்ளனர்

> இரணைதீவைச் சொந்த இடமாகக் கொண்ட மீனவர்கள் போர் காரணமாக அங்கிருந்து இடம் பெயர்ந்து நாச்சிக்குடா பகுதிகளில் குடியேறியுள்ளனர். போர் முடித்த பின்னர் மீண்டும் இரணைதீவில் குடியமராத நிலையில் அங்கு தங்கி நின்று தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி பெற்று தருமாறு அரச அதிகாரிகளிடம் அவர் கள் கோரிக்கை விடுத்துவந்தனர்.

கிளிநொச்சி, ஜூன் 13

இரணைதீவின் நிலமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக எதிர்வரும் 26 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுன் இணைத்தலைவர்கள் குறித்ததீவுக்குப் பயணம் செய்யவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை அடுத்தே அவர்கள் அங்கு சென்று நிலமைகளை ஆராயவுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மீன்பிடி தொடர்பாக ஆராய்வுகளின்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.


இரணைதீவைச் சொந்த இடமாகக் கொண்ட மீனவர்கள் போர் காரணமாக அங்கிருந்து இடம் பெயர்ந்து நாச்சிக்குடா பகுதிகளில் குடியேறியுள்ளனர். போர் முடிந்த பின்னர் மீண்டும் இரணைதீவில் குடியமராத நிலையில் அங்கு தங்கி நின்று தொழிலில் ஈடு படுவதற்கு அனுமதி பெற்று தரு மாறு அரச அதிகாரிகளிடம் அவர் கள் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது, இரணைதீவில் மீனவர்கள் தங்கியிருந்து மீன் பிடிப்பதற்கு கடற்படையினர் தடைவிதித்துள்ளனர் எனவும், அந்த தடையை நீக்கி, அதற்கான அனுமதியை பெற்று தர வேண்டும் என்றும் மீனவர்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர்

குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்த இணைத்தலைவர்கள், இரணைதீவில் மீனவர்கள் தங்கி நின்று தொழில் புரிவதற்கான சாத்தியகூறுகள் உள்ளனவா என பரிசீலிப்பதற்காக எதிர்வரும் 26 ஆம் திகதி குறித்த தீவுக்குச் செல்லவுள்ளோம், அதன்பின்னர் மீனவர்களுக்கான தீர்வு தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.

அத்தோடு கூட்டத்தில் கலந்து கொண்ட கடற்படை அதிகாரிக்கும் இது தொடர்பாக தெரிவித் தனர். இதன்போது அந்தக் கடற்படை அதிகாரி இது குறித்து தமது உயர் அதிகாரிக்கு தெரியப் படுத்துகின்றேன் என்று கூறினார்.

(ற-ஜ-21,ரி3)



கிளிநொச்சி – இராமநாதபுரம் பழைய கண்டியில் உள்ள 900 மீற்றர் நீளமான வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வடமாகாண போக்குவரத்து அமைச்சால் இந்த வருடம் ஒவ்வொரு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் வீதி புனரமைப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள தலா 6 மில்லியன் ரூபா நிதியில் இருந்து, வடமாகாண சபை உறுப்பினர் தவநாதன் பரிந்துரைக்கு அமைவாக குறித்த வீதி புனரமைப்பு செய்யப்படுகின்றது என்று வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற-ஜ-21)


## நற்கருணை பேழையை திருட முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 13

பித்தளையால் செய்யப்பட்ட நற்கருணை பேழையைத் திருடுவதற்கு முயற்சி இடம்பெற்றுள்ளது என்றும், பொதுமக்கள் வந்ததை அடுத்து திருடர்கள் தப்பியோடியுள்ளனர் என்றும் நாவாந்துறைபகுதி மக்கள் தெரிவித்தனர். யாழ். நாவாந்துறை சென். நீக்கிலாஸ் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதிகாலை 5 மணியளவில், தேவாலய மணி அடிக்கும் முதியவர் ஆலயத்தைத் திறந்து விட்டு மணியையும் அடித்துவிட்டுச் சென்றுள்ளார்.அதன்பின்னர், காலை 9 மணியளவில் தேவாலயத்துக்குச் சென்ற பொதுமக்கள் தேவாலயத் தில் நற்கருணை வைக்கப்பட்டுள்ள பேழை உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்து, தேவாயல பங்குத் தந்தையிடம் தெரிவித்துள்ளனர். தற்போது தேவாலய பங்குத் தந்தை நற்கருணைப் பேழையைப் பாதுகாப்பாக எடுத்துச் சென்று, அவரது பணிமனையில் வைத்துள்ளார் என்றும், திருட்டுச் சம்பவம் குறித்து யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்படவுள்ளது என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். (ற-ஜ-106)

# ஏமது பண்பாட்டைப் புறக்கணித்து தவறாகச் செயற்படக் கூடாது

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 13

வட பகுதி மக்கள் கற்றல் நடவடிக்கைகளில் மேம்பட்டவர்கள், பண்பாடு தெரிந்தவர்கள், ஏனையோரை மதிக்கின்ற தன்மை பொருந்தியவர்கள் எனப் பல்வேறு அடைமொழிகளால் வர்ணிக்கப்படுகின்றனர். எனவே நாம் அவற்றைப் புறக்கணித்துத் தவறான அல்லது பிழையான காரியங்களில் ஈடுபடக்கூடாது. எம்முடைய நற்குணங்களுடன் சில தவறான குணங்களும் இருந்து வருவதை நாங்கள் மறுக்க முடியாது. அவற்றை மனத்தில் ஏற்றுப் பிழைகள் களைந்து உங்கள் எதிர்காலத்தை வளமானதாக மாற்ற வேண்டும்.

இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையின் கீழ் இயங்கும் அறிவகம் கணினிக் கல்வி நிலையத்தில் கணினி மென்பொருள் ஆரம்பக் கற்கைநெறிகளை நிறைவு செய்து, சித்தி பெற்று வெளியேறும் மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு" என்ற வாக்குக்கமைய வடலியடைப்பு கிராம அபிவிருத்தி சங்கம்செயற்பட்டுவருகின்றமை தெரிகின்றது.

இந்த அடிப்படைக் கருத்தானது இந்த கிராமத்துக்கு மட்டும் உரியது அல்ல. எங்கள் எவருக்கும் பொருத்தமுடையது. முக்கியமாக வடமாகண மக்களுக்கு பொருத்தமுடையது.

நாம் எவரும் ஒன்றுபட்டு செயற்பட்டால் தான் எமக்கு வாழ்வு உண்டு. பல விதமான சமூகப் பிரிவினைகளுக்கும், கட்சிப் பிரிவினைகளுக்கும், பக்கச் சார்பான நடவடிக்கைகளுக்கும் காரணமாக அமைவது, நாம் கூடிக் கலந்து தீர்மானங்களை எடுக்காமையே ஆகும்.

தான்தோன்றித்தனமான தீர்மானங்களை எடுக்கின்றோம். அவற்றை மற்றவர்கள் ஏற்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். இதேபோல் இன்னொருவனும் அவ்வாறே தீர்மானித்து எதிர்பார்க்கின்றான். இது முரண்பாடுகளை வளர்க்கின்றது.

இந்த முரண்பாடானது எங்களைச் சந்தி சிரிக்க வைக்கின்றது. அது மட்டுமல்லமால் நீதிமன்றம் கூடச் செல்லவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதற்கான அடிப்படைக் காரணத்தை ஆராய்ந்து பார்த்தோம். ஆனால் அதில் சுயநலமே மேலோங்கி நிற்கின்றது. ஓரிருவரின் சுய நலம் முழுச் சமுதாயத்தையே தலை குனிய வைக்கின்றது. எமக்கிடையே எப்போதும் போட்டி இருக்கவேண்டும் பொறாமை இருக்கக் கூடாது. இதேபோல் எப்பொழுதும் ஒற்றுமையுடனேயே இந்தக் கிராமம் செயற்பட வேண்டும்.

ஆரம்பக் காலத்தில் குதிரையோட்டம், வில்வித்தை, உண்மையையே பேசுதல், இவை மூன்றும் ஒரு இளைஞனின் வாழ்க்கைக்கு முக்கியமாகக் கருதப்பட்டது. ஆனால், இன்று அதனை மாற்றி அமைத்து எமது இளைஞர், யுவதிகள் வாகனம் ஓட்டுதல், கணினியை இயக்குதல், உண்மையைப் பேசுதல் என்ற மூன்றிலும் தேர்ச்சி அடைய வேண்டும் என்ற நிலை வந்துள்ளது.

உண்மை பேசுதல் அன்றும் இன்றும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியிருப்பினும், பண்டைய கிரேக்கர்கள் உண்மை பேசுதலுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை நாங்கள் இன்று கொடுக்கின்றோமா என்பது கேள்விக்குறி.

ஆனால் கணினி அறிவு அத்தியாவசியமாகிவிட்டது. அன்றைய வில்வித்தைக்கு மாற்றீடாக இன்று கணினி வித்தை சிறப்புப் பெற்றுள்ளது. அன்று ஆயுதம் ஏந்தினோம். இன்று அறிவைப் பாவிக்கின்றோம். எனவே கணினிக் கற்கை நெறியை எமது மாணவர்கள் தமது அன்றாட கல்வி நடவடிக்கைகளுடன் மேலதிக கற்கை நெறியாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிடல் அவசியமாகியுள்ளது.

எனவே இன்றைய கால கட்டத்தில் நாம் கணினிக் கற்கை நெறியை முறையாகக் கற்றல் மிகமிக அவசியமானதாகும். அரசின் பல்வேறு செயற்றிட்டங்களின் ஊடாக கணினிக் கற்கை நெறிகள் பல்வேறு மட்டங்களில் மாணவர்களுக்கு பயிற்றப்பட்டு வருகின்றன.

மேலும், வடலியடைப்பு ஒரு விவசாய கிராமமாக விளங்குகின்ற காரணத்தால் இங்குள்ள மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதுமட்டுமன்றி கால்நடை வளர்ப்பு தொழிலிலும், அதிக அக்கறை காட்டி வருவது சிறப்புக்குரியதாகும். இன்று விவசாய உற்பத்திகளுக்கு எமது உள்ளூர்ச் சந்தைகளிலும் வெளியிடங்களிலும் அதிக கிராக்கி உள்ளது. அதுவும் சேதனப் பசளையால் உரமிடப்பட்டு வளர்க்கப்படும். விவசாய உற்பத்திகள் அதிக விலையைப் பெறுகின்றன.

எனவே சேதனப் பசளைக்கு மாறினீர்களானால், உங்கள் உற்பத்திகளை நல்ல விலைக்கு சந்தைகளில் விற்க முடியும்.

உங்கள் பால் உற்பத்திகள் சிறுவர்களுக்கு ஊட்டச் சத்தை கொடுக்கவல்லது. இந்தக் கிராமம் ஓர் இந்துப் பாரம்பரியத்தை கொண்டதும், பல பிரபல்யமான ஆலயங்களைக் கொண்டதுமாக இருப்பதால், ஆலயத்தேவைகளுக்கான பசும் பாலையும் இங்கேயே பெற்றுக்கொள்ள முடியும் என்று கருதுகின்றேன்.

இந்தக் கிராம மக்கள் பொது வேலைத்திட்டங்களில் கூடிய அக்கறை காட்டி வருகின்ற காரணத்தால் சாந்தைக் கிராமத்துக்கான குடிதண்ணீர் வழங்கல், யாழ்.பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் பயன்பாட்டுக்கான காணி வழங்கல், கலாசார மத்திய நிலைய மண்டபத்துக்கான காணி வழங்கல் என பல்வேறுபட்ட பொது நிகழ்வுகளுக்கு இந்தச் சங்கத்துக்குச் சொந்தமான அல்லது சங்கத்தின் முயற்சியில் காணிகள் வழங்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பு அம்சமாகும் – எனத் தெரிவித்தார். (ற-ஜ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டடப் பொருள்களின் விலை தென்மராட்சியில் அதிகரிப்பு

## வீட்டுத் திட்டப் பயனாளிகள் திண்டாட்டம்

சாவகச்சேரி, ஜூன் 13

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒரே நேரத்தில் 300க்கும் மேற்பட்ட வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனால் கட்டடப் பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன- என்று தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தெரிவித்தனர்.

மீள்குடியேற்ற அமைச்சால், தென்மராட்சி பிரதேசத்தில் வழங்கப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டத்துக்கு, 291 வீடற்றவர்களுக்கும், இந்தியாவிலிருந்து மீளக் குடியமர்ந்த 17 பேருமாக, மொத்தம் 308 பேர் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

பயனாளிகள் தமக்குரிய வீட்டு வேலைகளை உடன் ஆரம்பிக்குமாறு பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் ஒரே நேரத்தில் அனைவரும் ஆரம்பக்கட்ட வேலைகளுக்காக கற்கள் மற்றும் மணல் பறிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதனைப் பயன்படுத்தி கற்கள், மணல் பறிப்போர் ஒரு தடவை கற்கள் மற்றும் மணல் பறிக்க 2 ஆயிரம் ரூபா தொடக்கம் 5 ஆயிரம் ரூபா வரை விலையை அதிகரித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

கற்கள் அகழ்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அத்திபாரக் கற்களின் விலை என்றுமில்லாத அளவுக்கு எகிறியுள்ளது. அத்துடன் பாலியாற்று மணலின் விலையும் அதிகரித்துள்ளது.

சிமெந்து விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டபோதிலும், இன்னமும் விற்பனை நிலையங்களில் விலை அதிகரிக்கப்படாத நிலையில் ஏனைய கட்டடப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளமை பலருக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் வீடமைப்புத் திட்டத்துக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் பலர், தமக்கு அரசால் வழங்கப்படும் தொகையைவிட (எட்டு லட்சம்) இரு மடங்கு செலவு ஏற்படும் என்று தெரிவித்தனர்.

கட்டட வேலைகள் ஆரம்பிக்கும் போது சிமெந்து மற்றும் இரும்புக் கம்பிகள், மரங்களின் விலைகளும் அதிகரிப்பு ஏற்படின் வீடமைப்பு வேலைகள் செப்ரெம்பர் மாதத்துக்குள் நிறைவு பெறுமென்பது சந்தேகமாகவே உள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். கற்கள் மணல் விலை அதிகரிப்புத் தொடர்பாக அவற்றை வழங்கும் வாகன உரிமையாளர்களிடம் கேட்டபோது, "வலிகாமம் பகுதியிலிலேயே அத்திபாரத்துக்குப் பயன்படுத்தும் கற்கள் அகழப்பட்டு விநியோகிக்கப்பட்டன. தற்போது ஒரே நேரத்தில் அனைத்துப் பிரதேசங்களிலும் வீடமைப்புத் திட்டம் செயற்படுத்தப்படுவதால், கற்களைப் பெறுவது கஷ்டமாக உள்ளது. அத்துடன் சில இடங்களில் கற்கள் அகழ்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கற்கள் கிடைக்கும் இடங்களில் அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை எமக்கு ஏற்படுகிறது. வீடமைப்புத் திட்டப் பயனாளிகள் அவசரமாக வேலைகள் ஆரம்பிக்கவுள்ளதால், அதிக விலை கொடுத்தும் வாங்கவும் தயாராக உள்ளனர்.

இந்த நிலையில் நாங்களும் அதிக விலை கொடுத்து வாங்கி வந்து பறிக்கின்றோம். இலாபம் எங்களுக்குக் கிடைக்காத நிலையிலும், மக்களுக்கான சேவையாக கருதியே அத்திபாரக் கற்களை வழங்கி வருகின்றோம். சிமெந்துக் கற்கள் அரிவதற்கான கற்களைத் தேவையான அளவு கல்லுடைக்கும் ஆலைகளில் பெறக்கூடியதாக இருக்கின்றது. அதனால் அவற்றின் விலைகள் அதிகரிக்கவில்லை. இருப்பினும் வலிகாமம் பிரதேசத்தில் கண்ட கற்களைப் பெறுவதில் கஷ்டம் காணப்படுவதால், கல்லுடைக்கும் ஆலைகளும் வவுனியாவிலிருந்து பெறும் கருங்கற்களை உடைத்தே ஏனைய வேலைகளுக்குப் பயன்படுத்த விற்பனை செய்ய வேண்டிவரும் என எதிர்பார்க்கின்றோம்.

வலிகாமம் பகுதியில் கற்கள் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதால், வீடமைப்புத் திட்டப் பயனாளிகளின் சம்மதத்துடன் வவுனியாவிலிருந்து கருங்கற்கள் கொண்டு வரும் வாகனங்களில் பெற்று, பயனாளிகளுக்கு வழங்கி வருகின்றோம்." - என்றனர்.

இதேவேளை, "வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு வழங்கக்கூடிய மணல் பிரதேசத்தில் இல்லாததால், பாலியாற்று மணல் அத்திபார கட்டடத் தேவைகளுக்கென பயன்படுத்தப்படுகின்றது.

வன்னிப் பிரதேசத்தில் கிடைக்கும் பாலியாற்று மணலை யாழ். மாவட்டத்துக்குக் கொண்டு வருவதற்கு அந்தந்தப் பிரதேச செயலகத்தில் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதனால் அவற்றை உடனடியாக பயனாளிகளுக்கு வழங்கமுடியாத நிலை ஏற்படுகிறது.

அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு பலநாள்கள் பிரதேச செயலகங்களுக்கு அலையவேண்டியுள்ளது. இதனால் எமக்கு ஏற்படும் செலவுகளை ஈடு செய் வதற்காக விலையை அதிகரிக்க வேண்டியுள்ளது." - என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.(ற-ஐ-9)

## ஆசிரியையிடம் நகைகள் பறிக்க முயற்சி

ஆசிரியர் தின விழாவுக்காகச் சென்ற ஆசிரியையின் தங்க நகைகளை, மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் பறிக்க முற்பட்டுள்ளனர். ஆயினும் ஏனைய ஆசிரியைகள் சத்தமிடவே திருடர்கள் திருட்டு முயற்சியைக் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றது.

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஆசிரியர் தினவிழா கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. அதில் கலந்துகொள்ள வந்த ஆசிரியையிடம், மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த இருவர் நகைகளை அபகரிக்க முற்பட்டனர்.

அப்போது சிறிது தூர இடைவெளியில் வந்த ஆசிரியைகள் கண்டு சத்தமிடவே, திருடர்கள் தமது நோக்கத்தைக் கைவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளனர். (ற-ஐ-9)

## கிளி. வைத்தியசாலை புனரமைப்பு விரைவில்

### வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் தகவல்

கிளிநொச்சி, ஜூன் 13

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை புனரமைப்பு பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை புனரமைப்புக்கென இந்த வருடம் மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதி திரும்பிச் செல்லும் நிலமை காணப்படுகின்றது. வைத்தியசாலை புனரமைப்புக்கென 100 மில்லியன் ரூபாவும், உபகரணக் கொள்வனவுக்கென 40 மில்லியன் ரூபாவுமாக 140 மில்லியன் ரூபா நிதி மத்திய அரசால் ஒதுக்கப்பட்டது. இருந்தபோதிலும் இதுவரை அந்த நிதியைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இதனைப் பயன்படுத்தாது போனால் இந்தப் பணம் வருட இறுதியில் திரும்பிச் செல்வதற்கான வாய்ப்பு இருக்கின்றது. எனவே, கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை புனரமைப்பு செய்ய வேண்டிய தேவை இருப்பதால், இந்த நிதியைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருவாகரன் தெரிவித்ததாவது:

நிதி ஒதுக்கப்பட்ட பின்பு புனரமைப்புத் தொடர்பாகச் சில அபிப்பிராயங்கள் கூறப்பட்டன. புனரமைப்பு செய்வதில் சில சிக்கல்கள் இருந் தன. தற்போது உள்ள கட்டடம் போர்க் காலத்தில் கட்டப்பட்ட கட்டடம் என்பதால், அது தொடர்பாக பல சிக்கல்கள் இருந்தன. கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரே, கட்டட புனரமைப்புக்காக போராடி, அதற்கான பணத்தை எடுத்தார். இப்போது உள்ள பிரச்சினை அந்தக் கட்டடத்தின் கட்டமைப்பில் மாற்றங்களை செய்யாது புனரமைக்க வேண்டும் என்பதுதான். எனவே கட்டமைப்புக்களில் ஏதாவது மாற்றங்கள் வருமா? இல்லையா? என்பதை ஆராய்வதற்காக அதற்குரிய திணைக்களத்திடம் பரிசீலனைக்காக அனுப்பியிருந்தோம்.

அவர்கள் சில அவதானங்களைத் தந்துள்ளார்கள். அதிலிருந்து பெரும்பாலும் கட்டமைப்பில் மாற்றங்கள் வராது என்பது புலனாகின்றது. இறுதி முடிவுகளை எடுத்த தன் பின்னர் கட்டடம் புனரமைக்கப்படும். அதற்குத் தயாராக உள்ளோம்- என்றார்.

(ற-ஐ-21,ரி3)

## ஓட்டோ சாரதிகளுக்கு விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடமாகாணத்தில் ஓட்டோ தரிப்பிடங்களின் ஊடாக சேவையில் ஈடுபடும் ஓட்டோ சாரதிகளுக்கு போக்குவரத்து விதிமுறைகள், வீதி விபத்துக்களை தடுப்பது தொடர்பிலான விசேட விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து- வர்த்தக வாணிப மற்றும் கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக வடமாகா ணத்தில் உள்ளூராட்சி சபைக் குட்பட்ட ஓட்டோ தரிப்பிடங்களின் விவரங்கள், ஓட்டோக்களின் பதிவு இலக்கம், உரிமையாளர் விவரங்கள், தொலைபேசி விவரங்கள் ஆகியவற்றைத் தொகுத்துப் பெறுவதற்கு, வடமாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கு.பிர பாகரமூர்த்தி சம்பந்தப்பட்ட சபைகளின் செயலாளர்களிடம் விவரங்களை கோரியுள்ளார்.

ஓட்டோ சாரதிகளின் விவரம் முழுமையாக தொகுக்கப்பட்டதும் விழிப்புணர்வு தொடர்பாக கருத்தமர்வு நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-50)

## இரு நீர் வடிகட்டிகளை அமைக்க சுகாதார அமைச்சு அனுமதி

வவுனியா, ஜூன் 13

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மேலும் இரண்டு நீர் வடிகட்டி இயந்திரங்கள் அமைப்பதற்கு மத்திய சுகாதார அமைச்சு அனுமதியளித்துள்ளது என்று வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சிறுநீரக நோய்த் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. இந்த மாவட்டங்களில் அதிக தாக்கம் கூடிய பிரதேசங்களான வவுனியா தெற்கு , வெலி ஓயா ஆகிய பிரதேசங்களில் நீர்வடிகட்டி இயந்திரங்கள் அமைக்கப்பட்டன. அதேபோன்று இதே மாவட்டங்களில் அடுத்த தாக்கம் உள்ள பிரதேசங்களான வவுனியா செட்டிகுளம், முல்லைத்தீவு மாவட்டம் - மல்லாவி ஆகிய இடங்களில் மேலும் இரண்டு நீர் வடிகட்டி இயந்திரங்கள் அமைப்பதற்கு மத்திய சுகாதார அமைச்சு அனுமதியளித்துள்ளது.

இதற்காக தலா 25 மில்லியன் ரூபா வீதம் 50 மில்லியன் ரூபா அனுமதிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின் பணிகள் இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்கு முன்பு ஆரம்பிக்கப்படும்.

இந்த மாவட்டத்தில் அதிகரிக்கும் சிறு நீரக நோய்த் தாக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் திட்டத்தின் கீழ் இவை முன்னெடுக்கப்படுகின்றன -என்றார்.

(ற-ஐ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பாஷையூர் அந்தோனியார்

## ஆலயப் பெருவிழா சிறப்பிதழ்

## 13.06.2016



### பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வரலாறு


164 வருட சிறப்புமிக்க பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயமானது அதன் வருடாந்த திருவிழாவை கொண்டாட ஆயத்த மாகும் இவ்வேளையில், பங்குத்தந்தை அருட்திரு ரோய் பேடினன்ட் அடிகளாருக்கும், உதவிப் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும், செபங்களையும் கூறி நிற்கின்றேன். மேலும் அதன் மகத்தான சிறப்புக்களில் ஒரு சிலவற்றை பகிர்ந்து கொள்கின்றேன். பாஷையூர் பங்கானது 1850ஆம் ஆண்டிலிருந்து தனிப் பங்காக செயற்பட்டு வருகின்றது. காலத்துக்குக்காலம் அர்ப்பணமிக்க பங்குதந்தையரின் மேற் பார்வையிலும் ஆர்வமிக்க பங்கு பொதுச்சபை உறுப்பினர்களின் பங்களிப்புடனும் சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளது. கடல்வளம், மொழிவளம், கலைவளம் கொழிக்கும் பாஷையூர்ப் பங்கானது யாழ்ப்பாண மாநகரின் ஓர் ஆசீர்வாதம் நிரம்பிய ஒரு சொத்தாகும். விளையாட்டுத் துறையிலும் சரி, கலைத்துறையிலும் சரி, கல்வித் துறையிலும் சரி நற்பிரசைகளை உருவாக்கி ஊருக்கும் உலகிற்கும் பெருமை தேடித் தருவது இவ்வூரின் தனிச் சிறப்பாகும்.

1844, 1845ஆம் ஆண்டுகளில் தியான சபை (ORATORIAN) குரு அருட்திரு கபிரியேல் ஜோகின் அடிகளாரால் ஆரம்பக் கோயில் கல்லால் கட்டப்பட்டது. இருப்பினும் இக்கோயில் இதற்கு முன்னைய காலத்தில் கிடுகுகளால் கட்டப்பட்டதாகவும் கருதப்படுகின்றது. 1906ஆம் ஆண்டு இக்கோவில் அருட்திரு கௌதியர் அடிகளாரால் புதிய பரிணாம வளர்ச்சி பெற்றது. பழைய கோவில் இடிக்கப்பட்டு ஒரு புதிய கோவில் கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து அருட்தந்தை விக்டர் டெஸ்லான்ஸ் அடிகளாரின் விசேட பங்களிப்பும் இக்கோவிலுக்குக் கிடைத்தது. 1911ஆம் ஆண்டுகளில் விசாலமான 106×38 அளவு கொண்ட யன்னல்கள் கோவிலின் மேல் பக்கத்திலும், இருமருங்கிலுமுள்ள சாலைகளும் (விராண்டாக்களும்) கட்டிமுடிக்கப்பட்டன. அருட்திரு பவுறில் அடிகளாரின் ஆன்ம தாகத்தில் 1918ஆம் ஆண்டு பெல்ஜிய நாட்டிலிருந்து பெறப்பட்ட உயிரோட்டமுள்ள சிலுவைப் பாதைப் படங்கள் நிறுவப்பட்டன. எமது கோவிலின் 100ஆவது வருட நினைவுச் சின்னமாகிய சிங்காரத்தேர் 1950ஆம் ஆண்டிலிருந்து வெகுவிமரிசையாகப் பவனி வருகின்றது.

கோவில் திருவிழாவையொட்டி சிறப்பான பல அம்சங்கள் நடை பெறுவது வழமை. ஆனி முதலாம் திகதி கொடியேற்றம் இடம் பெறும். 3ஆம் திகதி ஊரின் துறைமுக வாயிலில் கடல் அந்தோனியார் என்று அழைக்கப்படும் சுருவத்தின் அண்டை சென்று வழிபாடு நடத்துவது தனிச்சிறப்பாகும். 4ஆம் திகதி யிலிருந்து நவநாள்கள் தொடர்ச்சியாக சிறப்பு மறையுரைகள் மூலம் நடைபெறும்.

13ஆம் திகதி காலையில் திருவிழா திருப்பலி ஆயரின் தலைமையில் நடைபெறும். இன்று மாலை திருத்தேர் பவனி நடைபெறும். சக வீதிகளும் அழகாக அலங்கரிக்கப்பட்டு வர்ண மின் விளக்குகளால் சோடனை செய்யப்பட்டிருப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். இவ்வரிய காட்சியை காண்பதற்கும், ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கும், புனித அந்தோனியாரின் பரிந்து பேசுதலை பெறுவதற்கும் இனம், மதம், மொழி பேதமின்றி மக்கள் ஒன்று கூடுவர். கேட்டவருக்கு கேட்ட வரம் அளிக்கும் புதுமை வள்ளல், கோடி அற்புதர், நாவழியா வரத்தர் புனிதர் அந்தோனியாரின் ஆசீர்பெற மக்கள் வெள்ளம் ஆனி மாதம் முழுவதும் பாஷையூரை மக்கள் வெள்ளமாகவே காட்சியளிக்க வைக்கும். பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் திருவிழாக் காலங்களில் மாத்திரமல்லாமல் தினசரி விஷேடமாக செவ்வாய்க்கிழமைகளில் இக்கோவிலை தரிசித்து புனித அந்தோனியாரின் பரிந்து பேசுதலால் ஆன்ம உள சுகம் பெறுவது அன்றாடம் காணும் காட்சியாகும். இத்திருவிழாவானது பாஷையூர் மக்கள் அனைவரையும் ஒன்று படுத்தும் ஓர் அழகான சந்தர்ப்பமாகும். இத்திருவிழாவிற்காக வெளிநாடுகளில் பணிபுரியும் பங்கு மக்களும், இலங்கை யின் ஏனைய பாகங்களில் பணிபுரி யும் ஊர்மக்களும், பாஷையூர் பங்கு மக்களும் ஒன்றாக கூடுவர்.

இவ்வரலாற்று சிறப்புமிக்க புனித அந்தோனியார் அருளைப்பெற உங்கள் அனை வரையும் திரு விழாவிற்கு அழைக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஷையூர் அந்தோனியார் ஆலயப் பெருவிழா சிறப்பிதழ் - 13.06.2016



## கோடி அற்புதரின் பெருவிழா

பதுவைப் புனிதரின், கோடி அற்புதரின், நாவழியா தூய அந்தோனி யாரின் விண்ணக பிறப்பு விழாவை பெருவிழாவாக கொண்டாட அவர் பதி நாடிவரும் பக்தர்கள் அனைவருக்கும் இறை ஆசீர் நிறைந்த வாழ்த்துக்களும் செபங்களும் உரித்தாகுக.

பாஷையூர் மண் கலை பண்பாட்டு வளங்களுக்கும், தூய அந்தோனியாரின் பெயர்கொண்ட பிரமாண்டமான ஆலயத்திற்கும் சுவை மிக்க கடலுணவுக்கும் சிறப்பான மண். இக்கிராமத்தை வளப் படுத்தி அழகுபடுத்திய முன்னை நாள் பங்குத் தந்தையர்களை மகிழ் வுடன் நினைக்கின்றோம். சிறப்பாக பிரான்ஸ் மண்ணில் பிறந்து யாழ் மண்ணுக்காக தன்னை அர்ப்பணித்து பாஷையூர் ஆலயத்தின் புதுத் தோற்றத்திற்கும் பங்கு மனைக்கும் அழகிய உருக்கொடுத்து எம்மவரின் சிறகுவலைத் தொழிலை அறிமுகம் செய்து வைத்து இன்றும் எம் மக்களின் மனங்களில் மட்டுமல்லாது ஆலயத்தினுள்ளே உறங்கிக்கொண்டு இருக்கும் எம் பாசத் தந்தை விக்ரர் டெலான் அடிகளாரைப் பெருமையுடன் நினைவு கூருகின் றோம். ஆலயத்தையும் மக்கள் மனங்களை யும் புதுப்பொலிவுடன் வடிவமைத்து பெருந் தகை இவர். இப்பெருவிழாவில் எமது யாழ். ஆயர் அவர்களை உள்ளம் பெருக வரவேற் கின்றோம். இவரது பணிகள் புத்தொளிபெற வாழ்த்துகின்றோம். எம் மறை மாவட்டத்தைப் புதுப்பொலிவடையச் செய்யும் இவரது இவ் இனிய முயற்சிகளுக்கு எம் பாதுகாவலர் தூய அந்தோனியாரின் பரிந்துரை என்றும் உடனிருப்பதாக.

இப்பதி நாடிவரும் அனைவருக்கும் அள்ளி வழங்கும் கோடி அற்புதரின் பரிந்துரையும் இறை ஆசீரும் என்றும் இருப்பதாக இத்திருவிழா திறம்பட உழைத்த அனைவருக்கும் சிறப்பான நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

உதயன் பத்திரிகை நிறுவனத்தினரையும் வாழ்த்துகின்றோம்.

தோழமையில். **அருள்பணி சி.லீயோ ஆம்ஸ்ரோங்**
பங்குத்தந்தை - பாஷையூர்.

யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt)Ltd

P. ஜெய்சங்கர்

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக,கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ் பெற்ற சோதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:
384 A, நாவலர் வீதி,
(கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்)
தொலைபேசி: 021 221 7944
கொழும்பு முகவரி:
19,1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி.
தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208
(சி. 22235)
(12.18)

SOFT VIEW COMPUTER CENTER
கணினி வகுப்புக்கள் புதிய வழி
முறைகளுடன் ஆங்கிலம்,
சிங்களம் இரவு நேரவகுப்புகளும்
நடைபெறுகின்றன.
254, Main Street, Jaffna.
Colinleselly@gmail.com
T.P. 021 222 4885, 077 905 3545
யாழ். திருமறைக் கலாமன்றம் அருகில்

SINTHU ELECTRICAL
Dealers in electrical , electronic And hardware Items.
360/7, Main street,Jaffna. 021 221 9059

J. முகமட் இன் சாப்
உணவகம்
43, செபஸ்ரியன் வீதி,பாஷையூர்.

Nitin Studio
Computer Designing,
Album Making,
Lamination Frame,
Passport Photo & All Function
Photo & Video Graphy
No.03, Beach Road, Eachchamoddai,Jaffna.
T.P 077 644 1614

GLOBAL HARDWARES
கட்டடப் பொருள்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
இல.390, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

மறீச் கூல்பார்
MARISH
COOLBAR
853, கடற்கரை வீதி,
பாஷையூர்.யாழ்ப்பாணம்.

New Jal Electronics
நியூ யாழ் எலெக்ரோனிக்ஸ்
Radio,T.V,video, Deck, Electronic Equipments Repirs
ஈச்சமோட்டை வீதி,
வீச் றோட் யாழ்ப்பாணம்.
T.P: 077 302 7618

துரை பல்பொருள் வாணிபம்
கடற்தொழிலுக்குத் தேவையான
அனைத்தும் பொருள்களையும்
சில்லறையாகவும் மொத்தமாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
இல. 851, கடற்கரை வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
தொடர்பு: 076 669 5259
077 992 7756

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஷையூர் அந்தோனியார் ஆலயப் பெருவிழா சிறப்பிதழ் - 13.06.2016


## டோனிகா
நகைத் தொழிலகம்
நகை வியாபாரிகள்



நம்பிக்கை, நாணயம்,
நயமான சேவை

82, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

தொடர்பு:
077 888 6191

## முருகானந்தா வைத்திய நிலையம்
(சித்த வைத்திய நிலையம்)



இல.37, புங்கன்குளம் வீதி,
பாசையூர்.

## எறிக் எலக்ரிக்கல் & ஹாட்வெயார்

அனைத்து வகையான வீட்டு மின் இணைப்பு
சாதனங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.



Email- venthan17@yahoo.com

Mobile : 077 1757407
075 9757407
Tel : 021 7200724

#93, Eachchamoddai Road,
Jaffna.

P.Elaventhan
Proprietor

## குமார் பேக் ஹவுஸ்

பாண், பணிஸ் வகைகள், கேக் வகைகள்,
பிஸ்கற் வகைகள், பிறந்தநாள் நிகழ்வு
விழாக்களுக்கான கேக் வகைகள், மிக்ஷர்,
குளிர்பான வகைகள் ஓடருக்குச் செய்து
தரப்படும்



சென். செபஸ்தியான் வீதி, பாஷையூர்.

## சுமதி பல்பொருள் விற்பனை நிலையம்

தரமான நிர்மலா ஹார்வார்
வலைகள்
(யோயம்புத்தூர நீல வலைகள்)
உட்பட ஏனைய சகல கடற்றொழில்
உபகரணங்களையும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



இல. 843, கடற்கரை வீதி, பாஷையூர்,
யாழ்ப்பாணம்.
T.P: 077 549 0359, 077 658 8624

## கிருபா லேணர்ஸ்
Regd.No.: DS/589

இரவு நேர பயிற்சி
நடைபெறுகின்றது

அரச அங்கீகாரம் பெற்ற
A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- அரச, தனியார், ஊழியர்கள் சனி, ஞாயிறு உட்பட தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சிகளை மேற்கொள்ள முடியும்.
- எமது கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சிகள் நடைபெறும்.
- மும்மொழிகளிலும் ஆண், பெண் இருபாலாருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தவணை முறையில் கட்டணம் செலுத்தமுடியும்



இல. 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 4353, 021 492 3200, 077 722 5292

| பருத்தித்துறை | சாவகச்சேரி | நெல்லியடி | வவுனியா. |
|---|---|---|---|
| 021 4923201 | 021 492 3202 | 021 300 6550 | 024 222 777 |
| 071 454 6958 | 021227 0700 | 071 454 6957 | 077 710 0444 |
| | கிளிநொச்சி | விசுவமடு | 94,பிரதான வீதி, மன்னார். |
| 2022 | 021 228 5505 | 021 320 1515 | 023 225 1656 |
| 071 454 6956 | 071 454 6955 | 071 454 6955 | 077 847 2732 |

வில்லையடி ஸ்ரீ நாகபூசணி அம்பாள்

## கச்சான் பிஸ்கட்
J/DS/BR/750



கச்சான் பிஸ்கட் தயாரிப்பகம்

இல.76/5, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.
No.76/5, Eachchamoddai Road, Jaffna, Sri Lanka.
T.P:077 312 6909


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஷையூர் அந்தோனியார் ஆலயப் பெருவிழா சிறப்பிதழ் - 13.06.2016



## NISHANANTHAA Jewellery

## நிஷானந்தா ஜுவல்லறி

எழில் பொங்கும் தரமான தங்க நகைகளை யாழ். நகரில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

*Dealers in 22Ct, Gold, Jewelleries Gems & Jewellers*

51 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். KASTHURIYAR ROAD, JAFFNA. TEL: 021 222 7985

## ST.JOSEPH MOTORS TVS



ஓட்டோ மற்றும் உதிரிப்பாக விற்பனையில் அதிகாரமளிக்கப்பட்ட TVS முகவர்

இல.360/1,
பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.
077 361 8100

## DIPLOMA IN SPOKEN ENGLISH

### புதிய பிரிவு ஆரம்பம்

18.06.2016 மாலை 3 மணி
(சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 3.00 - 5.30 வரை இடம்பெறும்)

வடமாகாணத்தின் தலைசிறந்த ஆங்கிலக் கல்லூரி
(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

## E-CITY College of English

City & Guilds

இல-372D, முதலாவது மாடி, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
0212217106, 0773400418, 0774924166, 0770610271



## சிற்றி ஷூ பலஸ்

*Bata DSI*



No.10, New Market, Hospital Road, Jaffna.

இல.10, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## Trainer Training (Teacher Training) Diploma

நீங்களும் ஆங்கில ஆசிரியராகலாம்

- ஆங்கிலத்தினை அடிப்படையிலிருந்து கற்று ஆங்கில ஆசிரியராக விரும்புபவர்களுக்கும்
- ஆங்கிலத்தினை முழுமையாக கற்க விரும்புபவர்களுக்கும்
- பல்கலைக்குத் தெரிவான மாணவர்களுக்கும்
- English Medium மாணவர்களுக்கும்
- ஆங்கில அறிவினை மேலும் விருத்தி செய்ய விரும்புபவர் களுக்குமானது.

*அனைத்தும் அடிப்படையிலிருந்து*

- The Structure of Language and oral Situational approaches
- Modern approaches/ Psychology/ Leadership/ Personality development/ Teaching practice

Stage - I Stage - II Final Stage - (StageIII)

### Spoken English (160 hrs)

100% Practical Class on the Spot Training.
Indoor & Outdoor learning
Speaking/ Listening/ Reading/ Writing

### Diploma in English (240 hrs)

Reading Writing Listening Speaking

### Spoken Sinhala (160 hrs)

100% பேச்சுப்பயிற்சி வகுப்பு எழுதுதல் வாசித்தல் பயிற்சி

IELTS Lifeskill 15 000/= மட்டுமே
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் 100% சித்தியடைய கற்பிக்கப்படுகிறது.

New batches start on 20.06.2016 Week day
18.06.2016 Weekend
9.00am / 1.30pm / 3.00pm

## ELAS
English Language Adventure School
Sirpon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
T.P 021 221 2410, 076 697 3040

## நியூ நெல்சன் சாரதிப் பாடசாலை



## New Nelson Driving School

89, Kandy Road, Chundukuli, Jaffna. 021 222 4527, 077 358 1916, 077 790 6064



அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பாடசாலை
Govt.Approved A Grade Driving School

- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள் வழங்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவமிக்க சாரதிகளால் சிறந்த முறையில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புக்கள் நடைபெறும்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- தவணை முறையில் கட்டணங்கள்.
- குறைந்த கட்டணத்தில் விரைவாக சர்வதேச லைசென்ஸ். (International License) பெற்றுக்கொடுக்கப்படும்.

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள்

- தேசிய அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி)
- திருமண அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி)
- மருத்துவச் சான்றிதழ்
- சாரதி அனுமதிப்பத்திரம்



எமது கிளை நிறுவனங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 127, Point Pedro Road, Nelliyadi, Karaveddy 021 2261393/ 077 71113382 | Bus Stand, Chunnakam 021 2243030/ 077 7150097 | Main Road, Valvettithurai 021 2261606/ 077 5573711 | Kali Kovil Road, Chavakacheri 021 2271313/ 077 7611686 | Seerani Junction, sandilipay. 0212256955/0777942312 0717358440 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியகுளத்தில் மீள்குடியமர வனஇலாகாவினர் இடையூறு

## பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூன் 13
வவுனியா ஆசியகுளம் பகுதியில் மீளக் குடியமரச் சென்றவர்களை வன இலாகா திணைக்களத்தினர் விரட்டியுள்ளனர் என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டினர்.

"ஆசியகுளம் கிராமத் தில் 2005 ஆம் ஆண்டு சுமார் ஆயிரம் குடும்பங்கள் வசித்து வந்துள்ளன. 2007ஆம் ஆண்டு போர் காரணமாக அந்தக் குடும்பங்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்தன."

சம்பவம் வவுனியா மயிலங்குளம் பிரதான வீதியிலிருக்கும் ஆசிகுளம் பகுதியில் தொடர்ச்சியாக பல தடவைகள் இடம் பெற்றுள்ளது என் றும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.
வவுனியா தமிழ் பிரதேச சபைக் குட்பட்ட ஆசியகுளம் கிராமத்தில் 2005ஆம் ஆண்டு சுமார் ஆயிரம் குடும்பங்கள் வசித்து வந்தன. 2007ஆம் ஆண்டு போர் காரணமாக அந்தக் குடும்பங்கள் அங்கிருந்து இடம் பெயர்ந்தன.
போர் முடிந்து 7 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் தற்போதுள்ள 600 குடும்பங்களை அங்கு மீள்குடியமர விடாது வன இலாகாத் திணைக்களத்தினர் தடை ஏற்படுத்தி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.
"2005ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் குடியமர்ந்தோம். இருப்பிடத்துக்கான ஆவணங்களைப் பெறுவதற்கு முன்பாகவே 2007 ஆம் ஆண்டு போர் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்தோம்.
தற்போது வந்து எமது இருப்பிடங்களை இனங்கண்டு கடந்த 6 மாதங்களாகத் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டோம். ஆயினும் வனஇலாகாத் திணைக்கள அதிகாரிகள் அந்த இடத்தில் குடியமர அனுமதி இல்லை என்று தெரிவித்து எம்மை விரட்டுகின்றனர்.
"ஆனால், வேறு ஒருவர் அதே இடத்தில் பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன் பெரிய கிணற்றைத் தோண்டி காணித் துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்றார். அவருக்கு வன இலகா அதிகாரிகள் எந்தத் தடையும் விதிக்கவில்லை.
இந்தப் பகுதிக்கு முன்பாகவுள்ள காணித் துண்டுகள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 15 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. சிங்கள கிராம எல்லையிலுள்ளதால் பெரும்பான்மை இனத்தவர்கள் ஆதிக்கம் செலுத்த முற்படுகின்றனர்.
எங்களுடைய மக்கள் துப்புரவுப் பணிகளை மேற் கொண்டபோது 7 பேர் வன இலாகா அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். வனஇலாகாத் திணைக்களத்தினர் தொடர்ந்து எம்மை அச்சுறுத்தி வருகின்றனர்" - என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.
தமக்கான இருப்பிடங்களைப் பெற்றுத்தர அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.
இது தொடர்பாக வன இலாகா அதிகாரியின் கருத்தை அறிய அவரைத்தொடர்புகொள்ளமுயன்ற போதும், அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை.
(ற-ஐ-21)

# திருமணம் நடந்த வீடொன்றில் மயக்க மருந்து விசிறி திருட்டு

## 30 பவுண் நகைகள் பறிபோயின மட்டுவிலில் திருடர்கள் கைவரிசை

சாவகச்சேரி, ஜூன் 13
ஒரு வாரத்துக்கு முன்னர் திருமணம் இடம் பெற்ற வீடொன்றில் மயக்க மருந்து விசிறி நகைகள் திருடப்பட்டுள்ளன. 15 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் (30 பவுண்), 60 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்துக்கு அருகில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது.
மணப் பெண்ணின் வீட்டுக்குச் சென்று திரும்பிய புது மணத் தம்பதிகள் இரவு படுக்கைக்குச் சென்ற பின்னர், மறுநாள் காலையில் நீண்ட நேரத்தின் பின்னரே விழித்தனர். அங்கு வைக்கப்பட்டிருந்த 30 பவுண் தங்க நகைகளும், 60 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளதை அதன் பின்னரே அவதானித்தனர்.
மயக்க மருந்து விசிறி உட்புகுந்துள்ள திருடர்கள் வீட்டில் அனைத்து இடங்களிலும் தேடுதல் நடத்தி, நகைகளைத் திருடியுள்ளனர் என்று சந்தேகிக்கப்படுகின்றது.
இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ஐ-9)

### தொழில் பயிற்சிகளுக்கு நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 13
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையானது பண்டத்தரிப்பு தொழிற்பயிற்சி நிலையத்தில் முழு நேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், அலுமினியப் பொருத்துநர், நீர்க் குழாய் பொருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர் ஆகிய கற்கை நெறிகளுக்கான நேர்முகத் தேர்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பண்டத்தரிப்பு பிரான்பற்று முல்லையடி வைரவர் கோயிலடியில் நடைபெறவுள்ளது.
இந்தக் கற்கை நெறிகளை கற்க விரும்புவோர், நேர்முகத்தேர்வுக்கு சுயவிவரக் கோவை, தேசிய அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ் என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-ரி)

### சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வீதி நாடகங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 13
உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு "மக்களே சிந்தித்து உணர்ந்து செயற்படுங்கள்" எனும் தலைப்பில் வலி.மேற்கில் 10 இடங்களில் வீதி நாடகங்கள் நடத்தப்பட்டன.
வலி.மேற்கு பிரதேச சபையும், வேள்ட் விசன் நிறுவனமும் இணைந்து இந்த வீதி நாடகங்களை புத்தாக்க அரங்க மாணவர்களின் உதவியுடன் நடத்தின.
இந்த வீதிநாடகங்கள் அராலி, வட்டுக்கோட்டை, சுழிபுரம், சங்கானை உள்ளிட்ட 10 இடங்களில் அரங்கேற்றப்பட்டன.
இதில் திண்மக் கழிவு முகாமைத்துவம், பசுமைக்கான மரம் நடுதல், நிலத்தடி நீர் பாதுகாப்பு, குழாய்க் கிணறு, வளி, நீர், நிலம், மாசு தொடர்பான விடயங்களை முன்னிறுத்திச் செயற்படுத்தப்பட்டுள்ளன.
இதேவேளை - உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வலி. மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட 87 சனசமூக நிலையங்களுக்கு, 300 பயன் தரு மரங்களை வேள்ட் விசன் ரிவோஸ் 111 முகாமையாளர் எவ்.அலெக்ஸ்ரோச் வழங்கியுள்ளார். (ற-ஐ-50)

### பொது சுகாதார பரிசோதகர் நியமிப்பு

சாவகச்சேரி, ஜூன் 13
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
மட்டுவில் பிரதேசத்தில் காணப்பட்ட வெற்றிடத்துக்கு நியமிக்கப்பட்டுள்ள குறித்த பரிசோதகர் இன்று தொடக்கம் கடமையாற்றவுள்ளார். (ற-ஐ-9)

### மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கு மூன்று நாள் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 13
யாழ்ப்பாண மாவட்டத்தில் காணி சம்பந்தமான விசேட மத்தியஸ்த சபைக்கு மாவட்ட மட்டத்தில் தெரிவான 27 பேருக்கு விசேட மத்தியஸ்தகர்களுக்கான சட்ட மற்றும் நிர்வாக விடயம் தொடர்பான 3 நாள் பயிற்சி இன்று திங்கட்கிழமை தொடக்கம் நாளை மறுதினம் புதன்கிழமை வரை இடம்பெறவுள்ளது என்று மத்தியஸ்த சபை ஆணைக் குழு செயலாளர் டி.எம்.கருணாரத்ன அறிவித்துள்ளார்.
இந்தப் பயிற்சி காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மாவட்ட முகாமைத்துவ திறன்அபிவிருத்திபயிற்சிநிலையத்தில் (பழைய பூங்காவீதி) இடம் பெறும்.
மேற்படி விசேட மத்தியஸ்தர்களாக அரச அலுவலர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பின், பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைய கடமை லீவு பெற்றுக்கொள்ளலாம் எனவும் செயலாளர் டி.எம். கருணாரத்ன அறிவித்துள்ளார். (ற-ஐ-50)

### வருடாந்த பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 13
நாவற்குழி - கேரதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, தொடர்ந்து 6 நாள்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளது என்று பங்குத்தந்தை அறிவித்துள்ளார்.
திருவிழா திருப்பலி காலை 7 மணிக்கு யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் தலைமையில் கூட்டுத் திருப்பலியும், திருப்பலி முடிவில் சொரூப சுற்று பிரகாரமும், புனித ஆசீர் வாதமும் நடைபெறவுள்ளன. (ற-ஐ-ரி)

# முல்லைத்தீவில் இன்னமும் 17 ஆயிரம் வீடுகள் தேவை

## கடந்த 7 ஆண்டுகளில் 20 ஆயிரம் வீடுகள் அமைப்பு

முல்லைத்தீவு, ஜூன் 13
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 7 ஆண்டுகளில் 20 ஆயிரத்து 635 புதிய வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளன என்றும் - இன்னும் 17 ஆயிரத்து 539 புதிய வீடுகள் தேவையாக உள்ளன என்றும் - மாவட்டச் செயலகத்தின் புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
போரின் பின்னர் கடந்த 7 ஆண்டுகளில் இந்திய வீட்டுத் திட்டம், அரச மற்றும் அரச சார் பற்ற நிறுவனங்களால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 ஆயிரத்து 635 புதிய வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.
அத்துடன் போரால் சேதங்களுக்கு உள்ளான 3 ஆயிரத்து 649 வீடுகள் திருத்தப்பட்டுள்ளன.
இந்திய வீட்டுத்திட்டத்தின் ஊடாக இதுவரை 12 ஆயிரத்து 624 புதிய வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. 625 வீடுகள் திருத்தப்பட்டுள்ளன. அரச மற்றும் அரச சார்பற்ற வீட்டுத் திட் டங்களின் ஊடாக 8 ஆயிரத்து 11 புதிய வீட்டுகள் அமைக்கப் பட்டுள்ளன. 3 ஆயிரத்து 24 வீடுகள் திருத்தப்பட்டுள்ளன.
அதேவேளை, 14 ஆயிரத்து 904 புதிய வீடுகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவையாகவுள்ளன. 2 ஆயிரத்து 635 வீடுகள் திருத்த வேண்டிய நிலையில் உள்ளன என்று புள்ளி விவரங்களில் குறிப்பிடப்பட் டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கரை துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கே அதிகமான வீடுகள் தேவைப்படுகின்றன.
தற்போது மீள் குடியேற்ற அமைச்சால் ஆயிரத்து 35 புதிய வீடுகள் அமைக்கப் படவுள்ளன என்றும், 170 வீடுகள் திருத் தப்பட்டுள்ளன என்றும் புள்ளிவிவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ற-ஐ-21,ரி7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒளித்துப் பிடிக்கும் வெவ்வேறு விளையாட்டுகள் வேண்டாமே!

மைத்திரிபால சிறிசேன ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து ஆண்டு ஒன்றும், மாதங்கள் ஐந்தும் உன்னைப் பார் என்னைப் பார் என்று கடந்து எகிறிவிட்டன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய அரசை அமைத்து ஒன்பது மாதங்கள் கரைந்து விட்டன.

இரண்டு தரப்புக்களும் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாக்குப் பிச்சையினாலேயே ஆட்சிக் கட்டில்களில் அமர்ந்திருக்கின்றன.

ஆனால், அத்தரப்புக்களால் வர்ணம் பூசி மினுமினுக்க வைக்கப்பட்ட, வாக்களித்த படியான நல்லிணக்க நடவடிக்கைகள் எதுவும் திருப்தி தருவனவாக இல்லை.

இதனைப் பெரும் ஆதங்கத்துடன் வெளிப்படுத்தி உள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், பழுத்த தமிழ் அரசியல் தலைவரும், நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன்.

✦ அரசின் செயற்பாடுகளால், தமிழ் மக்கள் திருப்தி கொள்ளத்தக்க நிலமை இல்லை.

✦ எவ்வளவோ, பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்களின் காணிகள் இன்னமும் (முழுமையான அளவில்) விடுவிக்கப்படவில்லை.

அவற்றுக்கான முடிவுகளையும் அவற்றை விடுவிப்பதற்கான செயற்பாடுகளையும் எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

மேலும் -

ஐக்கிய நாடுகள் சபையில், அதன் ஆணையாளரால் எதிர்வரும் 29 ஆம் திகதியன்று (இன்னமும் பதினாறு நாள்களில்) மூல அறிக்கையும், வருடம் முழுவதற்குமான அறிக்கையும் முன்வைக்கப் பட உள்ளதையும், தமிழ் மக்களின் தலைவர் அரசுக்கு நினைவூட்டி உள்ளார்.

✦ போர் முடிவுற்று ஏழு வருடங்கள் உருண்டோடிவிட்டன. வடக்கு - கிழக்கைச் சேர்ந்த மக்கள், இன்னமும் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

✦ தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் புதிய அரசு முழுக்க முழுக்க ஒளித்துப் பிடிக்கும் வெவ்வேறு வித்தியாசமான அணுகு முறைகளைக் கடைப்பிடிக்கிறது.

✦ ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து அடுத்த ஆண்டில் முழுமையான அறிக்கை முன்வைக்கப்படும்.

✦ வடக்கு - கிழக்கு நிலமை குறித்து அரசு முன்னேற்றத்தைக் காட்டி நல்லிணக்கத்தை உருவாக்க வேண்டும். அதற்கான முழுப் பொறுப்பும் நல்லாட்சி அரசுக்கே உண்டு.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் முழுமையான அறிக்கை அங்கு சமர்ப்பிக்கப்படும். அவ்வேளை, வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நிலமையில் அரசு முன்னேற்றத்தைக் காட்ட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இடித்து உரைத்துள்ளார்.

நல்லாட்சி அரசே! தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து புலுமாசுகாட்டி ஏமாற்ற நினைக்காதே. உள்ளார்ந்த அதி அக்கறையுடன் செயற்பட முனையாவிடில், மொத்தத்தில் நீ அனைத்துலக மட்டத்தில் மூக்குடைபடும் நிலை பருத்துப் பெருத்து மேலுயரும்.

நிலமைகளை நீயாகவே புரிந்து கொள்வதற்கான அரிய சந்தர்ப்பம் இது. அதனை உணர்ந்து கொண்டால் நாட்டுக்கும் நன்மை விளையும்.

# சுயநலம்மிக்க அரசியல்வாதிகளால் மக்களின் தலையில் சுமைகள்

சேரலாதன்

இலங்கை மக்களைப் பொறுத்தளவில் எதிர் வரும் நாள்கள் பொருளாதாரச் சுமைகள் நிறைந்தனவாகவே இருக்கப் போகின்றன.

அரசு பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளமையே இதற்கான காரணமாகும்.

அரசு அன்றாடச் செலவினங்களுக்கே பணமின்றித் திண்டாடுவதாக அரசுக்கு எதிரானவர்கள் ஏளனமாகக் கூறி வருகின்றனர். இதில் உண்மை இல்லாமலில்லை. ஆனால், இத்தகைய இக்கட்டான நிலை ஏற்படுவதற்கு எவர் காரணமாக இருந்தார்கள் என்பதை அவர்கள் ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நாட்டின் பொருளாதாரச் சீர்கேட்டுக்கு, தொடர்ந்து இடம்பெற்ற போரை ஒரு காரணமாக எப்போதுமே கூறிக்கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் போருக்கும் அதனால் ஏற்பட்ட இழப்புக்களுக்குமெனக் கணிசமான உதவிகள் உலக நாடுகளிலிருந்து கிடைத்தன, கிடைத்து வருகின்றன. முன்னைய ஆட்சியாளர்கள் இதய சுத்தியுடன், நேர்மையாக நடந்து கொண்டிருந்தால் நாட்டின் பொருளாதாரத்தில் இப்போது காணப்படுகின்ற பாதகமான நிலையைத் தவிர்த்திருக்க முடியும். ஆனால், போரைக் காரணம் காட்டிக்காட்டியே நாட்டின் பொருளாதாரத்தை உறிஞ்சி எடுத்த அரசியல்வாதிகள் நாட்டுப்பற்றை அறவே மாற்றி விட்டமை பெரும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்திவிட்டன.

போர் முடிந்த பின்னர், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டும் போரினால் இடம் பெயர்ந்தவர்களின் மீள்குடியமர்வுக்கும், புதிய அபிவிருத்தித் திட்டங்களை ஏற்படுத்திக்கொள்ளும் பொருட்டும் பெருமளவு வெளிநாட்டு நிதிகள் நாட்டில் வந்து குவிந்தன. அன்றைய ஜனாதிபதியே நிதி அமைச்சராகவும் இருந்த காரணத்தால் நிதி முழுவதும் அவரது பொறுப்பிலேயே இருந்தது. அவரது தம்பியார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பொறுப்பில் இருந்ததால் சகல நிதியும் அவருக்கூடாகவே செல்ல வேண்டிய இறுக்கமான நிலை கூடக் காணப்பட்டது.

இதனால் அரச நிதிக்கு என்ன நடக்கின்றது என்பதை அறிவதற்கு எவராலும் முடியவில்லை. அன்று நிலவிய சூழ்நிலையால் எவருமே இவை தொடர்பான கேள்வி கேட்பதற்கும் துணியவில்லை.

இன்று நாட்டுக்குப் பெரும் சுமைகளாக மாறி பெரியளவில் செலவினங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் அம்பாந்தோட்டையில் பல்லாயிரக்கணக்கான ரூபா நிதிச் செலவில் அமைக்கப்பட்ட மத்தள சர்வதேச விமான நிலையம், அம்பாந்தோட்டைத் துறைமுகம் ஆகியன பயனற்ற வகையில் தேடுவாரற்றுக் கிடக்கின்றன. இவற்றுக்கென வாங்கிய வெளிநாட்டுக் கடன்கள் முதலும், வட்டியுமாகச் சேர்ந்து நாட்டின் குடிமக்களின் தலைகளை நெரித்து வருகின்றன.

முன்னைய ஆட்சியாளர்கள் அரச நிதியை வரன்முறையற்ற வகையில் முறைகேடாகப் பயன்படுத்தினர். இவர்களால் நடத்தப்பட்ட விருந்துகளுக்கு அரச நிதி பெருமளவில் செலவிடப்பட்டுள்ளது. இவர்கள் தமது உள்நாட்டுப் பயணங்களுக்கு விமானங்களை அதிகளவில் பயன்படுத்தியதால் பெரும் நிதி விரயம் ஏற்பட்டது. இதைவிட இவர்கள் அடிக்கடி வெளிநாடுகளுக்கும் சென்று வந்தனர். இதற்கெனத் தனி விமானத்தையே இவர்கள் பயன்படுத்தினார்கள். வெளிநாடுகளில் தங்குவதற்கு ஆடம்பர விடுதிகள் ஒழுங்கு செய்யப்பட்டன. இவற்றுக்கான கட்டணம் மிகவும் அதிகமானது. இவற்றையெல்லாம் அரசே செலுத்தி வந்தது.

2014 ஆம் ஆண்டு பிரான்சில் இடம்பெற்ற வெசாக் கொண்டாட்டங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த வின் துணைவியார் கலந்து கொண்டார். இதற்காக அவர் ஆடம்பர விடுதியில் நான்கு நாள்கள் தங்கியிருந்தார். இதற்கான நிலுவை கட்டணமாக சுமார் 26 லட்சம் ரூபாவைச் செலுத்துமாறு விடுதி நிர்வாகத்தினர் தற்போதைய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இத்தகைய செலவுகள் யாவும் பொதுமக்களின் தலைகளில் தான் சுமத்தப்படுன்றன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் ஊழல் மற்றும் மோசடிகளால் பெருமளவு அரச நிதி ஏப்பம் விடப்பட்டுள்ளது. இவை வெளிநாட்டு வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் உண்டு.

இவற்றின் பெறுமதி பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில்தான் தற்போதைய அரசு நிதி நெருக்கடியைச் சாமாளிக்கும் முகமாக பல்வேறு வரி உயர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது . என்னதான் நல்லாட்சி இடம்பெற்றாலும், தமது வயிற்றில் அடிப்பதை மக்கள் ஒரு போதுமே ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். வாகன இறக்குமதிக்கான வரி அதிகரிப்பு சாதாரண மக்கள் வாகனங்களின் பக்கம் தலை வைத்துப்படுக்கக்கூட முடியாத தொரு நிலையை ஏற்படுத்தி விட்டது. மேலும் வற்வரியின் அதிகரிப்பும் மக்களைப் பாதித்துள்ளது. போக்குவரத்துக் கட்டணங்களும் அதிகரிக்கப்படுவதற்கான அறிகுறிகள் காணப் படுகின்றன.

இதைவிட இராணுவ முகாமொன்றின் ஆயுதக் களஞ்சியத்தில் ஏற்பட்ட வெடிப்பு அரசுக்கு பெரும் நெருக்கடியை உருவாக்கிவிட்டது. ஆயுதக் களஞ்சியத்தின் அழிவு ஒருபுறமிருக்க பொதுமக்களுக்கு ஏற்பட்ட சேதங்களை ஈடுசெய்ய வேண்டிய பொறுப்பும் அரசையே சாரும். இதற்கும் அதிக நிதி செலவாகப் போகின்றது.

இவை எல்லாவற்றாலும் அரசை விட சாதாரண பொதுமக்கள் தான் அதிகளவில் பாதிக்கப் படப் போகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களமூலம்:
உபுல் யோசெப் பெர்னாண்டோ
தமிழில்:வீ.எஸ்.ரீ

# காய்க்கும் மரத்துக்கே கல்லெறிபடுவதுண்டு

சிறிமாவோவின் தலைமையிலான அரசை முன்னின்று வழிநடத்திய பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினால் சிறிமாவோ அரசை வீழ்த்தி விடலாமென 1976இல் என்.எம்.பெரேராவும் ஜே.ஆரும் திட்டமிட்டனர்.

இதுபோன்று சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் அரசின் மூளையாகச் செயற்பட்ட மங்கள சமர வீரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றி சந்திரிகாவின் ஆட்சியைக் கவிழ்க்க ரணிலும், ஐ.தே.கட்சியின் மூத்த உறுப்பினர்களும் திட்டமிட்டனர், அதேபோன்று சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் அரசை நிர்வகித்துச் செல்ல சந்திரிகாவுக்கு பக்கபலமாய் செயற்பட்ட அமைச்சர்கள் எஸ்.பி.திஸா நாயக்க மற்றும் அனுருத்த ரத்வத்தை ஆகியோருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி அதன் மூலம் சுதந்திரக் கட்சி அரசைக் கவிழ்க்க ரணிலும், ஐ.தே. கட்சிக்காரர்களும் முயற்சித்தமை வரலாற்றின் பதிவுகள். எதிர்க்கட்சியினரது, ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானமும், இன்றைய நல்லாட்சி அரசைச் சுமுகமாக இயங்க வைப்பதில் ரவி, முக்கிய பங்கை ஆற்றுகிறார் என்பதனால் தான் கொண்டு வரப்பட்டதா?

இந்தி நடிகர் ஷாருகானது இலங்கைக்கான பயணத்தின்போது, அவர் மீது கடும் கோட்பாட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலின் பின்னணியில் ரவி கருணா நாயக்க இருந்தார் என சந்திரிகா அப் போது பகிரங்கமாகவே குற்றம் சாட்டியிருந்தார். தனது தலைமையிலான அரசுக்கு சர்வதேச ரீதியில் அவ மதிப்பு ஏற்படுத்தும் நோக்குடன் ரவி கருணா நாயக்க திட்டமிட்டுச் செயற்பட்டார் என்று சந்திரிகா குற்றம் சாட்டியிருந் தார். அதேபோன்று பிறிதொரு சந்தர்ப்பத்தில் பொய்யான குற்றச்சாட்டொன்றின் பேரில் ரவி கருணா நாயக்கவைக் கைது செய்வதற்கான உத்தரவையும்சந்திரிகா அரசு பிறப்பித்தது. அதற்கு முன்னர் எஸ்.பி.திஸநாயக்க சந்திரிகா அரசின் மிக முக்கியத்துவம் மிக்கவராகச் செயற்பட்ட வேளையில், ஒரு சமயம் ரவியின் வீட்டுக்கு மனிதத் தலையொன்றை அனுப்பி வைத்து ரவியை அச்சுறுத்த முனைந்தார். அதேபோன்று 2004 பொதுத் தேர்தல் சமயத்தில் விமல் வீரவன்ச தமது தரப்பினருடன் ரவியின் கட்சி அலுவலகத்தில் தமக்கெதிரான துண்டுப்பிரசுரங்கள் இருப்பதாகக் கூறி பொலிஸாருடன் சென்று ரவியைக் கைது செய்ய முயன்றார். அதன் பின்னர் மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் வெளிநாட்டுச் செலா வணி மோசடி புரிந்ததாகக் குற்றம் சாட்டி ரவிக்கு எதிராக மகிந்த அரசு வழக்குத் தாக்கல் செய்திருந்தது. இவை போன்ற பல தரப்பட்ட நெருக்கடிகளைச் சந்தித்த போதிலும் ரவி துணிச்சலுடன் அவற்றை முறியடிக்க முன்னின்று செயற்பட்டு வெற்றியும் கண்டார்.



> இலங்கை அரசியல் வரலாற்றில் எந்தவொரு அமைச்சருக்கும் எதிராக இரு தடவைகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்னெப்போதும் கொண்டு வரப்பட்டதில்லை. அந்த வகையில் ரவி கருணா நாயக்கவுக்கு எதிரான இந்த இரண்டாவது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டமை மகிந்த தரப்புக்குப் பெரும் தோல்வியாகும்.

ரவி கருணாநாயக்க, ஐ.தே.கட்சியின் தலைமையிலான அரசை அமைத்து விட வேண்டுமெனத் தீவிரம் காட்டிச் செயற்பட்டதன் காரணமாகவே சந்திரிகாவைப் போன்றே மகிந்தவும் கூட அரசியல் அரங்கில் ரவி கருணா நாயக்கவை எப்படியாவது ஓரங்கட்டிவிட வேண்டுமென்ற முனைப்பில் செயற்பட்டார்.

சந்திரிகா, எஸ்.பி.திஸநாயக்க ஆகியோர் அரசியல் ரீதியில் நலிவு கண்ட சந்தர்ப்பங்களில் தாம் ரவி கருணா நாயக்காவுக்குச் செய்த தீங்குகளை மறந்து ரவியின் உதவியை அரசியல் ரீதியில் பெற முயன்ற சமயங்களில், முன்னைய சம்பவங்களையெல்லாம் பெருந்தன்மையுடன் மறந்து அவர்களுடன் இணைந்து செயற்பட ரவி முன் வந்தமை எப்படியாவது ஐ.தே.கட்சி அரசொன்றை நிறுவும் கனவுடனேயே ஆகும்.

2010 ஜனாதிபதித் தேர்தலின்போது மகிந்தவுக்கு எதிராகப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் யோசனையை முதன் முதலில் முன்வைத்தவரே ரவி கருணாநாயக்கதான். அது விடயத்தில், முன்னர் தம்மைக் கடுமையாக விமர்சித்து வந்த மங்கள சமரவீரவையும் தம்முடன் இணைத்துக்கொண்டு, ரணிலுடன் இணைந்து சரத்பொன்சேகாவை மகிந்தவுக்கு எதிரான ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக்கியதில் ரவியின் பங்கு அளப்பரியது.

அதேபோன்று 2015 ஜனாதிபதித் தேர்தலிலும் மகிந்தவுக்கு எதிராகப் பொது வேட்பாளரொருவரை நிறுத்துவதற்கான யோசனைக்கு ரணிலை இணங்க வைக்கும் பொறுப்பை சந்திரிகா ரவிகருணாநாயக்கவிடமே ஒப்படைத்திருந்தார். ரவி அந்தப் பொறுப்பை சிறப்பாக நிறைவேற்றி தேர்தலில் மகிந்தவை மண் கவ்வ வைப்பதில் வெற்றி கண்டார். இலங்கை அரசியல் வரலாற்றில் எந்தவொரு அமைச்சருக்கும் எதிராக இரு தடவைகள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் முன்னெப்போதும் கொண்டு வரப்பட்டதில்லை. அந்த வகையில் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான இந்த இரண்டாவது நம்பிக்கையில்லாத் தீர் மா னம் நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டமை மகிந்த தரப்புக்குப் பெரும் தோல்வியாகும்.

## பஸ்நடத்துநரின் அட்டகாசத்தால் அவலப்படும் பயணிகள்

கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் யாழ். பஸ் நிலையத்தில் இருந்து நவாலி ஊடாக காரைநகர் செல்லும் 786 ஆம் இலக்க இ.போ.ச. பஸ்ஸில் பயணத்தை மேற்கொண்டேன். பஸ்ஸின் ஒரு பக்கத்தில் மூன்றுபேர் அமரக்கூடிய இருக்கைகளும் மறுபக்கத்தில் இரண்டுபேர் அமரக்கூடிய இருக்கைகளும் காணப்பட்டன. இதனால் நடைபாதையில் நின்று கொண்டு பயணம் செய்வது சிரமமான விளங்கியது. அதிலும் மாலை நேரம் என்பதால் பயணிகளின் தொகை அதிகளவில் காணப்பட்டது.

அன்று அந்த பஸ்ஸில் கடமை புரிந்த நடத்துநரின் அட்டகாசம் எல்லை மீறிப்போய்க் காணப்பட்டது.

அவர் பயணிகளை அதட்டியதுடன் அவர்களுடன் எரிந்து விழுந்து தனது கோபத்தை வெளிப்படுத்தினார். இதனால் நான் மட்டுமல்ல அந்த பஸ்ஸில் பயணத்தை மேற்கொண்ட பயணிகள் அனைவருமே வேதனையை அனுபவிக்க நேர்ந்தது.

சிலர் இந்த பஸ்ஸை விடத் தனியார் பஸ் எவ்வளவோ மேல் எனத் தமது வாய்க்குள் முணுமுணுத்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அரச ஊழியர்களையும் அந்த நடத்துநர் விடவில்லை.

ஏற்கனவே இந்த நடத்துநர் தொடர்பாகப் பலரும் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். தினமும் பெருமளவு பயணிகள் பயணம் செய்கின்ற அரச பஸ்ஸொன்றில் இவ்வாறான நடத்துநர் ஒருவர் பணியில் இருப்பது நல்லதல்ல. இவரால் தேவையில்லாத பிரச்சினைகளே எழப் போகின்றன.

ஆகவே காரைநகர் சாலை முகாமையாளர் இந்த நடத்துநர் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே இவரால் பாதிக்கப்படும் பயணிகளின் வேண்டுகோளாகும்.

த.பாலசரஸ்வதி
மாவடி


## ஈவிரக்கமில்லாத நடவடிக்கையால் நோயாளர்கள் படும்பாடு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் 24ஆம் வாட்டில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட எனது மனைவி கிளினிக் பரிசோதனைக்கு அழைக்கப்பட்டிருந்தார். எனவே குறிப்பிட்ட தினம் காலை 7 மணிக்கு மனைவியை எனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பழைய ஓ.பி.டி. கட்டடத்துக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களுக்கு அருகில் நிறுத்தி மனைவியை இறங்குமாறு கூறிக்கொண்டிருந்தேன். மனைவி ஒரு நடக்க முடியாத மூட்டு வாதத்தால் பாதிக்கப்பட்ட நோயாளி ஆவார். முழங்காலில் செயற்கை மூட்டு பொருத்த வேண்டும் என நிபுணர் ஆலோசனை வழங்கியிருந்தார். அவர் மோட்டார் சைக்கிளிலிருந்து இறங்கிக் கொண்டிருக்கும்போது இருவர் ஓடி வந்தார்கள். ஒருவர் பாதுகாப்பு சீருடை அணிந்திருந்தார். மற்றவர் சிவிலுடையில் நின்றார். இதற்குள் மோட்டார் சைக்கிள் கொண்டு வரக்கூடாது. உடனே வெளியே கொண்டு போகுமாறு கடுந்தொனியில் சத்தமிட்டார்கள். நான் நோயாளியை இறக்கிவிட்டு கிளினிக் நடைபெறும் இடத்தைக் கண்டுபிடித்துச் செல்லுமாறு கூறுவதற்குக்கூட அவகாசம் வழங்காது விரட்டினார்கள். எனது சொல் எதையும் கேட்கும் நிலையில் அவர்கள் இல்லை. ஏற்கனவே பல மோட்டார் சைக்கிள்கள் பழைய ஓ.பி.டிக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அவர்களை எவ்வாறு அனுமதித்தார்கள்? நான் மோட்டார் சைக்கிள் நிறுத்த முற்படவில்லை. நோயாளியை இறக்கிவிட்டுச் செல்லவே இருந்தேன்.

போதனா வைத்தியசாலையில் இடம்பெறுகின்ற பல விடயங்களைப் பற்றி அடிக்கடி உதயனில் பார்ப்பதுண்டு. பணிப்பாளர் அவர்கள் இவை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்கள். எனக்கு நடந்ததையும் பணிப்பாளருக்கு உதயன் மூலம் தெரியப்படுத்துகிறேன்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் பாதுகாக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேடையில் பாடகி சுட்டுக் கொலை

வொஷிங்டன், ஜூன் 13
அமெரிக்காவில் 27 வயதான பாடகி ஒருவர் மேடையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த வெள்ளிக் கிழமை ஒல்லாந்டோ பகுதியில் தொலைக்காட்சி அலை வரிசை ஒன்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற பாடகர் தெரிவுப் போட்டியிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
கெவின் ஜேம்சினால் என்ற பாடகியே கொல்லப்பட்டார். துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் ஒரு மனநோயாளியாக இருக்கலாம் என்று பொலிஸார் கூறுகின்றனர்.
கொலையாளிக்கும், ஜேம்சினாலுக்கும் முன்னர் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-ரி4)

# தலிபான் தலைவருக்கு அல்-குவைதா தலைவர் வாழ்த்துச் செய்தி!

காபூல், ஜூன் 13
அல் - குவைதா அமைப்பின் தலைவர் அமென் அல்- சவாகிரி, தலிபான் அமைப்பின் புதிய தலைவருக்கு வாழ்த்துக் கூறியுள்ளார்.
இது தொடர்பில் 14 நிமிடக் காணொலி ஒன்றை அவர் வெளியிட்டுள்ளார். அதில் எமது ஆக்கிரமிப்பின் மூலம் உலகின் பல பகுதிகளில் இஸ்லாத்துக்கான ஆக்கிரமிப்பைச் செலுத்த வேண்டும் என சவாகிரி குறிப்பிட்டுள்ளார்.
அத்துடன் அமெரிக்கத் தாக்குதலில் கொல்லப்பட்ட ஒசாமா பின்லேடன், தலிபான் தலைவர் முல்லா மன்சூர் ஆகியோரையும் அதில் அவர் நினைவு கூர்ந்தார். (ற-ரி4)

# லிபிய ராணுவம் கடும் … பின்வாங்கியது ஐ.எஸ்…

## சிர்ட்டே நகரைக் கைவிட்டது

டமஸ்கஸ், ஜூன் 13
லிபியாவில் ஐ.எஸ். அமைப்பின் வசமிருந்த சிர்ட்டே நகரை லிபிய இராணுவத்தினர் கைப் பற்றியுள்ளனர்.
லிபிய இராணுவத்தினரும், ஐ.நாவின் விசேட துருப்பினரும் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டனர். இரு வார மோதல்களின் பின்னர் சிர்ட்டே நகர் தமது கைகளில் வீழ்ந்தது என்று லிபிய இராணுவம் அறிவித்தது.
இந்த மோதல்களில் 100 இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்றும் 400 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
தற்போது சிர்ட்டே நகரில் இருந்து ஏனைய பகுதிகளுக்குச் செல்லும், 70 கிலோ மீற்றர் நீளமான வீதியில் வெடிகுண்டு அகற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. அத்து



# அமெரிக்காவின் ஆதரவை எப்போதும் வரவேற்கிறோம்

## ஆப்கன் அரசு தெரிவிப்பு

காபூல், ஜூன் 13
ஆப்கனில் தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கைக்கு அமெரிக்கா தரும் ஆதரவை வரவேற்கின்றோம் என்று ஆப்கன் அரசு தெரிவித்துள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த ஆப்கன் பாதுகாப்பு அமைச்சின் ஊடகப்பேச்சாளர் டல்ட்வஸ்ரி- 2015ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்கப் படைகள் ஆப்கன் படைகளுக்குப் பயிற்சிகளை வழங்கி வருகின்றன. ஆப்கனில் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் அமெரிக்காவின் ஆத



ரவை நாங்கள் வரவேற்கின்றோம். போரிடுவதற்கு எமக்கு ஆதாரம் தேவை. அமெரிக்கப் படைகளின் ஆலோசனைகளும், வான் படை உபகரணங்களும் எமக்குத் தேவை- என்று தெரிவித்துள்ளார்.
அதேவேளை ஆப்கனில் 9 ஆயிரத்து 800 ஆக இருந்த அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை தற்போது 5 ஆயிரத்து 500 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஆப்கனில் தலிபான்களுக்கு எதிரான தாக்குதல்களில் அமெரிக்காவின் பங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. அண்மையில் பாகிஸ்தானில் மறைந்திருந்த தலிபான் தலைவரை இலக்கு வைக்கும் தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அனுமதி வழங்கியிருந்தார்.
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சமயத்தில் ஆப்கனில் அமெரிக்க நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்று அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (ற-ரி4)

# பங்களாதேஷில் இரு நாள்… மூவாயிரம் பேர் …

## வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்க… அந்த நாட்டு அரசு அதிரடி



டாக்கா, ஜூன் 13
பங்களாதேஷில் கடந்த இரு தினங்களில் சந்தேகத்தின் பேரில் 3 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டனர். இஸ்லா மிய போராளிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அந்த நாட்டுப் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.
அண்மைக்காலமாக பங்களாதேஷில் சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. அங்கு ஐ.எஸ். மற்றும் … ஊடுருவியுள்ள… தெரிவிக்கப்ப… இதையடுத்து … டிக்கை எடுக்கு… நாட்டுப் பிரதமர் … உத்தரவிட்டுள்ளா… வன்முறைகளை… படுத்த கடும் … எடுக்க வேண்டு… தேஷ் சிறிய நாடு… களைக் கண்டுபிடி… முன் நிறுத்துவ… னது- என்று அ… தார்.



# வெள்ளத்தை தடுப்பதற்கு பிளாஸ்ரிக் தடைச்…

## அமெரிக்கரின் சமயோசிதம்

டெக்சாஸ், ஜூன் 13
அமெரிக்காவின் டென்சாஸ் மாகாணத்தில் ஒருவர் தனது வீட்டைச் சுற்றி பிளாஸ்ரிக் தடை… வீட்டை வெள்ளத்தில் இருந்து பாதுகாத்துள்ளார்.
றன்டி வங்கர் என்பவரே தனது வீட்டைச் சுற்றி 400 அடி நீளமான பிளாஸ்ரிக் தடைை… தார். பிராசொஸ் ஆற்றில் வெள்ளம் ஏற்பட்டதை அடுத்து வெள்ள எச்சரிக்கை விடுக்கப்… அதையடுத்தே அவர் இந்த முயற்சியை முன்னெடுத்தார்.
400 மீற்றர் நீளமான குழாயில் நீர் நிரப்பப்பட்டு இந்தத் தடை அமைக்கப்பட்டிருந்தது… வெள்ளம் காரணமாகப் பலர் இடம்பெயர்ந்துள்ள நிலையில் றன்டியின் வீடு வெள்ளத்… பாதுகாக்கப்பட்டுள்ளது.
இதை வடிவமைக்கும்போது பலர் என்னைப் பார்த்து நகைத்தனர். ஆனால் இன்று அவர்… கின்றனர். இதை அமைக்க ஏறத்தாழ 8 ஆயிரம் டொலர் செலவானது. ஆனால் 150 ஆயி… பெறுமதியான பொருள்கள், உடைமைகளைப் பாதுகாத்துள்ளேன்- என்று றன்டி கூறினா…

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம் தாக்குதல்
# ...ஸ். அமைப்பு
## ...டது



டன் லிபிய இராணுவத்தின் விமானப் படையினர், ஐ.எஸ். அமைப்பு வியாபித்திருந்த பகுதிகளைக் கண்காணித்து வருகின்றனர்.

அதேவேளை, சர்வதேச நாடுகள் தமக்கு மருத்துவ உதவிகள் வழங்க வேண்டும் என்று லிபிய அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

சிரியா மற்றும் ஈராக்கில் அமெரிக்கக் கூட்டுப் படையின் உதவியுடன் ஐ.எஸ். அமைப்பு மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதனால் ஐ.எஸ். அமைப்பு அதிகமான நிலப்பகுதியை இழந்து வருகின்றது. சிர்ட்டே நகரம், மத்திய தரைக்கடலின் பிரதான துறைமுக நகரமாகும். ஐ.எஸ். அமைப்பு 2014 ஆம் ஆண்டு சிர்ட்டே நகரைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தது. (ந-ரி4)



# கார்க் குண்டு வெடித்ததில் 20 பேர் சாவு; பலர் காயம்
## சிரியாவில் பரிதாபம்

டமஸ்கஸ், ஜூன் 13

சிரியாவின் டமஸ்கஸ் நகரில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். ஷியா பிரிவினரின் தொழுகைக் கூடத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலுக்கு ஐ.எஸ். அமைப்பு உரிமை கோரியுள்ளது.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. 13 பொது மக்களும் 7 பாதுகாப்புப் பிரிவினரும் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கார் ஒன்றில் வந்த இருவர் குண்டை வெடிக்கச் செய்துள்ளனர் என்று ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் வட சிரியாவில் அமெரிக்கக் கூட்டுப் படைகளின் ஆதரவுடன் பல பகுதிகளை நேற்றுமுன்தினம் இராணுவத்தினர் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்தனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ந-ரி4)

## ...ந நாள்களில் ...பர் கைது
...துவதற்காக



...ல. மற்றும் தலிபான்கள் ...ருவியுள்ளனர் என்றும் ...விக்கப்படுகின்றது. ...தயடுத்து கடும் நடவ...க எடுக்குமாறு அந்த ...ப் பிரதமர் ஷேக் ஹசினா ...ரவிட்டுள்ளார்.

...முறைகளைக் கட்டுப் ...த கடும் நடவடிக்கை ...க வேண்டும். பங்களா ... சிறிய நாடு. குற்றவாளி ...க் கண்டுபிடித்து நீதியின் ... நிறுத்துவது சுலபமா ... என்று அவர் தெரிவித்...

(ந-ரி4)

# இத்தாலி நோக்கி அகதிகள் படையெடுப்பு
## நேற்றுமுன்தினம் ஆயிரம் பேர் மீட்பு

ரோம், ஜூன் 13

இத்தாலி கடற்கரையில் நேற்றுமுன்தினம் ஆயிரத்து 348 அகதிகள் மீட்கப்பட்டுள்ளனர். சிசிலிக்கும் வட ஆபிரிக்காவுக்கும் இடையில் இடம்பெற்ற 11 மீட்பு சம்பவங்களிலேயே இவர்கள் மீட்கப்பட்டனர்.

கடந்த 3 நாள்களில் 3 ஆயிரம் பேருக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை 15 படகுகளில் பயணித்த 2 ஆயிரம் அகதிகள் இத்தாலிக் கரையோரத்தில் மீட்கப்பட்டனர். ஐரோப்பிய நாடுகளில் அகதிகள் நெருக்கடியில் இப்போது இத்தாலி முதன்மை வகிக்கின்றது. இந்த வாரத்தில் மட்டும் 50 ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் இத்தாலியை வந்தடைந்தனர். (ந-ரி4)

## ...தடைச் சுவர்

...ாஸ்ரிக் தடை அமைத்து

...ரிக் தடையை அமைத்...க விடுக்கப்பட்டிருந்தது.

...பட்டிருந்தது. தற்போது ... வெள்ளத்தில் இருந்து

...ன்று அவர்கள் பாராட்டு...ல் 150 ஆயிரம் டொலர் ...டி கூறினார். (ந-ரி4)



தென் கிழக்கு ஐரோப்பிய நாடான பொஸ்னியாவைச் சேர்ந்த 27 வயதான ஹெல்விடா என்ற பெண் விசித்திரமான சாகசங்களைச் செய்து வருகிறார். உடல் பல கொக்கிகளைப் பொருத்தி, சில மணிநேரங்கள் அந்தரத்தில் தொங்குவது இவரது வழமையான செயற்பாடாகியுள்ளது. ஹெல்விடா இந்த வித்தை தொழில்முறையாக 6 வருடங்களாக மேற்கொண்டு வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள் 5

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 5 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

ஒரே சமயத்தில் பல காரியங்களில் கவனம் செலுத்தும் அட்டாவதானம் படைத்தவர்கள் இவர்கள்தான். புகழ் பெற்ற உலகக் கவிஞர் ஷேக்ஸ்பியர், மெஸ்மரிசம் கண்டுபிடித்த மெஸ்மர் போன்றவர்களெல்லாம் இந்த எண்ணில் பிறந்தவர்களே!

**இவர்களின் தொழில்கள்**

எழுத்தாளர் பணியில் இவர்கள் நன்கு பிரகாசிப்பார்கள். பேனா நண்பர்கள் அதிகம் உடையவர்கள். அரசியல் துறையிலும், அதிர்ஷ்டம் உடையவர்கள். இவர்களது பேச்சிலும் விவாதங்களிலும் அரசியல் கலப்பு அதிகமாக இருக்கும். அறிவியல்துறைப் பணிக்கும், கலைத்துறை, சோதிடம், கணிதம் போன்ற துறைகளும் ஏற்றவர்கள். இவர்கள் நடிகர்கள், நடிகைகள், கலைஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்றவர்களாக புகழ் பெறுவார்கள்.

இவர்கள் எந்த வியாபாரமும் செய்யலாம். ஜனவசியம் நிறைந்தவர்கள். இவர்கள் இருக்கும் இடத்துக்குக் கூட்டம் அதிகம் வரும். தரகர்களாகவும், வியாபார முகவர்களாகவும் மிகவும் புகழ் பெறுவார்கள். பயண முகவர்களாகவும் நன்கு சம்பாதிப்பார்கள்.

இருப்பினும் ஒரு தொழிலை நன்கு செய்து கொண்டிருக்கிறபோது, இன்னொரு தொழில் செய்தால் இதைவிட நன்றாக இருக்குமே என்று யோசிப்பார்கள். பின்பு இதை நடுவில் விட்டுவிட்டு, புதிய தொழிலில் துணிந்து இறங்கி விடுவார்கள்! இதைப்போன்று அடிக்கடி தொழில்களை, வியாபாரங்களை மாற்றக்கூடாது.

ஆனால், தாங்கள் செய்து கொண்டிருக்கும் தொழில்களில் புதுமையைப் புகுத்தி வெற்றி அடையலாம். உலக நாடுகளுக்கிடையே அமைதியை ஏற்படுத்தும் தூதுவர் களாக நன்கு விளங்குவார்கள். வான ஆராய்ச்சி, செய்தி பரப்புத்துறைகள் ஆகியவையும் இவர்களுக்கு வெற்றி தரும். பொது மக்கள் தொடர்பு சம்பந்தமான தொழில்களிலும் நன்கு பிரகாசிப்பார்கள்.

**இவர்களது திருமண வாழ்க்கை**

இவர்களுக்குக் காதல் மீது மோகம் அதிகம். துணிந்து காதல்களில் ஈடுபடுவார்கள். அதுவும் 5, 9 ஆகிய எண்களில் பிறந்தவர்களால் மிகவும் ஈர்க்கப்படுவார்கள். 1, 3, 6 பிறந்தவர்களையும் மணக்கலாம். 9, 18, 27, 1, 10, 19, 28 ஆகிய திகதிகளும் கூட்டு எண் 1, 9 வரும் திகதிகளும் திருமணத்துக்கு உகந்தவை. மேலும் 6, 15, 24 திகதிகளும், கூட்டு எண் 6 வரும் திகதிகளும் ஓரளவுக்குச் சாதகமானவையே. குழந்தை பாக்கியம் இவர்களுக்குக் குறைவு. 2, 6 ஆகிய எண்களில் பிறந்தோரைத் திருமணம் செய்தால் குழந்தை பாக்கியம் உண்டு.

**இவர்களது நண்பர்கள்**

பொதுவாக மற்ற எண்காரர்கள் அனைவரும் இவர்களுக்கு நண்பர்களே! குறிப்பாக 9, 1, 6 திகதிகளில் பிறந்தவர்கள் இவர்களுடன் மிகவும் அதிகமாகப் பழகுவார்கள். இவர்கள் எவருடனும் கூட்டுத் தொழில் சேர்ந்து செய்யலாம். மற்ற எண்காரர்களை, அனுசரித்துச் சென்று, வெற்றி பெற்று விடுவார்கள்.

**இவர்களது நோய்கள்**

பொதுவாக இவர்கள் அதிகமாகச் சிந்தனைகளில் ஈடுபடுவதால் மன அமைதிக்குறைவு, மன இறுக்கம் மனச் சோர்வு ஆகியவற்றால் பாதிக்கப் படுவார்கள்.

நரம்பு பலவீனமே அதிகமாகப் பாதிக்கும். அடிக்கடி ஏதாவது நரம்புகளில் வலி ஏற்படும். சிறுவயதுகளில் காக்கை வலிப்புப் போன்ற பாதிப்புகள் ஏற்படும். எனவே இவர்கள் முன்பு சொன்னபடி நல்ல தூக்கம் நல்ல உணவு ஆகியவைகளைக் கடைப்பிடித்தால், பல நோய்களைத் தவிர்த்து விடலாம். சிற்றின்ப இச்சைகளை ஓரளவு குறைத்துக் கொண்டால், நரம்புகளின் பலம் கூடும். கடுமையான நிலைகளில் நரம்புகளின் பாதிப்பால் பக்கவாதம், ஒரு புறம் நரம்புகள் சுருக்கிக்கொள்ளும் நிலை ஏற்படும். எனவே இவர்கள் உணவில் அதிகமாகப் பருப்பு வகைகள் தானியங்கள் ஆகியவைகளைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**சிறப்புப் பலன்கள்**

9 எண்களிலும் 5 தான் அனைவராலும் விரும்பப்படுகிறது! காரணம் 5 ஆம் எண்தான் மற்ற 9 எண்களுக்கும் நடுவில் உள்ளது! இந்த எண்ணே மற்ற அனைத்து மக்களையும் (எண்களையும்) ஈர்க்கும் சக்தி மிகுந்த எண்ணாகும்.

எனவே, இவர்கள் எளிதில் அனைவரிடமும் நட்புக் கொண்டு விடுவார்கள். அனைவரையும் அனுசரித்துச் செல்லும் இயல்பினர். அறிவு என்கிற அற்புதத்தின் விளக்கம் இவர்கள் தான். புதியதாக எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வமும், அதை வாழ்வில் உடனடியாகப் பயன்படுத்தி கொள்ளும் திறமையும் உண்டு. எந்த வகையான சோதனைகளையும், சிரித்துக் கொண்டே சமாளித்து விடுவார்கள்.

(தொடரும்)

# ஆசிரிய மாநாடு: ஒரு பார்வை

தமிழ்மதி

கடந்த மாதம் 26, 27 ஆம் திகதிகளில் வவுனியா தெற்கு வலயக்கல்வி அலுவலகத்தால் நடத்தப்பட்ட ஆசிரிய மாநாட்டை பெருமைக்குரிய விடயமாகவே கொள்ள வேண்டும்.

ஆசிரியர்கள் வேலைப் பளுமிக்கவர்களாகவும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாகச் சுமைகளைச் சுமப்பவர்களாகவும் காணப்படும் நிலையில், ஆசிரிய மாநாடு சாலச்சிறந்ததாகவே நோக்கப்படுகின்றது. என்றாலும் இங்கும் ஆசிரியர்களுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்கள் என்பது கேள்விக்குறியே.

இந்த மாநாட்டுக்காக ஆசிரியர்கள் கண்காட்சியும் நடத்தப்படவேண்டும் என்பதற்கு இணங்க பல கற்பித்தல் சாதனங்கள் தயாரிக்கப்பட்டு, அதனைக் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பாடசாலைக்குக் கொண்டு செல்வதிலும், மீளவும் உரிய இடங்களுக்குக் கொண்டு வருவதிலும் சிரமங்கள் ஏற்பட்டன. உபகரணங்கள் காணாமற் போனதாகவும் கூட கண்காட்சியில் ஈடுபட்ட ஆசிரியர்கள் அங்கலாய்த்ததும் உண்டு. எனவே கல்வி நடவடிக்கைகளில் அதிகாரிகளால் பணிக்கப்படுகின்ற ஒவ்வொரு செயற்பாட்டையும் பாடசாலையின் அதிபர்களும் ஆசிரியர்களுமே சுமக்க வேண்டியுள்ளது.

மேலும், இரண்டு நாள்களும் நடத்தப்பட்ட மாநாட்டில் எத்தனை ஆசிரியர்கள் முழுமையாகப் பங்கு பற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது? பெயர் என்னவோ ஆசிரிய மாநாடு என்பது தான். ஆனால் கண்காட்சி எவருக்காக நடத்தப்பட்டது? சகல பாடசாலை மாணவர்களும் அதனைப் பார்வை இட்டனரா? அதனால் அடைந்த பயன்தான் என்ன? ஆசிரிய மாநாடு என்ற பெயரில் ஆசிரியர்களின் வேலைப்பளுவை அதிகரிக்கவா கண்காட்சி நடத்தப்பட்டது?

ஆசிரிய மாநாடு கலாசார மண்டபத்தில் நடைபெற்ற வேளையில் கண்காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த பாடசாலையில் அதிபர்களும் ஆசிரியர்களும் பால்பைக்கற்றுக்கும் சிற்றுண்டிகளுக்கும் மதிய உணவுக்காகவும் ரோக்கனுடன் வரிசையில் நின்ற பரிதாபக் காட்சியும் ஆசிரிய மாநாட்டின் மகத்துவமே.

அடுத்து குருசாகரம் எனும் மாநாட்டு மலரிலும் 30 பக்கங்களுக்கு மேல் ஆசி உரைகளை அள்ளி வழங்கி அமர்களப்படுத்தியிருந்தார்கள். ஆசி உரை எனும் பெயரில் அவர்களது வழக்கமான பாணியில் அறிவுரைகள் தாராளமாக இருந்தன. ஏதோ ஆசிரியர்கள் என்றால் எதையும் அறியாதவர்கள், தெரியாதவர்கள் என்ற பாங்கில் இவை அமைந்திருந்தன.

உண்மையில் ஆசிரியர்களின் சேவைகளை அவர் களது சுமைகளைத் தெரிந்த பல புத்திஜீவிகள் ஆசிரியர்களைப் பாராட்டி ஆசி வழங்கி இருந்தனர். இவர்கள் ஆசிரியர்களின் மதிப்புக்கு ரியவர்கள். மேலும் இந்த மலரில் குரு சாகரம் எனும் தலைப்பில் வலயக் கல்வி அதிகாரிகளையும், ஊழியர்களையும் புகைப்படங்களாகக் காட்சிப் படுத்தியிருந்தார்கள். ஆனால் நூலின் தலைப்புக் கிணங்க குருவானவர்கள் எவரையுமே புகைப்படமாகப் பார்க்க முடியவில்லை.

வவுனியா பிரதேசத்துக்கு உட்பட்ட எத்தனையோ பாடசாலைகள் எந்தவித வளங்களும் இல்லாமல் இயங்கிக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. இதில் சேவையாற்றும் ஆசிரியர்களும் கஷ்டப் பிரதேசக் கொடுப்பனவுகூட இல்லாமல் தமது சொந்த வாகனங்களில் பாடசாலைகளுக்கு வந்து செல்கின்றனர். இது இவ்வாறு இருக்க உயர்தர வகுப்புகளில் கற்கும் மாணவர்களும் சிறிய கதிரை மேசைகளில் முதுகு வலிக்க இருந்து கல்வியைத் தொடரும் நிலையும் நீண்ட காலமாகத் தொடர்கின்றது. இந்தக் கஷ்டம் எல்லாம் கடமைபுரியும் அதிபர்களுக்கும் ஆசிரியர்களும்தான் புரியும்.

நகர்ப்புறங்களில் இருக்கும் அதிகாரிகள் இந்தப் பாடசாலைகளைத் தரிசிக்கும்போது ஆசிரியர்களின் மனம் மேலும் புண்படும் படியாக வார்த்தைகளைப் பயன்படுத்துவதுடன், அழுத்தங்களையும் இலகுவாக வழங்கிச் சென்றுவிடுவார்கள்.

எனவேதான் பெருமளவு நிதிகளை வீண்விரயம் செய்யாமல் இந்த நிதிகளைப் பின்தங்கிய பாடசாலைகளுக்குப் பயன்படுத்துவதற்கும் இனி வருங்காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமல் இருப்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் எனவும் வினயமாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் நடத்தையில் மாற்றமிருப்பின் கழிவுகளின் உற்பத்தி குறைந்துவிடும்

வி.பி.குமார்



தனியார் அலுவலகங்களும் வர்த்தக நிலையங்களும் கழிவுகளைத் தரம்பிரித்துச் சேகரித்து மாநகர சபைக்கு வழங்கவேண்டும். யாழ்ப்பாண மாநகர சபை வினைத்திறன்மிக்க திண்மக் கழிவு முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இயலுமான வகையில் தனது கழிவகற்றல் முகாமைத்துவத்துக்கான உபகரண வசதிகளை விருத்திசெய்யவேண்டும். பொதுமக்களை விழிப்பூட்டி தரம்பிரித்துக் கழிவுகளைச் சேகரித்து அகற்றவேண்டும். சேதனக் கழிவுகளிலிருந்து பசளை தயாரிக்கும் முயற்சியை மேலும் வினைத்திறனாக்க வேண்டும்.

யாழ்.மாநகர சபை கொழும்பிலுள்ள உற்பத்தி நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு இங்கு தரம் பிரித்துச் சேகரிக்கப்படும் பிளாஸ்ரிக் பொலித்தீன், கடதாசி உள்ளிட்ட அனைத்து மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய பொருள்களையும் மீள்சுழற்சிக்காக மேற்படி நிறுவனங்களுக்கு அனுப்புதல் வேண்டும். மாநகர சபையின் எல்லைப் பகுதியில் கழிவுகள் எல்லாம் ஒன்றாகவே சேகரிக்கப்படுகின்றன. இதனால் அவற்றைக் கையாள்வதில் சபை சவால்களை எதிர்நோக்குகின்றது.

உண்மையில், சரியான முறையில் கழிவு சேகரிக்கும் நாள்கள் தீர்மானிக்கப்பட்டு பொதுமக்களிடமிருந்து கழிவுகளைத் தரம்பிரித்து அதற்கென ஒதுக்கப்பட்ட தனித்தனியான வாகனங்கள் மூலம் சேகரிக்கப்பட்டு சேதனக் கழிவுகள் கூட்டுப்பசளையாக்கத்துக்கும் மீள்சூழற்சிப் பொருள்கள் கொழும்புக்கும் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாண மாநகர சபை மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து பொதுமக்கள், பாடசாலைகள், அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், தனியார் நிறுவனங்கள், உணவுச்சாலைகள் என அனைத்து இடங்களிலும் விழிப்புணர்வை மேற்கொள்வதுடன் நிபந்தனைகளை உருவாக்கி கழிவகற்றல் செயற்பாட்டைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்கவேண்டும்.

பொதுமக்கள் வீடுகளில் தனித்தனியாக உரப்பைகளில் கடதாசிக் கழிவுகள், சமையலறைக் கழிவுகள், பிளாஸ்ரிக் கழிவுகள், கண்ணாடி மற்றும் ஏனைய கழிவுகளை இட்டு மாநகர சபைக்கு வழங்கவேண்டும். யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களில் காணி வசதியுள்ளவர்கள் தங்களால் வெளியேற்றப்படும் கழிவுநீரை பயிர்களுக்கு பயன்படுத்த வேணடும். காணி வசதியற்றவர்கள் மட்டுமே கழிவு நீரை வாய்க்காலில் விடவேண்டும். தங்கள் வீடுகளுக்கு முன்னால் செல்லும் சிறிய கழிவு நீர் வாய்க்காலை காலையில் எழுந்து சுத்தப்படுத்த வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு வீடுகளுக்கும் முன்னாலுள்ள தங்களுக்குரிய சிறிய பகுதியைச் சுத்தம் செய்வதன் மூலம் அனைத்து இடங்களும் சுத்தமாகும். இதை ஒவ்வொருவரும் காலைக் கடமையாகச் செய்யவேண்டும். அதேபோல பொருள்களைக் கடையில் வாங்கும் போது வீடுகளிலிருந்து பைகளைக் கொண்டு சென்று வாங்கவேண்டும். இதன்மூலம் சொப்பிங் பைகள் வீட்டில் சேருவதைத் தடுக்கலாம்.

தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் என்பன வாங்கும்போது ஒரே போத்தலை மீளப் பயன்படுத்தலாம்.

> மக்கள் அனைவரும் ஆடம்பரப்பொருள்களுக்கானதும் ஆபத்துமிக்க மற்றும் சூழலுக்கு பாதகமிக்க பொருள்களுக்குமான கவர்ச்சிகரமான விளம்பரங்களால் கவரப்படுவதை விடுத்து தேவையான பொருள்களை மட்டுமே நுகர்ந்து நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன்மூலம் கழிவுகளின் உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளலாம்.

சலவைத்தூள் சிறிய பைக்கற்றை வாங்குவதைவிட பெரிய பைக்கற்றை வாங்கலாம். இவ்வாறு சில வகையான செயற்பாடுகளை செயன்முறைரீதியாகச் செய்யலாம்.

திருமண மண்டபங்கள் ஒவ்வொரு நிகழ்வுகளின்போதும் வாழையிலை மூலமாக உணவைப் பரிமாறுவது சிறந்தது. குடிதண்ணீருக்காகப் போத்தலுக்குப் பதில் பொதுவான வடிகட்டியிலிருந்து பேணிகளில் பரிமாறுவது சிறந்தது. இதன் மூலம் வெற்றுப் போத்தல்கள் ஒரு நாள் பேணி என்பவற்றின் எண்ணிக்கை குறைவடையும். இதை மண்டபங்கள் உடனடியாகச் செய்யவேண்டும். இவ்வாறு செயற்படுத்தும் மண்டபங்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் பரிசில் வழங்க வேண்டும்.



யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த கழிவு நீர் அகற்றும் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும்.

அதன் மூலம் யாழ். நகரத்தின் மலக் கழிவுகள் மற்றும் குளியலறைக் கழிவு நீர், சமையலறைக் கழிவு நீர் என்பன இலகுவாக சூழலுக்குப் பாதிப்பற்ற வகையில் அகற்றப்படும்.

அத்துடன் நகரத்தின் வடிகால்கள் கழிவு நீர் வாய்க்கால்கள் என்பன மிகவும் வினைத்திறனான முறையில் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும். வாகன சுத்திகரிப்பு நிலையங்களின் எண்ணெய்க் கழிவுகளை அகற்றலில் சுற்றாடல் அதிகார சபையால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலை சரியாகப் பின்பற்ற வேண்டும.

ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்கள் செயன்முறை ரீதியாக மக்களின் பங்களிப்புடன் கழிவகற்றலை மேற்கொள்ள வேண்டும்.

சகல இடங்களிலும் சேதனப் பசளையிலிருந்து கூட்டுப்பசளையாக்கம் செய்யும் செயற்பாட்டை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதனைத் தொடர்ச்சியாகக் கண்காணிக்க வேண்டும். இவைகள் தங்கள் பகுதியில் சேகரிக்கும் மீள் சுழற்சிக்கு உட்படுத்தப்படும் கழிவுகளைக் கொழும்பு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து அவற்றை அனுப்பவேண்டும்.

செல்பேசி, கணினி, தொலைக்காட்சி மற்றும் ஏனைய மின்னியல் உபகரணங்களைப் பயன்படுத்துவோர் அவை பழுதடைந்தால் புதிதாக வாங்காமல் திருத்தம் செய்து பயன்படுத்த வேண்டும்.

அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளது கணினிகளை இவ்வாறு திருத்தம் செய்வது சிறந்தது. ஒன்றுக்கு மேற்பட்ட செல்பேசிகளை வாங்குவதை மக்கள் தவிர்க்க வேண்டும். தேவையற்ற நுகர்வைத் தவிர்த்து தேவையான பொருள்களை மட்டும் நுகரவேண்டும்.

திண்மக் கழிவுகளைக் கையாள்வது ஒவ்வொரு தனிநபர் சார்ந்த நடத்தையுடனும் சம்பந்தப்பட்டது. எங்களுடைய முறையற்ற நுகர்வுப் பழக்கங்களும் ஆடம்பரப் போக்குகளும் உற்பத்தி நிறுவனங்களை சூழலுக்கு இயைவான பொருள்களை உற்பத்தி செய்விலிருந்து தூரத்தள்ளியுள்ளன. மக்கள் அனைவரும் ஆடம்பரப் பொருள்களுக்கானதும் ஆபத்துமிக்க மற்றும் சூழலுக்கு பாதகமிக்க பொருள்களுக்குமான கவர்ச்சிகரமான விளம்பரங்களால் கவரப்படுவதை விடுத்து தேவையான பொருள்களை மட்டுமே நுகரப் பழக வேண்டும். பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது கழிவுகள் உருவாவது குறித்தும் அதன் சூழல் பாதிப்புக் குறித்தும் சிந்தனை செய்து சரியாகத் திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் கழிவுகளின் உற்பத்தியைக் குறைத்துக் கொள்ளலாம்.

மக்கள் செயன்முறை ரீதியாகத் தங்கள் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் கழிவுகளின் உற்பத்தியைக் குறைத்து தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கிய வாழ்க்கையைக் கட்டி எழுப்ப முடியும். நீடித்து நிலைக்கும் அபிவிருத்திக்கும் பங்களிக்க முடியும்.

*கட்டுரையாளர்,*
*ஒரு சுற்றுச் சூழலியல் ஆய்வாளராவார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நல்லவர்கள் யார்?



கண்ணன் நாளிதழைப் புரட்டிக் கொண்டிருந்தான். திருட்டுச் செய்திகள் நிறைய இருந்தன. பத்திரிகைககள் உலகத்தைக் காட்டும் கண்ணாடிகள். பத்திரிகைகள் திருட்டுச் செய்திகள், ஏமாற்றுக்காரர்களின் செய்திகளை அதிகமாக வெளியிடுகின்றன என்றால் அந்த அளவுக்குத் திருட்டும் ஏமாற்று நாட்டில் பெருகிவிட்டன என்றுதானே அர்த்தம்! அதுபற்றி மக்களிடம் எச்சரிக்கையை ஏற்படுத்தவே பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுகின்றன.

திருடர்கள், ஏமாற்றுக்காரர்களிடம் நாமும் சிக்கிக் கொள்ளாமல் உசாராக இருக்கவேண்டும் என்று கண்ணன் மனதுக்குள் நினைத்துக் கொண்டான்.

"ஆனால் திருடர்களை எப்படி அடையாளம் கண்டுகொள்வது?"

இதழ்களில் வெளிவந்த சிலசெய்திகளில் திருடர்களின் படங்கள் வரையப்பட்டிருந்தன. அதையெல்லாம் மனக் கண் முன்னால் கொண்டு வந்தான். பெரிய மீசை, கறுப்புக் கண்ணாடி, கழுத்தில் கைக்குட்டை முடிச்சு... கட்டம் போட்ட சட்டை... இப்படியெல்லாம், அந்தத் திருடர்களின் தோற்றங்கள் இருந்தன. ஆனால் அப்படிப்பட்டவர்கள் எவரையுமே அவன் நேராகப் பார்த்த ஞாபகமே இல்லை.

"அப்பா! திருடர்கள், ஏமாற்றுக்காரர்கள், அடுத்தவர்களின் பொருளை அபகரிக்கிறவர்கள் எல்லாம் எப்படி இருப்பார்கள்? அவர்களை நம்மால் அடையாளம் கண்டு கொள்ளமுடியுமா...?"

கண்ணன் தந்தையிடம் கேட்டான்.

"முடியாது! நல்லவர்களையாவது ஓரளவு அடையாளம் கண்டு கொள்ளலாம். திருடர்களை, ஏமாற்றுக்காரர்களை, அடுத்தவர் பொருளை அபகரிக்கிறவர்களை அவ்வளவு எளிதாகக் கண்டுபிடிக்க முடியாது"

அப்பா சொல்லிக்கொண்டே அலுமாரியைத் திறந்து பணத்தை எடுத்தார்.

"எனக்கு ஒரு புதுச் சட்டையும் வேட்டியும் வாங்க வேண்டும். நீ கூட மழைக் காலத்தில் போடுகிற மாதிரி நல்ல செருப்பு கேட்டியே! வா இரண்டு பேரும் தேவையானதை வாங்கிக் கொண்டு வரலாம்"

அப்பா சொன்னதும் கண்ணனும் கூடவே புறப்பட்டான்.

சந்தைக்குச் சென்றார்கள்.

முதலில் அப்பாவுக்குத் தேவையான வேட்டியும் சட்டையும் எடுத்தனர். அதை ஒரு பையில் போட்டுக் கடைக்காரர் கொடுத்தார்.

பையை வாங்கி கண்ணன் வைத்துக் கொண்டான்.

பின்னர் செருப்புக் கடைக்குள் நுழைந்தனர்.

அந்தக் கடை குறுகலாக நீளவாக்கில் இருந்தது. உள்ளே இருக்கைகள் போடப்பட்டிருந்தன.

அப்பா கண்ணனை பையுடன் இருக்கையில் இருக்கச் சொல்லிவிட்டுச் செருப்பைத் தெரிவுசெய்யச் சென்றார்.

கண்ணனுக்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த செருப்பைப் பார்க்க ஆசை. அதனால் துணிகள் அடக்கிய பையை அந்த இருக்கையிலே வைத்தான். அருகில் இருந்தவர்களைப் பார்த்தான். நவநாகரிகமான உடை அணிந்த ஒரு ஆணும் இரண்டு பெண்களும் இருந்தனர்.

அவர்களை உற்றுப் பார்த்தான். இவர்கள் திருடர்கள் மாதிரி இல்லை. நம்மை விட உயர்ந்த உடைகள் போட்டிருக்கிறார்கள் என்று நினைத்தான். அவர்கள் மீது அவனுக்கு நல்ல அபிப்பிராயம் வந்தது. அவர்கள் அருகிலே துணிப்பையைவைத்துவிட்டுஅப்பாவுடன்சென்று செருப்புக்களைப்பார்த்தான். இரண்டு மூன்று மாதிரிச் செருப்புகளை பார்த்தனர். பத்து நிமிடம் ஆனாது. கடைசியாக புதிய வகையான செருப்பைத் தேர்ந்தெடுத்து வாங்கி விட்டுத் திரும்பினார்கள். கண்ணன் வைத்த இடத்தில் துணிப் பையைக் காண வில்லை."இங்கேதான் வைத்தேன்" என்றான் கண்ணன். அங்கே பையையும் காணோம். அருகில் இருந்த மூன்று பேரையும் காணோம். உடனே அப்பா அந்த இடத்திலே செருப்பை வைத்துவிட்டு கண்ணனை இழுத்துக் கொண்டு வெளியே பாய்ந்து வந்தார்.

"அப்பா! அதோ அந்தப் பெண்தான்"

அவன் கத்தினான்.அந்தச் சத்தம் கேட்டு அந்த பெண்ணும் உடன் வந்தவர்களும் பதுங்கினார்கள். அவ்வளவுதான் ஒரே பாயச்சலாய் சென்று அவர்களைப் பிடித்தார் அப்பா."எங்கள் பை எங்கே" கோபத்தில் கேட்டார் அப்பா. அவள் கையில் இருந்த தனது துணிப்பையைப் பிடுங்கினார்.

"பார்த்தாயா கண்ணா...நல்ல நாகரிகமான இவர்கள் திருடர்கள். திருடர்களை நம்மால் அடையாளம் காண முடியாது"

இப்போதெல்லாம் கண்ணன் கூட்டத்தில் திருடர்கள் இருக்கிறார்களா என்று பார்ப்பதில்லை. கூட்டத்தில் தன் பொருளைக் கவனமாக வைத்துக் கொள்கிறான்.

## ஆட்டுக்குட்டி



ஆடி ஓடி திரியும் குட்டி
ஆட்டுக் குட்டியாம் - நான்
ஆசையோடு தூக்கித் திரியும்
ஆட்டுக்குட்டியாம்
காலை மாலை ஓடித் திரியும்
ஆட்டுக் குட்டியாம் - நான்
காலில் தொட்டால் துள்ளிப்
பாயும் ஆட்டுக் குட்டியாம்
மாலை வேளை கொட்டிலினுள்
ஓடும் குட்டியாம் - எங்கள்
மாமா வீட்டு வேலிக்குள்ளால்
ஓடும் குட்டியாம்





## வரலாற்றில் இன்றைய தினம்

1373 - தற்போதும் நடைமுறையில் உள்ள ஆங்கிலேய போர்துக்கல் கூட்டு ஒப்பந்தமே மிகப் பழமையான கூட்டு ஒப்பந்தமாகும். இது ஐக்கிய ராச்சியம் மற்றும் போர்த்துக்கல் இடையே இன்றைய தினம் கைச்சாத்தானது.

1514 - ஆயிரம் தொன்னுக்கு மேற்பட்ட நிறையுடைய ஹென்ஜி கிறேஸ் அடியூ போர்க்கப்பல் வூல்விச் டொக்கியாட்டில் கட்டப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. அப்போது அதுவே மிகவும் நிறைகூடிய கப்பலாகும்.

1625 - இங்கிலாந்தின் முதலாம் சாள்ஸ் அரசன் பிரான்ஸ் இளவரசி ஹொன்றியற்றா மரியாவை மணம் புரிந்தார்.

1774 - றோட் தீவுகள், அடிமைகளை இறக்குமதி செய்வதைத் தடைசெய்த முதலாவது பிரிட்டனின் வட அமெரிக்கக் குடியேற்ற நாடாகும்.

1717 - முதலாம் உலக மகா போர்: முதலாம் உலகப் போரின் போதான மிக மோசமான வான் தாக்குதல் லண்டனின் கோத்தாஜி நகரின் மீது ஜேர்மனியரால் மேற்கொள்ளப்பட்டதால் 46 சிறுவர்கள் உட்பட 162 பேர் உயிரிழந்தனர். மேலும் 432 பேருக்குப் படுகாயம்.

1944 - இரண்டாம் உலகப் போர்: இங்கிலாந்துமீது ஜேர்மனியரின் போர் விமானக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. 11 குண்டுகளில் 4 குண்டுகளே உரிய இலக்கைத் தாக்கின.

1952 - சுவீடனின் டக்ளஸ் டிசி3 விமானம் சோவியத்தின் மிக் 15 போர் விமானத்தால் சுட்டுவீழ்த்தப்பட்டது.

1955 - ரஷ்யாவில் முதலாவது வைரச் சுரங்கமான மிர் கண்டு பிடிக்கப்பட்டது.

1966 - மிரண்டா எதிர் அரிசோனா வழக்கில் சந்தேகநபர்கள் பொலிஸாரால் விசாரிக்கப்படுவதற்கு முன்பாக அவர்கள் எதற்காக விசாரிக்கப் படுகிறார்கள் என்பதை அறிவதற்கான உரிமை உள்ளதாக அமெரிக்க உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

1967 - அமெரிக்க உயர் நீதிமன்றில் முதல் கறுப்பு இன நீதிபதியாக சொலிசிற்றர் நாயகம் துர்குட் மார்ஷாலை அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் பி.ஜோன்சன் நியமித்தார்.

1971 - வியட்னாம் போர்: பென்டகன் ஆவணங்களை த நியூயோர்க் ரைம்ஸ் வெளியிடத் தொடங்கியது.

1997 - மாட்டின் லூதர் கிங்கை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட ஜேம்ஸ் ஏர்ள்றே 3 நாள்களின் முன் சிறையிலிருந்து தப்பிய நிலையில் மீண்டும் கைது.

1978 - லெபனானிலிருந்து இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் மீளப் பெறப்பட்டன.

1982 - சவூதி அரேபியாவில் காலித் இறந்ததையடுத்து அவரின் சகோதரர் பாக்த் அரசரானார்.

1990 - அம்பாறை மாவட்டத்தில் பிள்ளையார் கோவில் தகர்ப்பு.

- மறு அறிவித்தல் வரை வட பகுதி ரயில் சேவை இடைநிறுத்தப்பட்டது.

1992 - பீரங்கிப் படகுகளிலிருந்து யாழ். நகர கரையோரங்களை நோக்கி படையினர் சரமாரியான சூடு.

- ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக தகவல் வழங்கிய 21 பேருக்கு 15 லட்சம் ரூபா சன்மானம் பகிர்ந்தளிப்பு.

- ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கைது செய்ய முற்பட்டவேளை தற்கொலை செய்து கொண்ட சாந்தனின் சடலம் ஏழு மாதங்களின் பின்னர் தகனம்.

1997 - இந்தியா நியூடெல்லி அப்ஹர் சினிமா தீவிபத்தில் 59 பேர் உயிரிழப்பு. நூறு பேருக்கு மேல் காயம்.


2000 - தென் கொரிய ஜனாதிபதி கிம்டா - யங் வடகொரிய அதிபர் கிம் கொங்கை வடகொரியத் தலைநகர் யொங்யாங்கில் சந்தித்து - உச்சி மாநாடு நடத்தப்பட்டது.

- இரண்டாம் ஜோன்போல் பாப்பரசரைக் கொலை செய்ய முயற்சித்த துருக்கி நாட்டுத் துப்பாக்கிதாரியான மெஹ்மெற் அலி அகாவை இத்தாலி மன்னித்தது.

2002 - பலஸ்ரிக் - எதிர் ஏவுகணை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகிக்கொண்டது.

2004 - பிந்துனுவெவ படுகொலைச் சம்பவம் தொடர்பாக மேன்முறையிட்டு நீதிமன்றில் ஐந்து நீதியரசர்கள் முன் விசாரணை.

## வர்ணம் தீட்டுவோம் வாங்க.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் புறக்கணிப்பு அரசுக்கு ஓர் எச்சரிக்கையே

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக மகிந்த அணியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் மிகவும் காத்திரமான முறையில் பெரும் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டுள்ளபோதிலும், இந்த வாக்களிப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்காமல் விட்டதன் மூலம் அரசுக்குத் தெளிவான செய்தியை வழங்கியுள்ளது.

நல்லாட்சி அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நாள் முதலாக அதற்கு ஆதரவாகவே செயற்பட்டு வந்த கூட்டமைப்பு, ரவிக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு வழங்கவுமில்லை, அதனை எதிர்க்கவுமில்லை என்றவகையில் இது விடயத்தில் நடுநிலைமையான நிலைப்பாட்டைப் பேணியுள்ளது.

அரசு வாக்குறுதி அளித்தவாறு மீள்குடியமர்வு, நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் விடயங்களில் இதய சுத்தியுடன் நடக்கத் தவறினால் அந்தத் தருணத்தில் விடயதானத்துக்கு ஏற்றவாறு கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்கும் என்ற செய்தி நம்பிக்கையில்லாப் பிரேரணையில் பங்கேற்காமையினூடாக வழங்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32ஆவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் நிலையில் ஐ.நாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவில்லையென கூட்டமைப்பு பகிரங்கமாக அதிருப்தியை வெளியிட்டுள்ளது. அரசுக்கு நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பிலான நகர்வின் மூலம் முன்னெச்சரிக்கை மணியைக் கூட்டமைப்பு அடித்துள்ளது.

இதனைக் கண்டுகொள்ளாத அசமந்தப் போக்கு அரசிடம் இருக்குமேயானால் நம்பிக்கைகள் சிதறி, நிலமைகள் பார தூரமாகும் வாய்ப்புக்கள் உள்ளன. எனவே போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் எதிர்நோக்கும் உடனடிப் பிரச்சினைகள் உட்பட நீண்டகாலமாக எதிர்பார்த்து நிற்கும் நியாயமான அரசியல் தீர்வு வரை அனைத்து விடயங்களிலும் அரசு அக்கறையுடன் நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

இந்த நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதாகக் கூறி கடந்த ஆண்டில் பதவிக்கு வந்த அரசு நல்லாட்சி என்பதை வெறுமனே அலங்கார வார்த்தையாக வைத்துப் பதவிக் காலத்தை எளிதாக நகர்த்திவிடமுடியாது. மாறாக அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைவாக அவற்றை நேர்த்தியான முறையில் உண்மையான அர்ப்பணிப்புடன் நிறைவேற்றியாகவேண்டும். அன்றேல் அரசு நிம்மதியாக இருந்துவிட முடியாது என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

தமிழர்களுக்கு எதிராக வரலாற்றில் மிகமோசமான கொடூரங்களை அரங்கேற்றிய மகிந்த அரசு ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டுள்ள நிலையில், தமிழர் தரப்பானது நல்லாட்சி அரசு எதைச் செய்கின்றபோதிலும், அதனைக் கண்ணை மூடிக் கொண்டு ஆதரவு வழங்கும் என கிள்ளுக் கீரையாக எண்ணிவிடலாகாது. இதுவே கூட்டமைப்பின் புறக்கணிப்பு செயற்பாட்டின் ஊடே அரசுக்கு வழங்கப்பட்டுள்ள செய்தியாகவுள்ளது.






# கடற்படையால் மேற்கொள்ளப்பட்ட கொடிய படுகொலைச் சம்பவம்

**திலிப்**

குருநகர் வரலாற்றில் அழியா இடம் பிடித்த துயரச் சம்பவம் நடைபெற்று 30ஆவது வருட நினைவு நாள் கடந்த 10ஆம் திகதியாகும். 1986ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி இந்தப் படுகொலை மண்டைதீவு கடற்பரப்பில் வைத்து கறுப்புச் சட்டைகள் அணிந்த இலங்கைக் கடற்படையால் நிறைவேற்றப்பட்டது. குருநகர் கடற்பகுதியில் இருந்து தூய ஒளி படகில் அன்று அதிகாலை மண்டைதீவுக் கடற்பகுதிக்குக் கரைவலைத் தொழில் செய்வதற்காக அப்பாவி மீனவர்கள் 31 பேர் சென்றனர்.

இந்தப் படகில் குருநகரைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் பல்வேறு வயதினரும் இருந்தனர். இவர்களில் சிலர் வயது போனவர்களாகவும், இளம் வயதுடையவர்களாகவும், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தகப்பன், மகனாகவும், சகோதரர்களாகவும் இருந்தனர். இவர்கள் அனைவரும் தமது கடல் வலைகள், கம்புகள் சகிதமே குருநகர் இறங்குதுறையில் இருந்து அதிகாலை 5.30 மணிக்கு குருநகரைச் சேர்ந்த சிமியோன் பிலிப் என்பவருக்கு சொந்தமான தூய ஒளி படகில் சென்றனர்.

மண்டைதீவுக்கும் அல்லைப்பிட்டிக்கும் இடையில் உள்ள மண்டைதீவு அந்தோனியார் ஆலயத்துக்கு அருகில் உள்ள கடற்பரப்பில் கரைவலை இழுத்துக் கொண்டிருந்தபோது தூரத்தில் மூன்று கடற்கலங்களில் கடற்படையினர் வருவதை அவதானித்த இவர்கள் கதிகலங்கி நின்றனர். இவர்கள் தமக்கு நடைபெறவுள்ள கொடூரச் சம்பவத்தை மனக் கண்களில் பதித்து எம்மை ஒன்றும் செய்ய வேண்டாமென்று தமது கரங்களை உயர்த்தி கதறியபோதிலும் தமிழர்களை கொல்ல வேண்டுமென்ற கொடூர நோக்கத்துடன் வந்த கடற்படையினர் அவர்களைத் தமது தந்தையராகவோ, சகோதரர்களாகவோ கருதி இரக்கம் காட்டாமல் தமது துப்பாக்கிப் பிடிகளாலும் கூரிய ஆயுதங்களாலும் வெட்டியும் குத்தியும் படுகொலை செய்தனர்.

**கடந்த 10 ஆம் திகதி குருநகர் கடற்றொழிலாளர் படுகொலையின் 30 ஆவது நினைவு தினம்**

மண்டைதீவுக் கடற்பரப்பில் துப்பாக்கி வேட்டுக்களையும் கடற்படையினரின் கலங்களையும் அவதானித்த போராளிகள் மீனவர்களைக் காப்பாற்ற அங்கு விரைந்தனர். தூய ஒளிப் படகில் இருந்து வெட்டுக் காயங்களுடன் உயிர் நீத்த குருநகரைச் சேர்ந்த மீனவர்களின் சடலங்கள் அவர்களால் மீட்கப்பட்டு குருநகருக்குக் கொண்டு வரப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலங்களில் இ.இஸ்தாக்கி (வயது-54), பேதுறு செபதேயு சேவியர் (வயது-62), மனுவல் மரியநாயகம் (வயது-35), மெலியுஸ் மக்ஸ் மஸ் ஈஸ்வரன் (வயது-18), பற்றிக் டோனாஸ் மவுன்ட் (வயது-60), டோனாஸ் மவுண்ட் (வயது-38), டோனாஸ் டியுக் (வயது-18), பெனடிற் அலிஸ்ரன் (வயது-28), சுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன் (வயது-20), அழகானந்தம் பெனடிற் (வயது-50), பந்கிராஸ் தாசியஸ் (வயது-30), பெனடிற் பவியன் (வயது-28), பெனடிற் மாகிலா (வயது-26), பங்கிராஸ் யூலியஸ் (வயது-32), பங்கிராஸ்தவம்(வயது-25), தமியான் றொபின் றூபேட் (வயது-25), முடியப்பு ராசகுமார் (வயது-35), யோண் ஜோர்ஜ் (வயது-56), மனுவல் பயஸ் (வயது-60), ஆசிர்வாதம் அந்தோனிப்பிள்ளை (வயது-70), ஞானப்பிரகாசம் ஜெயகாந்தன் (வயது-14), ஞானப்பிரகாசம் ஜெயபால் (வயது-16), அருளானந்தம் டொமினிக் (வயது-16), அன்ரன் லெடன் லெயின் (வயது-21), மனவல் பற்றிக் (வயது-26), சவிரியான் யேசுராசா நிக்ஷன் (வயது-12), முத்துசாமி (வயது-65), முத்தையா சாமிநாதன் (வயது-60), அந்தோனிப்பிள்ளை பர்ணாந்து (வயது -60), பெனடிக்ற் ரமேஸ் (வயது-18), சிமியோன் மரியதாஸ் (வயது-41), ஆகியோர் குருநகர் மக்களால் இனங்காணப்பட்டனர். இவர்களது சடலங்கள் யாவும் மக்கள் அஞ்சலிக்காக குருநகர் சனசமூக நிலையத்தில் வைக்கப்பட்ட பின்னர், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர், யாழ்.புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் ஒரே இடத்தில் அடக்கம் செய்யப்பட்டன.

இவர்களது நினைவாக குருநகர் கடற்கரை வீதியில் குருநகர் சனசமூக நிலையத்தின் கிழக்குப் புறத்தில் தூயஒளி மீனவர்கள் படுகொலையை ஞாபகப் படுத்தி நினைவுத் தூபியும் அமைக்கப்பட்டுள்ளது. வருடா வருடம் இவர்களது படுகொலையை நினைவு கூர்ந்து ஜூன் 10ஆம் திகதி குருநகர் மக்களால் நினைவுத் திருப்பலியும் இந்தத் தூபியில் அஞ்சலி நிகழ்வும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குருநகர் கடற்றொழிலாளர்களுக்கு நடைபெற்ற இந்தத்துயர சம்பவம்போல இனிமேலும் நடைபெறாமலிருக்க இறைவனை வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலாவ விபத்துச் சேத மதிப்பீடு இரு தினங்களில் நிறைவுறும்

## கொழும்பு மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13
சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடி விபத்தால் சேதமடைந்த 347 வீடுகள் மற்றும் கட்டடங்கள் தொடர்பான முழு விவரங்களையும் மதிப்பீடு செய்யும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது.
மேலும் 307 கட்டடங்கள் தொடர்பில் முழு விவரங்கள் மதிப்பீடு செய்யப்படவுள்ளன என்று கொழும்பு மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கர தெரிவித்துள்ளார்.
மதீப்பீட்டு நடவடிக்கைகளுக்காக 76 உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். எதிர்வரும் 2 தினங்களுக்குள் சலாவ பகுதியில் சேதமடைந்த கட்டடங்கள் தொடர்பான மதீப்பீட்டு நடவடிக்கைகள் நிறைவுறும்.
இதேவேளை, சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட வெடிப்பால் சேதமடைந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்கும் நடவடிக்கை நாளை செவ்வாய்க்கிழமை முதல்ஆரம் பிக்கப்படவுள்ளது என்று கொழும்பு மாவட்ட செயலாளர் சுனில் கன்னங்கர குறிப்பிட்டுள்ளார்.
அத்துடன் மக்களுக்குத் தேவையானநிவாரணங்களைவழங்குவதற்காக சலாவவை அண்மித்துள்ள பகுதிகளில் 12 நிலையங்கள் அமைக்கப்பட்டுசெயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.
இதனிடையே, சேதமடைந்த 94 வீடுகளின் கூரைகளை திருத்தும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்று மேற்கு படைப்பிரிவின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க குறிப்பிட்டார். மேலும் 40 வீடுகளின் திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறியுள்ளார்.
இடம்பெயர்ந்த மக்களுக்கான தற்காலிக கூடாரங்களை அமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க தெரிவித்தார். (ற-ஐ-5)

## கொஸ்கம அரச மருத்துவமனை இன்று அதிகாரிகளிடம் கையளிப்பு

கொழும்பு, ஜூன் 13
கொஸ்கம சலாவ இராணுவ முகாமில் அண்மையில் இடம்பெற்ற வெடிப்பால், சேதமடைந்த கொஸ்கம அரச மருத்துவமனை புனரமைக்கப்பட்டு, இன்று சுகாதார அதிகாரிகளிடம் மீளக் கையளிக்கப்படவுள்ளது என்று இராணுவப் பாதுகாப்புப் படை தெரிவித்தது.
அதுமட்டுமன்றி அங்கு தற்போது மூடப்பட்டுள்ள அனைத்துப் பாடசாலைகளும் இன்று திறக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.
சேதமடைந்த வீடுகளில் வசித்த பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் அவசியப் பொருள்கள் என்பவை அடங்கிய பொதியை வழங்குவதற்கு இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
அங்கு பாதிக்கப்பட்ட இராணுவ கிராமத்தில் உள்ள வீடுகளைப் புனரமைக்க நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.
பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்காக 150 தற்காலிக் கூடங்களை இராணுவம் வழங்கியுள்ளது.
மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக பாதிக்கப்பட்ட கிராமத்தைச் சூழ 12 மத்திய நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.
இந்த வெடிப்புச் சம்பவத்தின் பின்னர், குறித்த பிரதேசம் இராணுவ பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது. வெடிபொருள்களை 48 மணித்தியாலங்களுக்குள் அகற்றுவது ஆபத்தானது என்ற போதிலும், மக்களின் நலன் கருதி அவசியமான நிவாரணங்களை வழங்குவதற்காக 36 மணித்தியாலங்களுக்குள் அவை அகற்றப்பட்டன என்று பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது. (ற-ஐ-4)

## இடர் நிலமை பகுதிகளாக 6 மாகாணங்கள் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 13
நாட்டில் அண்மையில் ஏற்பட்ட திடீர் இடர்களை அடுத்து 6 மாகாணங்கள் ஜனாதிபதியால் இடர் நிலமைப் பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.
மேல், மத்திய, வடமேல், சப்ரகமுவ, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவசர நிலமைகளின்போது, மக்களின் பாதுகாப்பு, நாட்டில் வாழ்வதற்கான பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தல் மற்றும் பொதுமக்களது அத்தியாவசியமான பொருள்கள் மற்றும் சேவைகளை வழங்கவும் இந்த விடயம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
அதற்கமைய இந்த மாதம் 30 ஆம் திகதியிலிருந்து இந்த இடர் நிலமைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதியின் செயலாளர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற-ஐ-5)

## தபால் திணைக்கள ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில்

கொழும்பு, ஜூன் 13
தபால் திணைக்களத்தின் ஊழியர்கள் நேற்று நள்ளிரவிலிருந்துவேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.
இவர்கள் புதிய நியமனங்கள் மற்றும் சம்பள உயர்வு உள்ளிட்ட 14 கோரிக்கைகளை முன் வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என ஒன்றிணைந்த தபால் கூட்டுத் தொழிற்சங்க முன்னணியின் ஏற்பாட்டாளர் எச்.கே.காரியவசம் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

## லசந்த கொலை விசாரணைக்கு படைத்தரப்பினரால் இடையூறு

### புலனாய்வுப் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13
சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை தொடர்பிலான விசாரணைகளுக்கு, படைத்தரப்பால் இடையூறு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது என்று புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
லசந்த கொலை தொடர்பிலான முக்கிய தகவல்கள் பலவற்றை இன்னமும் படையினர் வழங்கத் தவறியுள்ளனர்.
சில முக்கியமான தகவல்களை வழங்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், இதுவரையில் இராணுவத்தினர் தகவல்களை வழங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
தகவல்கள் வழங்கப்படாத காரணத்தால் விசாரணைகள் முடக்கம் அடைந்துள்ளன.
லசந்த கொலையுடன் தொடர்புடையவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும் அவர்களைக் கைது செய்ய இராணுவத்தினரின் தகவல்கள் தேவைப்படுகின்றன என்றும் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-5)

## நல்லாட்சி அரசில் ஊழல் கண்டறிய விசேட குழு

நல்லாட்சி அரசின் அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களில் இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகள் குறித்துக் கண்டறிவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய விசேட குழுவொன்றை அமைப்பதற்கு கூட்டு எதிர்க் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.
அதன்படி, சகல அமைச்சுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளதுஎன்றும், அடுத்தவாரத்தில் இந்தக் குழு தனது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதுஎன்றும் கூட்டு எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் டி சொய்சா தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

## மிக் விமானக் கொள்வனவில் மோசடி உதயங்க முன்னிலையாக உத்தரவு

கொழும்பு, ஜூன் 13
இலங்கை விமானப் படைக்காக மிக் விமானக் கொள்வனவில் மேற்கொண்ட நிதி முறைகேடுகள் தொடர்பில், குற்றம் சுமத்தப்பட்டுள்ள ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்கவை, அடுத்த மாதம் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
இந்த மோசடிச் சம்பவம் முன்னைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்றுள்ளது என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.
மிக் விமான ஒப்பந்தம்மற்றும் நிதி முறைகேடுகள் தொடர்பில் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்த வழக்கின் முக்கிய புள்ளியாக உதயங்க வீரதுங்க இருந்தாலும், தற்போது இவர் உக்ரைனில் வாழ்ந்து வருவதால் இலங்கை அரசால் விசாரணைகள் மேற்கொள்ள முடியவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
எனினும் சட்டங்கள் அடிப்படையில் சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இவரைக் கைது செய்ய அனுமதி வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (ற-ஐ-5)

## மேல் மாகாண சபை உறுப்பினர் பாடசாலை அதிபருக்கு மிரட்டல்

### அகில இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 13
வடமேல் மாகாணசபை உறுப்பினர் சுமித் ராஜபக்ச பாடசாலை அதிபர் ஒருவரைத் தகாத வார்த்தைகளால் பேசியதோடு அச்சுறுத்தலும் விடுத்துள்ளார் என்று அகில இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சுமத்தியுள்ளது.
வெசாக் பந்தல் அமைப்பதற்காக பாடசாலை மைதானத்தைக் கோரியபோது அதற்கு பாடசாலை நிர்வாகம் அனுமதி வழங்கவில்லை. அதனாலேயே குறித்த பாடசாலை அதிபருக்கு மாகாணசபை உறுப்பினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளார் என்றும் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.
ரியுள்ள மெதகம்பள பாடசாலை அதிபரையே குறித்த அரசியல்வாதி அச்சுறுத்தியுள்ளார்.
இந்த விடயம் தொடர்பில் அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளதாவது:
தமது அரசியல் பலத்தை பயன்படுத்தி, சில அரசியல்வாதிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
குறித்த மாகாணசபை உறுப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தயாராகவுள்ளோம் எனத் தெரிவித்தார்.
இதேவேளை மகிந்த ஜயசிங்க, குறித்த அதிபரிடம் கலந்துரையாடியுள்ளார் என்றும் அலவ்வ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடமும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-4)

## சலாவ ஆயுதக் களஞ்சிய விபத்தால் ராணுவத்துக்கு ரூ.500 கோடி இழப்பு

கொழும்பு, ஜூன் 13
கொஸ்கம - சலாவ ஆயுதக் கிடங்கில் ஏற்பட்ட விபத்தால் இராணுவத்துக்கு 500 கோடி ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட இழப்பு ஏற்பட்டுள்ளது -இவ்வாறு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது :-
இனிமேல், அந்தப் பகுதியில் ஆயுதக் கிடங்குகள் அமைக்கப்படாது. எஞ்சியுள்ள ஆயுதங்கள், வெடிபொருள்கள் சன அடர்த்தி குறைந்த பகுதிகளுக்கு மாற்றப்படும்.
தேவைக்கு அதிகமாக இருந்த பெருந்தொகையான ஆட்லறி, பல்குழல் பீரங்கிக் குண்டுகள் அழிந்து போனவற்றுள் அடங்கியுள்ளன. இவை வழங்குநரிடமே திருப்பி விற்கப்படவிருந்தவை.
நான் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட பின்னர் பெருமளவில் பயன்படுத்தப்படாத வெடிபொருள்கள் இருந்ததைக் கண்டேன். காலாவதியாக முன்னர் அவற்றை அகற்றி விட்டு, தேசிய பாதுகாப்புக்குத் தேவையான குறைந்தளவு வெடிபொருள்களை மாத்திரம் கொள்வனவு செய்து கையிருப்பில் வைத்துக் கொள்ளலாம் என்று பரிந்துரைத்தேன்.
மிகுதியாக உள்ள வெடிபொருள்களை வாங்கிய விலையை விடவும், குறைந்த விலைக்கு மீள் விற்பனை செய்வதற்குக் கடந்த ஏப்ரல் மாதம் அமைச்சரவை அனுமதி அளித்திருந்தது- என்றார். (ற-ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவம் - மக்கள் இடையே முரண்பாடு ஏற்படுத்த முயற்சி

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 13
கொஸ்கம, சலாவ இராணுவ ஆயுதக் கிடங்கு வெடிப்புச் சம்பவத்தை வைத்து இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முரண்பாட்டைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சுமத்தினார்.

எதிர்க் கட்சிகளின் பிரதம கொறடாவும், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



"சலாவ குண்டு வெடிப்பில் 300 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன. சேதமடைந்த வீடுகள், நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் தொடர்பில் அரசு எதுவித உத்தியோகபூர்வ அறிக்கையையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளில் தண்ணீர்ப் பாவனை தொடர்பில் மக்களுக்கு இன்னும் தெளிவூட்டப்படவில்லை. தண்ணீரைப் பாவனைக்கு எடுக்காத மக்களுக்குத் தேவையான தண்ணீரை விநியோகிக்கவும் அரசு தவறியுள்ளது. இது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபைக்கு விளக்கம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" - என்று அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாவது:

ஆயுதக் கிடங்கு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து சலாவ இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதி போர் ஏற்பட்டது போன்று காட்சியளிக்கின்றது. இந்தப் பகுதி, இன்னும் பாதுகாப்பற்ற பகுதியாகவே உள்ளது. வெடிபொருள்கள் அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெடிக்கும் அபாயநிலை இன்னமும் உள்ளது.

உயிர்ச் சேதங்கள் பெரியளவு ஏற்படாதவாறு நாங்கள் மக்களைப் பாதுகாத்துள்ளோம்.

சில தரப்பினர் இதனை அரசியல் நோக்கோடு புலிகளைத் தொடர்புபடுத்தி முகநூலில் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட மக்களது தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு அமைச்சர் ஹக்கீமுக்குப் பணிப்புரை விடுத்துள்ளோம். அத்துடன், இடர் முகாமைத்துவ அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட தரப்புக்களுக்கும் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

சேதமடைந்த வீடுகளைத் திருத்துவதற்கான பணிகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். 11 வீடுகளை இதுவரை முற்றாகத் திருத்தியுள்ளோம். ஓரளவு சேதமடைந்த வீடுகளை இன்னும் 72 மணித்தியாலங்களில் திருத்தி மக்களிடம் ஒப்படைப்போம்.

முற்றாகச் சேதமடைந்துள்ள வீடுகளை இன்னும் 60 நாள்களில் திருத்தி மீளக் கையளிப்போம். இந்த நடவடிக்கைக்கு இராணுவப் பொறியியல் பிரிவு உதவிகளை வழங்குகின்றது. இதற்குத் தேவையான நிதியைத் தாமதப்படுத்தாது வழங்குமாறு நிதி அமைச்சுக்குப் பணிப்புரை விடுத்துள்ளேன். 125 கிணறுகள் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கை, சொத்து சேத அறிக்கை உள்ளடங்கிய விரிவான அறிக்கை நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படும். அத்துடன், வீடுகளை இழந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வீதம் மூன்று மாதங்களுக்கு வழங்கவும் திட்டமிட்டுள்ளோம். சம்பவத்தில் சேதமடைந்த வியாபார நிலையங்களுக்கு விசேட வங்கிக் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளோம் - என்றார்.

குறுக்கிட்ட அநுரகுமார,
"பாதிக்கப்பட்ட சிலர் தமது சொத்துகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தமது வீடுகளிலேயே தங்கியுள்ளனர். இன்னும் சிலர் உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவ்வாறான நிலையில் முகாம்களில் உள்ளவர்களுக்கு மாத்திரமா இந்த 50 ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்?" -என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர்,
"இல்லை. இந்த உதவித் திட்டம் பாதிக்கப்பட்ட அனைவருக்குமானது. அவர்கள் முகாமிலோ, வீட்டிலோ அல்லது உறவினர் வீட்டிலோ இருந்தாலும் பரவாயில்லை. பிரதேச செயலகத்தால் உறுதி செய்யப்படுபவர்களுக்கு இந்த நிதி சென்றடையும்.

அதேவேளை, அவிசாவளை - கொழும்பு பிரதான வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததன் பின்னணியில் சில அரசியல் சக்திகள் இருந்துள்ளன. தயவு செய்து இராணுவத்துக்கும் பொதுமக்களுக்கும் இடையில் முறுகல் நிலையை ஏற்படுத்தி, முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தடையாக இருக்காதீர்கள்" - என்றார்.

(ற-ஜ-5)

# பிரசவ வலியைக் குறைக்க 'என்ரர் நொக்ஸ்' நிவாரணி

## கர்ப்பிணிகளுக்கு வழங்குமாறு சுகாதார அமைச்சர் பணிப்பு

கொழும்பு, ஜூன் 13
பிரசவத்தின்போது கர்ப்பிணிகளின் பிரசவ வேதனையைக் குறைப்பதற்கு 'என்ரர் நொக்ஸ்' என்ற வலி நிவாரணி வழங்கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்ன தெரிவித்தார்.

'என்ரர் நொக்ஸ்' என்ற இந்த வலி நிவாரணி மருந்தை அனைத்துக் கர்ப்பிணிகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் சுகாதார சேவை அதிகாரிகளைப் பணித்தார்

அதேவேளை 'ஈஹெல்த்' திட்டம் அனைத்து வைத்தியசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

முதற்கட்டமாக 40 வைத்தியசாலைகளில் 'ஈஹெல்த்' திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ற-ஜ-22)

# தேர்தல் முறை சீர்திருத்தத்தை ஆராய 3 ஆய்வுக் குழுக்கள்



கொழும்பு, ஜூன் 13
தேர்தல் முறை சீர்திருத்தம், அதிகாரப் பகிர்வு, காணிப்பகிர்வு ஆகிய விவகாரங்கள் தொடர்பில் ஆராய மூன்று ஆய்வுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்களின் அறிக்கைகள் அரசமைப்பு வழி காட்டல் குழுவுக்கு சமர்பிக்கப்படும் என்று அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தமிழ்முற்போக்குக்கூட்டணியின் மத்தியகுழு களுத்துறைவாதுவையில் கூடி குறித்த 3 குழுக்களையும் நியமித்துள்ளது. இந்தக் குழுக்கள் இந்த மாத இறுதிக்குள் பரிந்துரைகளை ஆய்வு செய்து மத்திய குழுவுக்குத் தெரிவிக்கும். அந்த ஆய்வு மற்றும் கூட்டணியின் நிலைப்பாடுகள் அரசமைப்பு வழிகாட்டல் குழுவுக்கு சமர்பிக்கப்படும்.

அதேவேளை மலையகத்தில் ஏழுபேர்சஸ் காணிபகிர்வு தொடர்பிலான பரிந்துரைகள், மேல் நடவடிக்கைகளுக்காக அமைச்சரவைக்குச் சமர்பிக்கப்படும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சமூக ஆய்வாளர் பி. முத்துலிங்கம், பொதுச் செயலாளர் அன்டன் லோரன்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திலகராஜ், வேலுகுமார், அரவிந்தகுமார், ஆய்வாளர் விஜயச்சந்திரன், தொழிற்சங்கதுணைச்செயலாளர் வி. புத்திரசிகாமணி, கூட்டணியின் பேச்சாளர் சண் பிரபாகரன் ஆகியோர் அடங்கிய குழு நேற்று நியமிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில், கூட்டணியின் பிரதித் தலைவர்கள் அமைச்சர்கள் பழனி திகாம்பரம், இராதாகிருஷ்ணன் மற்றும் மத்தியகுழு உறுப்பினர் சரத் அத்து கோரள ஆகியோரும் கலந்து கொண்டனர்- என்றுள்ளது.

(ற-ஜ-4)

# நடாளுமன்றை வலுவாக்க இரண்டு புதிய பதவிகள்

## பிரதமர் ரணில் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 13
நாடாளுமன்றின் நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்காக இரண்டு பதவிகளைப் புதிதாக உருவாக்குவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

நாடாளுமன்றின் நடவடிக்கைகளை செயற்திறன் மிக்கதாக மாற்றும் நோக்கில் இந்தப் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி, ஆளும் கட்சியின் உதவிப்பிரதமகொறடாபதவிகள் இரண்டை உருவாக்கப் பிரதமர் தீர்மானித்துள்ளார்.

இந்த உதவிப் பிரதம கொறடா பதவிக்காக குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சீ.அலவத்துகல மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அன்சூ மாரசிங்க ஆகியோர் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்த உதவிப் பிரதம கொறடா பதவிகளை வகிப்போருக்கு பிரதி அமைச்சர் ஒருவருக்கான அதிகாரங்கள், வரப்பிரசாதங்கள் வழங்கப்படுவதுடன், காரியாலயங்களும் வழங்கப்பட உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

(ற-ஜ-5)

# இலங்கைக் கடற்படைக்கு கட்டப்பட்ட கப்பல் இந்தியாவில் வெள்ளோட்டம்

கொழும்பு, ஜூன் 13
இலங்கைக் கடற்படைக்காக இந்தியாவால் கட்டப்பட்ட கப்பல் வெள்ளோட்டத்துக்கு விடப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வாஸ்கோவில் உள்ள கோவா கப்பல் கட்டும் தளத்தில் நிகழ்வு நடைபெற்றது. அதில் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தன மற்றும் பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாரராச்சி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

இந்தக் கப்பலுக்கு 'சயுரால' என்று கடற்படையால் பெயரிடப்பட்டுள்ளது. இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பலை கடற்படையின் மரபுகளுக்கு அமைய, பாதுகாப்பு அமைச்சின் சேவா வனிதா பிரிவின் தலைவியான வசந்தா குணவர்த்தன வைபவ ரீதியாக இயக்கினார்.

இந்த ஆழ்கடல் ரோந்துக் கப்பல் 74 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்டுள்ளது. 2 ஆயிரத்து 350 தொன் எடையுடையது. 105 மீற்றர் நீளத்தைக் கொண்டது. இந்தக் கப்பலில், உலங்கு வானூர்தி இறங்கு தளமும் உள்ளது.

சுமார் 4 ஆயிரத்து 500 கடல் மைல் தூரம் வரை கண்காணிப்பில் இந்தக் கப்பல் ஈடுபடக்கூடியது. 18 அதிகாரிகள் மற்றும் 100 மாலுமிகள் பணியாற்றுவர்.

வெள்ளோட்ட நிகழ்வில் இந்திய பாதுகாப்பு அமைச்சின், வான் பொறியியல் மற்றும் பாதுகாப்பு உற்பத்திக்கான இணைச் செயலர் சஞ்சய் பிரசாத், புதுடில்லியில் உள்ள தூதுவர் எசல வீரக்கோன், இந்தியக் கடற்படையின் முன்னாள் தளபதிகளான அட்மிரல் அருண் பிரகாஸ் மற்றும் அட்மிரல் சுரேஸ் மேத்தா, கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தின் தலைவரும் முகாமைப் பணிப்பாளருமான ரியர் அட்மிரல் சேகர் மிட்டல், இந்திய, சிறிலங்கா அதிகாரிகள் இருநாட்டு கடற்படை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?





**மேடம்:** அன்றாடப் பணிகளில் விழிப்புடன் இருப்பது நல்லது. தொழிலில், வியாபாரத்தில் மந்தநிலை உருவாகலாம். இலாபம் சுமாராக இருக்கும். பிறருக்காக பணம், நகை பொறுப்புகளை ஏற்க வேண்டாம்.



**இடபம்:** நிதானமுடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் படிப்படியாக உயரும். இயந்திரப் பிரிவுப் பணியாளர்கள், பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றுவது அவசியம்.



**மிதுனம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி திட்டமிட்டபடி நிறைவேறும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும்.



**கடகம்:** மனதில் புதிய சிந்தனை உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். வாகனப் போக்குவரத்தில் மிதவேகம் அவசியம்.



**சிங்கம்:** சாந்த குணத்துடன் அனைவரிடமும் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வருமானம் திருப்தியளிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.



**கன்னி:** மற்றவர்களின் ஏளனத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் தடை குறுக்கிடுவதால் இலாபம் சுமாராக இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் வாங்குவது கூடாது. மாணவர்கள் பெற்றோரின் வழிகாட்டுதலை ஏற்கவும்.



**துலாம்:** உங்களின் இனிய பேச்சை மற்றவர் விரும்புவர். தொழில், வியாபாரத்தில் இருந்த தாமத நிலை மாறும். வருமானம் சீராகும். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி வளரும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.



**விருச்சிகம்:** முயற்சிக்குரிய பயன் முழுமையாக வந்து சேரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் திருப்திகரமாக இருக்கும். பூர்வீக வழியில் சொத்து கிடைக்கும். குடும்பத்தில் சுப விடயம் குறித்த பேச்சு நடந்தேறும்.



**தனுசு:** உறவினரின் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பெண்கள் ஆடம்பரச் செலவால் கடன் வாங்க நேரிடலாம். இஷ்ட தெய்வ வழிபாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.



**மகரம்:** செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழிலில் விற்பனை சுமாராக இருக்கும். மிதமான பணவரவு கிடைக்கும். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. உடல் நலனில் கவனம் செலுத்துவது அவசியம்.



**கும்பம்:** திட்டமிட்டு செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரம் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பெண்கள், சகோதர வழியில் உதவி கிடைக்கப் பெறுவர்.



**மீனம்:** சொந்தப் பணியில் மட்டும் ஈடுபடுவது நல்லது. தொழிலில் வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பை பயன்படுத்துவீர்கள். இலாபம் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.




# ரஹ்மான் இசையில் குரல்கொடுக்கும் கோக்லி

கால்பந்து ஜாம்பவான் பீலேயின் வாழ்க்கை வரலாற்றை மையமாக வைத்து உருவாகி வெளிவந்திருக்கும் ஹொலிவூட் படமான 'பீலே பெர்த் ஆப் எ லெஜண்ட்' படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளது உலக கவனத்தைப் பெற்றுள்ளது. அந்த வகையில், தற்போது மீண்டும் 'கால்பந்து' விளையாட்டுக்காக தனது பங்களிப்பை வழங்க விருக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான். இந்தியாவில் நடைபெற விருக்கும் 'பிரீமியர் பட்ஸெல் லீக்' உள்ளரங்க கால்பந்து தொடருக்கான அல்பம் ஒன்றை விரைவில் வெளியிடவிருக்கிறார் ஏ.ஆர்.ரஹ்மான். இந்த அல்பத்தில் கிரிக்கெட் வீரர் விராட் கோக்லி குரல் கொடுக்கவிருக்கிறார். அவருக்காக 'ராப்' பகுதி ஒன்றை உருவாக்கியுள்ளாராம் ரஹ்மான். 'நாம்ஹை பட்சல்' என்ற இந்தப் பாடலுக்கான ஒலிப்பதிவு விரைவில் நடைபெறவிருக்கிறது.




என் வாழ்க்கை பாலைவனமாய் மாறியிருந்த சமயம் ஒரு வற்றாத ஜீவ நதியாய் நுழைந்தவள் நீ



வக்கில் வீரச்சாமி

சூரியன் உதிப்பதோ கிழக்கு
சுந்தரி அளப்பதோ உலக்கு
சும்மா இருக்கும் மாட்டை
உழவுக்கு பழக்கு
சூடு பறக்கப்போகுது என்
முதல் வழக்கு

படித்ததில் பிடித்தது



விக்கிபீடியா:
எனக்கு எல்லாம் தெரியும்...!





கூகுள் :
என்னிடத்தில் எல்லாம் இருக்கிறது..!





இண்டர்நெட்:
நான் இல்லாமல் நீங்க எவரும் இல்லை...!

மின்சாரம்:
என்னடா அங்க சத்தம்...?

மூவரும்:
சும்மா பேசிகிட்டு இருந்தோம் மாமா...?



Ajith Pandi @Ajithpandi

முடியாது என தூக்கி எறியாமல்...




முடிந்தவரை முயற்சி செய்வதே முதல் வெற்றி...! Be Positive

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | | | | 8 | | | |
| 9 | 6 | | | | | 7 | | |
| | | | | 4 | | 5 | | |
| 8 | | | | | | 4 | 2 | |
| | | | | | | | 8 | |
| | 4 | | | 2 | | | 7 | 6 |
| | | 9 | 7 | | | 3 | 4 | |
| | | | | | | | 9 | 7 |
| 7 | | | | 1 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 6 | 1 | 9 | 5 | 4 | 2 | 7 |
| 5 | 9 | 2 | 8 | 7 | 4 | 6 | 1 | 3 |
| 1 | 7 | 4 | 2 | 3 | 6 | 9 | 8 | 5 |
| 3 | 8 | 7 | 4 | 2 | 9 | 5 | 6 | 1 |
| 4 | 5 | 1 | 7 | 6 | 3 | 2 | 9 | 8 |
| 2 | 6 | 9 | 5 | 8 | 1 | 3 | 7 | 4 |
| 6 | 4 | 8 | 3 | 1 | 2 | 7 | 5 | 9 |
| 7 | 2 | 3 | 9 | 5 | 8 | 1 | 4 | 6 |
| 9 | 1 | 5 | 6 | 4 | 7 | 8 | 3 | 2 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டுதடவைகள் (மீண்டும்மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டி ருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்காளி குருமா



### தேவையானவை

தக்காளி – 3
வெங்காயம் – 1
சோம்பு – 1 கரண்டி
துருவிய தேங்காய் – 1 கப்
பொட்டுக்கடலை – 3 கரண்டி
நல்லெண்ணெய் – 5 கரண்டி
உப்பு – தேவைக்கு.

### அரைக்க...

பூண்டு – 2 பல்
இஞ்சி – ஒரு துண்டு
மிளகாய்த் தூள் – 1 கரண்டி
மஞ்சள் தூள் – கால்க்கரண்டி

### தாளிக்க...

சீரகம் – அரைக்கரண்டி
கராம்பு –2
பட்டை – 1
கறிவேப்பிலை – 6 இலைகள்
உளுந்தம் பருப்பு – 1 கரண்டி

### செய்முறை

சட்டியில் 3 கரண்டி நல்லெண்ணெயைக் காய வைத்துக் கொர கொரப்பாக அரைத்த விழுதைப் போட்டு ஒரு நிமிடம் வதக்கவும். அத்துடன் நறுக்கிய வெங்காயம் சேர்த்து நிறம் மாறும் வரை வதக்கவும். நறுக்கிய தக்காளி, உப்புச் சேர்த்து எண்ணெய் பிரியும் வரை வதக்கவும். இந்தக் கலவையை ஆற வைத்து சோம்பு, தேங்காய்த் துருவல், பொட்டுக்கடலை சேர்த்து மிக்ஸியில் அரைக்கவும். ஒரு சட்டியில் மீதமுள்ள 2 கரண்டி நல்லெண்ணெய் சேர்த்து தாளிக்க வைத்துள்ள பொருள்களைப் பொன்னிறமாகும் வரை வறுத்து அத்துடன் அரைத்த கலவையைச் சேர்த்து 3 முதல் 5 நிமிடங்கள் கொதிக்க விடவும். இட்லி தோசைகளுடன் பரிமாற சுவையான தக்காளி குருமா தயார்.

## வீட்டுக் குறிப்புகள்

- ஊதுபத்திகளை ஏற்றுவதற்குமுன்நீரில்நனைத்து பின்பு காற்றில் உலரவிட்டு ஏற்றினால், அதிக மணமாகவும் இருக்கும், நன்றாகவும் எரியும்.
- பட்டுச் சேலைகளைத் துவைக்கும்போது அலசும் நீருடன் சிறிது எலுமிச்சைச் சாறு கலந்து கொண்டால் சாயம் போகாது, மங்காது. பட்டுச்சேலையும்பளிச்சிடும்.
- வெள்ளிப்பாத்திரங்களில் கருமை படராமல் தடுக்க, அவற்றை அடுக்கி வைக்கும் போது, இடையிடையே கற்பூர வில்லைகளையும் போட்டு வைக்க வேண்டும்.
- மருதாணியால்ஆடையில் ஏற்படும் கறைபோக, அதை வெதுவெதுப்பான பாலில் அரை மணி நேரம் ஊற வைத்து, பின் சோப் போட்டு அலசினால் கறை போய்விடும்.

## நாளை

வைகாசி-32
செவ்வாய்க்கிழமை
- 14.06.2016
திதி: நவமி கா.07.17
நட்சத்திரம்: அத்தம் மு.இ.07.24 வரை
ராகுகாலம்: 02.53-04.23 வரை
சுபநேரம்: 10.23-11.53 வரை

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | – | – | 120 | 160 | 120 | – | – | 80 |
| கத்தரி | 200 | 100 | 240 | 200 | 240 | 200 | – | 180 |
| கரட் | 200 | 160 | 200 | 240 | 240 | 250 | – | 140 |
| மரவள்ளி | 70 | 60 | 60 | 60 | 60 | 80 | – | 50 |
| பயிற்றை | 200 | 240 | 250 | 160 | 160 | 240 | – | 160 |
| பாகல் | 250 | 240 | 200 | 140 | 220 | 120 | – | 160 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 120 | 160 | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 160 | 180 | 160 | 200 | – | 140 |
| பூசணி | 70 | 50 | 60 | 80 | 80 | 60 | – | 80 |
| தக்காளி | 200 | 170 | 200 | 260 | 200 | 240 | – | 160 |
| வாழைக்காய் | 70 | 50 | 60 | 60 | 60 | 80 | – | 40 |
| கீரை | 40 | 50 | 60 | 20 | 50 | 40 | – | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 50 | 40 | – | – | 12 |
| பச்சை மிளகாய் | 800 | 450 | 600 | 500 | 500 | 600 | – | 550 |
| புடோல் | 80 | 80 | 100 | 120 | 120 | 120 | – | 100 |
| கோவா | 180 | 160 | 200 | 180 | 180 | 240 | – | 140 |
| வெண்டி | 120 | 120 | 140 | 140 | 180 | 160 | – | 60 |
| போஞ்சி | 180 | 280 | 220 | 240 | 220 | 300 | – | 240 |
| லீக்ஸ் | 200 | 100 | 200 | 240 | 220 | 240 | – | 180 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 30 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 110 | 110 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 350 | 250 | 450 | 250 | 220 | 200 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 20 | 20 | – | 15 |
| கறிமிளகாய் | 200 | 240 | 140 | 240 | 240 | 240 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 170 | 160 | 160 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 400 | 130 | 180 | 240 | 340 | 200 | – | 200 |



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 800 | 800 | 1000 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 460 | 300 | 800 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 800 | 800 | – |
| பாரை | 550 | 600 | 500 | 600 | 600 | 600 | – |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | – | – |
| சீலா | 300 | 600 | 400 | 500 | 600 | 300 | – |
| விளை | 650 | 600 | 400 | 500 | 500 | 700 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 300 | 400 |
| கும்பிளா | 400 | 450 | 300 | 450 | 500 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 600 | – |
| ஒரா | 400 | 400 | – | – | 450 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | 400 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | 250 | 380 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 250 | 300 | 250 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | 300 | 220 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 400 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 400 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |



## இது புதுசு

### முப்பரிமாண மாபிள்கள்

முப்பரிமாண மாபிள்கள் அறிமுகமாகியுள்ளன. தொட்டுணரக்கூடி[ய] வடிவங்களுடன் இவை உருவாக்கப்பட்டுள்ளன. விசேடமாக இவை சுவர் அலங்கார பதிப்புகளுக்குப் பயன்படும். இவற்றின் விலை 650 தொடக்கம் 750 ரூபா ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸிலும் அப்பிள் பே



அப்பிள் நிறுவனமானது தனது பொருள்களை இலகுவாக கொள்வனவு செய்யும் வசதியை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் முகமாக அறிமுகம் செய்திருந்த அப்பிள் பே வசதியை தற்போது சுவிற்சர்லாந்திலும் அறிமுகம் செய்யவுள்ளது.

ஆரம்பத்தில் அமெரிக்கா மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் மட்டும் இந்த வசதி அறிமுகம் செய்யப்பட்டு, சிறந்த வரவேற்பை பெற்றிருந்த நிலையில், அடுத்தக்கட்டமாக சுவிற்சர்லாந்திலும் கால்பதிக்க அப்பிள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

நாளை முதல் சுவிற்சர்லாந்து மக்கள் அப்பிள் பே சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என அப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது.

## நுட்பம்



# ரஷ்யாவின் நவீன விமானம்

போயிங், ஏயார் பஸ் போன்ற மேற்கத்திய நாடுகளின் விமானங்களுக்குப் போட்டியாக அதைவிட திறன் வாய்ந்த புதிய பயணிகள் விமானம் ஒன்றை ரஷ்யா அறிமுகம் செய்துள்ளது.

இரண்டு வடிவங்களில், எம்சி-21 வரிசையில் அறிமுகமாகியுள்ள இந்த மேம்படுத்தப்பட்ட விமானத்தை ரஷ்யாவின் யுனைட்டெட் ஏர்கிராஃப்ட் கோர்ப்பரேசனின் துணை நிறுவனமான இர்குட் தயாரித்துள்ளது.

எம்சி-21-300 விமானத்தில் 160 முதல் 211 இருக்கைகள் இருக்கும். அதேபோல் எம்சி-21-200 விமானத்தில் 130 முதல் 165 இருக்கைகள் வரை இருக்கும்.

ஒரே தடவையில் 6 ஆயிரத்து 400 கி.மீ தூரத்துக்கு பயணிக்கும் இந்த சக்தி வாய்ந்த விமானம், 15 சதவீதம் குறைந்த எரிபொருளையே கொண்டு இயங்குகின்றது.

இந்த விமானம் உலோகங்களால் தயாராகுபவை அல்ல. சிறப்பான வடிவம் கிடைக்க வேண்டும் என்பதற்காக கூட்டுச் சேர்க்கப்பட்ட பல்வேறு மூலப்பொருள்களால் தயாரிக்கப்படுபவையாகும்.

2018ஆம் ஆண்டு முதல் இந்த விமானங்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஒப்பந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு கொண்டு வரப்படும் என்றாலும், சைபீரியாவில் உள்ள ஒரு விமான தயாரிப்பு கூடத்தில் இந்த விமானத்தின் அறிமுக விழா நடைபெற்றது.

# மன்னாரில் விசேட தேவை கொண்ட மாணவருக்கு வகுப்பறை அன்பளிப்பு

**மன்னாரில் விசேட தேவை உடைய மாணவர்களுக்கு வகுப்பறைகள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. மன்னாரில் ஒரு பாடசாலையில் விசேட தேவை உடைய மாணவர்களுக்கு செலிங்கோ லைப்பின் பேர் உபகாரத்தால் தற்போது தமது தேவைக்கு** ஏற்ற வகுப் பறைகள் கிடைத்துள்ளன.



ஆயுள் காப்புறுதித் தலைவர்களான செலிங்கோ லைப் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் குறிப்பிட்ட தேவையின் நிமித்தம் நிர்மாணிக்கப்பட்ட இந்த வகுப்பறையை அண்மையில் கையளித்தது. இது 80 ஆசிரியர்களையும் 1700 மாணவர்களையும் கொண்ட ஒரு அரச பாடசாலையாகும்.

செலிங்கோ லைப் நிறுவனத்தால் அதன் சமூகக் கூட்டாண்மை பொறுப்புத் திட்டத்தின் கீழ் கட்டி முடித்து, அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ள 65ஆவது பாடசாலை வகுப்பறைக் கட்டடம் இதுவாகும். நாட்டில் உள்ள பின் தங்கிய கிராமப்புற பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்தத் திட்டம் நடைமுறை செய்யப்பட்டு வருகின்றது.

பாடசாலைக்கு வகுப்பறைக் கட்டடத்தை கையளிக்கும் சம்பிரதாய பூர்வ நிகழ்வில் மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், பிராந்திய கல்வி அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

2004ஆம் ஆண்டுலுனுகம்வெஹர திஸ்ஸ ஆரம்ப பாடசாலைக்கு வகுப்பறைக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதோடு, இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. செலிங்கோ லைப்பின் பாடசாலை உட் கட்டமைப்புத் திட்டம் இலங்கையின் சகல பாகங்களிலும் நடைமுறை செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, சித்தாண்டி, முல்லி பொத்தான, ஆயித்தியமலை, எம்பிலிப்பிட்டிய, நிவித்திகலை, பெலிகல, அவிஸ்ஸாவலை, தெனியாய, கம்புறுபிட்டிய, பண்டாரவளை, ஹப்புத்தளை, றம்புக்கன, கண்டி, பிலிமத்தலாவ, மதுல்கெலே. றிகில கஸ்கடே, றஜவெலை, மாத்தளை, கல்கமுவ, பதவிய, பெரலுவெள, அநுராதபுரம், மொனராகலை, ஆனமடுவ மற்றும் மத்துகம ஆகிய இடங்களை உள்ளடக்கியதாக இந்தத் திட்டம் இது வரை நிறைவேற்றப்பட்டுள்ளது.

> 2004ஆம் ஆண்டு லுனுகம்வெஹர திஸ்ஸ ஆரம்ப பாடசாலைக்கு வகுப்பறைக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டதோடு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. செலிங்கோலைப்பின் பாடசாலை உட் கட்டமைப்புத் திட்டம் இலங்கையின் சகல பாகங்களிலும் நடைமுறை செய்யப்பட்டுள்ளது.

தற்போது கிளிநொச்சியில் இத்தகைய ஒரு வகுப்பறை கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு இறுதியில் அது கையளிக்கப்படும் என்று கம்பனி அறிவித்துள்ளது.

செலிங்கோ லைப்பின் சமூகக் கூட்டாண்மை பொறுப்பானது நாட்டு மக்களுக்குத் தேவையான அதி உயர் தரம் வாய்ந்த பாதுகாப்பையும் நிதி ரீதியான உறுதிப்பாட்டையும் வழங்கும். அதேவேளை, மிகவும் பின்தங்கிய இடங்களில் கூட தேவை உள்ள மக் களுக்கு கல்வி மற்றும் சுகாதார நலன் போன்ற விடயங்களில் அர்த்தமுள்ள தலையீட்டின் மூலம் நீடித்து நிலைக்கக்கூடிய வர்த்தக சுற்றாடலை உருவாக்குவதில் தொடர்ச்சியான அர்ப்பணத்தை கொண்டிருப்பதாகும் என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது.

தேவையுள்ள பாடசாலைகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு அப்பால், நாடு முழுவதும் தொடரான இலவச மருத்துவ முகாம்களுக்கும் நிதி உதவிகளை வழங்கி வருகின்றது. கம்பனியின் வருடாந்த வைத்திய ஹமுவ (வைத்தியரை சந்திப்போம்) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இது ஒருங்கிணைக்கப்பட்டு வருகின்றது.

வைத்தியசாலைகளுக்கான அத்தியாவசியப் பொருள்கள் அன்பளிப்புச்செய்யப்படுவதோடு வைத்தியசாலை உட் கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்கும் இதன் மூலம் உதவிகள் வழங்கப்படுகின்றன.

1988 ஜனவரியில் தனது செயற்பாடு களைத் தொடங்கிய செலிங்கோ லைப் 2004 முதல் கடந்த 12 வருடங்களாக ஆயுள் காப்புறுதித் துறையில் நாட்டில் தலைமை தாங்கும் நிறுவனமாகச் செயற்பட்டு வருகின்றது. பத்து லட்சத்துக்கும் அதிகமான செயற்படு நிலையில் உள்ள காப்புறுதி கொள்கைகளையும் அது கொண்டுள்ளது. உள்ளூர் காப்புறுதி துறையில் உற்பத்தி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, வாடிக்கையாளர் சேவை, ரூபவ் தொழில்சார் அபிவிருத்தி மற்றும் கூட்டாண்மை சமூகப் பொறுப்பு ஆகியவற்றில் பல அங்கீகார விருதுகளையும் அது வென்றுள்ளது. (த்)

## வணிகம்

# சிறு பயிர்ச் செய்கையாளருக்கு மானியத் திட்டம் ஆரம்பம்

தேயிலை, இறப்பர் மற்றும் தென்னை பயர்செய்கையில் ஈடுபடும் சிறு விவசாயிகளுக்கு மானியத்தொகை வழங்கும் வேலைத் திட்டமொன்று நேற்று ஆரம்பமாகியது.

இதன் முதற்கட்டமாக காலி மாவட்டத்தின் சிறு விவசாயிகள் 600 பேருக்கு அதற்கான மானியத் தொகை வழங்கப்பட்டது.

இந்த மானிய திட்டத்தின் கீழ் தேயிலை பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஒரு வருடத்துக்காக ஹெக்ரேயருக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் நிலையில், இறப்பர் பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஹெக்ரேயருக்கு ஐந்தாயிரம் ரூபா வழங்கப்பட்டது.

தென்னை பயிர்ச் செய்கையாளர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் ஒன்பதாயிரம் ரூபா வழங்கப்படும் எனப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது. (த்)

# இவ்வருடத்தில் 5.3 வீத பொருளாதார வளர்ச்சி

இவ்வருடம் இலங்கை நூற்றுக்கு 5.3 வீத பொருளாதார வளர்ச்சியை பெற்றுள்ளதாக உலக வங்கி தெரிவித்துள்ளது

உலக வங்கியால் வளியிடப்பட்டுள்ள சமீபத்திய கணிப்பீட்டின் படி எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு இலங்கை அதற்கு சமமான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (த்)

# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

சுற்றுலா பயணிகளின் வருகை கடந்த மே மாதத்தில் 10.1 சதவீதம் அதிகரித்துள்ளது. சீன நாட்டுச் சுற்றுலாப் பயணிகளே அதிகமாக வந்துள்ளதாகப் பதிவாகியுள்ளது.

மே மாதத்தில் சீன சுற்றுலாப் பயணிகளின் வருகை 31.5 என பதிவாகியுள்ளதுடன், இந்திய நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 7.9 எனப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா

இலங்கையின் தேசிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர், இலங்கை விவகாரம் தொடர்பில் இடம்பெறும் இரண்டாவது கூட்டத்தொடர் மனித உரிமைகள் சபையில் பெரும்எதிர்பார்ப்புகளைஏற்படுத்தியுள்ளது. அனைத்துலக நாடுகள் மத்தியில் தமது நிலைப்பாட்டையும், இலங்கையின் நிலவரம் குறித்து தெளிவுபடுத்துவதற்கும் இலங்கை அரசும், பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கையின் சிவில் அமைப்புகளும், புலம்பெயர் நாடுகளிலுள்ள அமைப்புகளும் தயாராகிவருவதுடன், ஜெனிவா செல்வதற்கான ஆயத்தங்களிலும் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வருகை தந்த ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன், அரசதரப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் பாதிக்கப்பட்டோர் ஆகியோரைச் சந்தித்து நிலமைகளை ஆராய்ந்தார்.

இதற்கமைய இலங்கை தொடர்பான தனது வாய்மூல அறிக்கையை எதிர்வரும் 29ஆம் திகதி மனித உரிமைகள் ஆணையாளர் வெளிப்படுத்துவார்.

இதேவேளை, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை அரசின் முன்னேற்றம் குறித்தும், மனித உரிமைகள் ஆணையாளரின் வாய்மூல அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையிலும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் உரையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-சி)

## அரசியல்

ஏற்படுத்துவதற்கு முன்னர் வடக்கு - கிழக்கின் பொருளாதார அபிவிருத்திக்கு என்று கொழும்பு அரசுக்கு நிதி உதவிகளை வழங்குவதற்கு தயாராக இல்லை என்று ராஜதந்திரி ஒருவர் 'உதயன் பத்திரிகையிடம்' தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கின் பொருளாதார அபிவிருத்திக்கான நிதிக் கொடையாளர் மாநாட்டை நடத்துவதில் ஜப்பான் ஆர்வமாக இருந்தது. இந்த மாதத்தில் அதனை நடத்தவும் திட்டமிடப்பட்டது. ஆனால் உலக நாடுகள் குறிப்பாக மேற்குநாடுகள் அதில் ஆர்வம் காட்டவில்லை. ஒரு நிரந்தர தீர்வின் பின்னர் இதனைப் பற்றி அக்கறைப்படலாம் என அவை திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டன. அதனால் மாநாடு கைவிடப்பட்டு விட்டது என்று அந்த ராஜதந்திரி தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்கு உதவிகளை வழங்குவதற்காக, உதவி வழங்கும் மாநாட்டை ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் ஜூன் மாதம் நடத்த திட்டமிட்டிருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த ஜனவரி மாதம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார். அத்துடன், இந்த உதவி வழங்கும் மாநாட்டுக்குச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பிலும் வடக்கு மாகாண தலைமைச் செயலர் அலுவலகத்தில் இருந்து விவரங்களைப் பெற்றிருந்தார்.

எனினும் இந்த மாதம் நடைபெறவிருந்த உதவி வழங்கும் மாநாடு, உலக நாடுகளின் முழுமையான ஒத்துழைப்பின்மையால் கைவிடப்பட்டுள்ளது.

மாநாடு தொடர்பான முதற்கட்டப் பேச்சுக்களில் ஈடுபட்ட ஜப்பானிய அதிகாரிகளுக்கு சாதகமான சமிக்ஞைகள் கிடைக்காத காரணத்தால் மாநாடு தொடர்பான ஏற்பாடுகள் கைவிடப்பட்டன. (உ-வ-5)

## முதலமைச்சர்

சிங்கவுக்குக் கடிதம் எழுதியுள்ளார். இதே கோரிக்கையை திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அவர் கிராமியப் பொருளாதார அமைச்சிடமும் விடுத்திருந்தார். அது ஏற்கப்படாததை அடுத்து பொருளாதார மத்திய நிலையத்தை தாண்டிக்குளத்தில் அமைப்பது என்று வடக்கு மாகாண சபை ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றிய நிலையில், முதலமைச்சர் மீண்டும் இந்த விவகாரத்தைப் பிரதமரிடம் எடுத்துச் சென்றிருக்கிறார்.

கொழும்பு அரசின் வரவு - செலவுத் திட்டத்தில் வவுனியாவில் பொருளாதார மையம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதற்குரிய காணியை அடையாளப்படுத்துவதில் சிக்கல் தோன்றியது. ஓமந்தையில் உள்ள மாணிக்கம் பண்ணைக் காணியில் இதனை அமைப்பதற்கு வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் இணங்கியிருந்தனர்.

வவுனியா நகரிலிருந்து 2 கிலோ மீற்றர் பிரதேசத்தினுள்ளேயே, பொருளாதார மத்திய நிலையம் அமைக்க முடியும் என்று திட்டத்துக்கான நிதியை விடுவிக்கும் கிராமிய பொருளாதார அமைச்சு திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது. இதனால் ஓமந்தையில் அதனை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டது. மாற்றுத் தெரிவாக தாண்டிக்குளம் விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் காணி பரிந்துரைக்கப்பட்டது.

தாண்டிக்குளம் காணியில் நிலையம் அமைவதை வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் விரும்பியிருக்கவில்லை. இதனால் இந்தத் திட்டத்தில் இழுபறி ஏற்பட்டது. உரிய காணியை அடையாளப்படுத்தி வழங்காவிடின், திட்டம் வேறு மாகாணத்திற்கு மாற்றப்படும் என்று கிராமிய பொருளாதார அமைச்சு மிரட்டி வந்தது. இதனால் வவுனியாவில் இருந்து முதல்வருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து வடக்கு மாகாண சபையில் இது விவாதிக்கப்பட்டது. நீண்ட விவாதத்தின் பின்னர், தாண்டிக்குளம் காணியை இந்தத் திட்டத்துக்கு வழங்க வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியது. இந்தத் தீர்மானம் வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தினால், வவுனியா மாவட்ட அரச அதிபர், கிராமிய பொருளாதார அமைச்சு என்பவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதற்கமைய தாண்டிக்குளத்தில் பொருளாதார மத்திய நிலையத்தை நிறுவுவதற்கான பூர்வாங்க நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. முதற்கட்டமாக தாண்டிக்குள காணி நில அளவைத் திணைக்களத்தினரால் அளவீடு செய்யப்பட்டது.

இத்தகைய பின்னணியில் நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இது தொடர்பில் திடீரெனக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரியுள்ளார். இந்தக் கடிதம் கொழும்பு அரசின் அமைச்சர் ஒருவர் ஊடாகவே பிரதமரிடம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் தீர்மானம் தாண்டிக்குளத்தில் அமைக்கப்பட வேண்டும் என்று இருக்க, முதலமைச்சர் ஓமந்தையில் அமைக்குமாறு பிரதமரைக் கோரியுள்ளமை மீண்டும் இந்தப் பிரச்சினையைச் சர்ச்சைக்குள்ளாக்கி உள்ளது. (வ-5-101)

## வெளிநாட்டு

இடமளிக்கப்போவதில்லை என்பதை மிகத் தெளிவாகக் கூறியுள்ளோம். இதுதான் அரசின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டே ரைம்ஸ் நாளித முக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் ஜனாதிபதி தெரிவித் துள்ளதாவது: நான் பதவியேற்றபோது, நாடு பல சவால்களை எதிர்கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த அரசியல்வாதிகளும் இராணுவ அதிகாரிகளும் போர்க் குற்றங்களுக்காக நீதிமன்றங்கள் முன்னிலையில் நிறுத்தப்படலாம் என்ற நிலை காணப்பட்டது. தாங்கள் மின்சார நாற்காலியைச் சந்திக்கத் தயாரென சிலர் தெரிவித்தனர் என்ற கருத்துக்களும் வெளியாகியிருந்தன. இலங்கையின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் நிலையும் காணப்பட்டது.

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாகத் தோற்கடிக்கப்பட்டபோதிலும், அவர்களது கொள்கை இன்னமும் உயிர் வாழ்கின்றது. இலங்கைக்கு வெளியே அவர்களது வலையமைப்புக்கள் காணப்படுகின்றன. வெளிநாடுகளில் வாழும் அவர்களது தலைவர்கள் ஈழ இலட்சியத்தை அடைவதற்கும், நாட்டைப் பிரிப்பதற்கும் முயல்கின்றனர். எங்களிடமிருந்து தூர விலக்கப்பட்டிருந்த நாடுகள் அனைத்தும் இப்போது எங்களுடன் சிநேகமானவையாகக் காணப்படுகின்றன. ஐக்கிய நாடுகள் சபையும்தான். போர்க் குற்றங்கள் குறித்த கூக்குரல்கள் குறைவடைந்துள்ளன. போர்க் குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக தீர்ப்பாயங்களை அமைக்க வேண்டும் என்ற கூக்குரல்களும் குறைவடைந்துள்ளன. மின்சார நாற்காலி குறித்த கதைகள் ஓய்ந்துவிட் டன.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைகளில் சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லை என்று நான் தெரிவித்த கருத்து, அரசின் உத்தியோக பூர்வ நிலைப்பாடாகும். எங்களுக்கு வெளிநாட்டு நீதிபதிகள் தேவையில்லை என்பதை நாங்கள் மிகத் தெளிவாகவே தெரிவித்துள்ளோம். வெளிநாடுகளின் தலையீடின்றி எந்த விடயத்துக்கும் எங்களால் தீர்வைக் காண முடியும். தேவைப்பட்டால் வெளிநாடுகளிடமிருந்து தொழில்நுட்ப உதவியைப் பெற நாங்கள் தயார். எனினும், எந்தவித நிபந்தனைகளும் உட்படாமலேயே உடன்படுவோம் - என்று தெரிவித்தார். (உ-வ-5)

## எந்தவொரு

காணிகளில் மீளக்குடியமர்த்த வேண்டும். அவர்களுக்கு பொருளாதார வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். அவர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும். எனவே வடக்கிலிருந்து எந்தவொரு இராணுவ முகாமையும் அகற்ற வேண்டிய தேவையில்லை "- என்றார்.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை, வடக்கு - கிழக்கு நிலமை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனால் சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை கொண்டுவரப்பட்டது. அதில் உரையாற்றிய சம்பந்தன் வடக்கில் படைக் குறைப்புக்கு வலியுறுத்தியிருந்தார். (உ-5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அக்னேஸ் (தங்காள்) அந்தோனி



நெடுந்தீவு 10ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அக்னேஸ் (தங்காள்) அந்தோனி 11.06.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்துக்கு முற்பகல் 10 மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின்னர் நெடுந்தீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

10ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

077 535 3780 (j/2110) (11,18)

### அருட்சகோதரி மேரி பசில் மடுத்தீன் -தி.கு



சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி பசில் மடுத்தீன் நேற்று (12.06.2016) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.06.2016) திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர் இல்லத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ் மாகாணத் தலைவி.


121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(j/2111) (11,17,18)

## மரண அறிவித்தல்

### அருணாசலம்பிள்ளை சாந்தகுமார்

**(பொறியியல் முகாமி (Formen) C.T.B வவுனியா)**



மலர்வு 04.10.1963 — உதிர்வு 12.06.2016

வட்டு கிழக்கு (தாவளை) வட்டுக் கோட்டையைப் பிறப்பிடமாகவும் வவுனியா நெளுக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பிள்ளை சாந்தகுமார் 12.06.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்துள்ளார்

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் அருணாசலம்பிள்ளை (தபால் அதிபர்) சரஸ்வதி யம்மா தம்பதியாரின் புதல்வரும் கேதீஸ்வரி(சுகி)யின் அன்புக் கணவரும் அருட் குமரன் (சரண்) மற்றும் ஆரணி ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரேம் குமார் (கனடா), கீதாஞ்சலி ஆகி யோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2016) பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நெளுக்குளம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்கான எடுத்துச் செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
அ. பிரேம்குமார் மற்றும் குடும்பத்தினர்.

(1748) (12.18)

076 728 8703

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயிலிட்டி

விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன. இதில் மயிலிட்டி - பலாலி மக்களை கலந்துகொள்ளுமாறு, வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்தக் குழுவின் தலைவர் அ.குணபாலசிங்கம் இது தொடர்பில் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி எமது மக்கள், அப்பு - ஆச்சியர் ஆண்ட பூமியை விட்டு இடம்பெயர்ந்த நாள். சில மணி நேரங்களில் திரும்பி வருவோம் என்ற நம்பிக்கையில் புறப்பட்டு, 26 ஆண்டுகளாக அகதிகளாக அலைந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் நாம் எமது மண்ணிலிருந்து விரட்டப்பட்ட தினத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாட்டை ஏற்பாடு செய்துள்ளோம். எமது மண்ணுக்கு விரைவில் நாங்கள் திரும்பவேண்டும். இந்தக் கோரிக்கையை முன்வைத்து நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10 மணிக்கு விசேட பூசை இடம்பெறவுள்ளது.

இதில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள், உறவினர் - நண்பர்கள் - வாடகை வீடுகளில்வசிக்கும்மக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(வ-5)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்

**திரு.றோ.சிவபுத்திரன்**

அவர்களின் பாசமிகு மாமனார்

**செல்லையா கந்தையா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம், யா/கோப்பாய் ம.வி**

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அமரர்

**திருமதி இந்திராதேவி சுந்தரலிங்கம்**

கடந்த 15.05.2016 இல் இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் இறுதி நிகழ்வின் போது நேரடியாக வந்து கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், பத்திரிகை மூலமாக கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தும், தொலைபேசி மூலமும், தந்தி மூலமும், முகநூல் மூலமும் துயர் பகிர்ந்த அன்பு உள்ளங்களுக்கும் , பதாகைகள் மூலமும் மலர்வளையங்கள் மூலமும் அஞ்சலி செலுத்திய உள்ளங்களுக்கும் அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு இறுதி நிகழ்வுகள் நடைபெறும் வரைக்கும் சகல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் நல்கிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.


அன்னாரின் 31 ஆம் நாள் நினைவாக நாளை (14.06.2016) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தனிப்பட்ட ரீதியில் அழைப்பு கிடைக்காதவிடத்து இவ் அழைப்பினை ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

162/3 பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(j 2120) (17,19)

குடும்பத்தினர்.
021 222 6491

## முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இணுவில் கந்தனின் திருவருளை வேண்டி



அமரர்

**விநாசித்தம்பி கனகநாயகம்**

(முன்னாள் பிரபல வர்த்தகர் - காலி)

(திதி - நவமி)

தவப் பேறு
**23.06.1941**

சிவப் பேறு
**26.05.2015**

உறவை நேசித்த இனிய உறவே
உங்களை எங்கே இனிமேல் சந்திப்போம்
திருக்கோயில்களில் சுவாமி காவுவதும்
திருப்பணிகளில் ஆர்வமும் கொண்டவரே
இறையடியில் இன்புறப் பிரார்த்திக்கின்றோம்.

"துரைமலர்ப் பொய்கை"
இணுவில்.
(Su/2112) (12.17.18)

குடும்பத்தவர்கள்

## நெஞ்சை விட்டகலா

7ஆம் மாத நினைவில் | 9 ஆம் ஆண்டு நினைவுகளில்





**சேவியர் அந்தோனிப்பிள்ளை**
மலர்வு 10.04.1951
உதிர்வு 18.11.2015

**அந்தோனிப்பிள்ளை மேரிகொன்செப்ரா**
மலர்வு 14.05.1960
உதிர்வு 13.06.2007

எம்மை வாழவைத்த அன்புத் தெய்வங்களே இன்பத்திலும் துன்பத்திலும் நற் தந்தையாய் தாயாய் எம்மோடு இருந்து வழி நடத்தினீர்கள் வாழ்வில் நாம் உயர பல வழிகள் காட்டினீர்கள் அன்பு எனும் அமுதத்தினை நாம் பருகிடச் செய்தீர்கள் உங்களை விட்டுப் பிரியாமல் என்றும் அணைத்திருந்தீர்கள்-இன்று அன்புக்கு ஓர் அடைக்கும் தாழ் இல்லை என்று உணர்கின்றோம் உங்கள் அன்பை மறவாமல் என்றும் நாம் வாழ்ந்து உமக்காக வேண்டுகின்றோம் இறைவனை.

இல.162A 3ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி யோகம்மா சுந்தரலிங்கம்



யாழ்ப்பாணம், இணுவிலைப் பிறப்பிடமாகவும் இல. 89, உதய நகர் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா சுந்தரலிங்கம் 11.06.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்- நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்- கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும் நகுலேஸ்வரன் (ஜீவா, மாந்தை உப்புக் கூட்டுத்தாபனம்- மன்னார்), தில்லைநாதன் (கொழும்பு), யோகராணி (உதயநகர் கிழக்கு), யோகமலர்(கட்டார்), சோதிமலர்(விநாயகபுரம்), தயாபரன்(உதய நகர் மேற்கு) ஆகியோரின் அன்புத் தாயாரும் கலாநிதி (மன்னார்), விஜயலட்சுமி (கொழும்பு), குலேந்திரன் (மலையாளபுரம்), சுவர்ணா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் நடராசா(வவுனியா), சற்குணம்(சிவாஸ்கபே, சந்திரபவான் உணவகங்களின் முன்னாள் பிரதம பணியாளர்), சண்முகரத்தினம், மயிலரசன்(பிரபல மிதிவண்டி விற்பனையாளர்கள்),முத்துலிங்கம் (கனகாம்பிகைக்குளம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலசுப்பிரமணியம் (நுடுவில் - பிரான்ஸ்), தர்மலிங்கம் (வவுனியா), சிவராசா(லண்டன்), காலஞ்சென்றவர்களான பரம்சோதி, திலகவதி, ஜெகசோதி மற்றும் ராஜேஸ்வரி (மன்னார்), கமலாதேவி(கொழும்பு) பத்மாவதி(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் தனுஜா, டிஷான், சயந்தன், சுகந்தன், சமரூபன், தர்சன், குவேனி, நிதுஷன், புகழரசன், புவனேன், குயிலன், றெபேக்கா, ஸ்ரலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இலக்கம் 89, உதயநகர் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (13.06.2016) பி.ப 2.00 மணியளவில் திருநகர் இந்து பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.89, உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.
(v/48) (12.18)

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி வதனபாஸ்கரி ராஜா



யாழ்ப்பாணம் உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடா Marham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வதனபாஸ்கரி ராஜா கடந்த (10.06.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசர் (தாமோதரம்பிள்ளை)-முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி-பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும் ராஜாவின் அன்புத் துணைவியும் சேந்தன் (ஐக்கிய அமெரிக்கா), வசந்தன் (கனடா), சியாமினி (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஞானபாஸ்கரி (சக்தி-கனடா), றஞ்சிதபாஸ்கரி (றஞ்சி-ஐக்கிய அமெரிக்கா) , காலஞ்சென்ற வரதராஜன் (வரதன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அகல்யா(ஐக்கிய அமெரிக்கா), சுஜாதா (கனடா), கேசவன் (பிரித்தானியா) ஆகியோரின் மாமியாரும் ராணி, சந்திரரட்ணம், நவரட்ணம், வசந்தநாயகி, சாந்தகுமாரன் ஆகியோரின் அன்பு மைத்து னியும் விபிசன், உசாந்தன், ஜெயரூபன், சாய்சகியா, சாய்கஜன், சாய்சத்தியா, ஏமி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் றஜனி, உமையாள் ஆகியோரின் பாசமிகு சிறியதாயும் யசிக்கா, நிசாந், பிரசாந் ஆகியோரின் பாசமிகு மாமியும் கருணேந்திரன், செல்வகுமார் ஆகியோரின் சிறிய மாமியும் அம்ருதா, அஸ்விதா, அகஷ்யா, கம்ஷா,றனுஜன், அபிராமி, பிரசாந்தி, பிறிந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2016) திங்கட்கிழமை மு.ப 9.00-10.30 மணிவரை Chapel Ridge funeral Home & Cremation Center,8911 wood bine Ave, Marham,ON L3R5G,Canada வில் இடம்பெற்று 11.00 மணியளவில் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூத்தவிநாயகர் கோயிலடி,
ஆனைக்கோட்டை வடக்கு.

தகவல்:
சிறிகரன் குடும்பத்தினர்
021 225 6824

ராஜா- +905 201 84 66, + 6477107769

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகரையில்

யில் நிறைவடைந்தது.

முள்ளிக்குளத்தில் உள்ள கடற்படைத் தளத்தில், கடந்த ஏப்ரல் 27ஆம் திகதி ஆரம்பமான ஏழு வாரகாலப் பயிற்சி, கடந்த 9ஆம் திகதி வாகரையில் நிறைவுபெற்றது. 11 அதிகாரிகளும், 108 கடற்படையினரும், இந்தப் பயிற்சிகளில் பங்கேற்றிருந்தனர்.

கடற்படையின் தரை நடவடிக்கைத் தளபதி கொமடோர் உதேனி சேரசிங்கவின் அழைப்பின் பேரில், கிழக்கு கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா, இந்தப் பயிற்சி நிறைவு நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார்.

இந்த இறுதிக்கட்டத் தரையிறக்கப் பயிற்சியின் போது, விமானப்படை உலங்கு வானூர்திகள், கடற்படையின் தரையிறங்கு கலம் மற்றும் படகுகளும் பங்கேற்றிருந்தன. (வ-5)

## வடக்கு

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் வாழும், வெவ்வேறு வகையான மக்கள் குழுவினர்கள் மீது, வெவ்வேறு விதமாக கவனம் செலுத்தப்படுவதான கருத்தை ஒரு சிலர் நாட்டு மக்கள் மத்தியில் கொண்டு சென்றனர். இருப்பினும் நாட்டின் அனைத்து மக்களுக்கும் செவி சாய்த்து அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதே எமது அரசின் கொள்கை.

நாட்டின் சகல பிரதேசங்களிலும் வியாபித்துள்ள சிறுநீரக நோய்த் தடுப்புக்காக அரசு நடைமுறைப் படுத்தியுள்ள விரிவான வேலைத் திட்டத்தை மேலும் வலுவான முறையில் முன்னெடுத்துச் செல்லவுள்ளேன். வடக்கு மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசு பாடுபடுகின்றது. வடக்கு மக்களின் கல்வி, சுகாதாரம், உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான விசேட கருத்திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றோம். தற்போதைய அரசின் சிறந்த வெளிநாட்டுக் கொள்கை காரணமாக உலக நாடுகள் பலவற்றின் உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. வடக்கில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தப்படும் - என்றார்.

ஆயிரத்து 500 குடும்பங்களுக்கான குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்து போகஸ்வெள இராணுவ முகாமுக்கு அருகாமையில் நிர்மாணிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு செயற்திட்டத்தை ஜனாதிபதி நேற்றுத் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து போகஸ்வெள மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விழாவில் பங்கேற்றார். அங்கு, சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட நிரந்தர வீடற்ற குடும்பங்களுக்கு வீடுகளை அமைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் மற்றும் சிறுநீரக நோய்க்கு ஆளான 100 குடும்பங்களுக்கு நீர் சுத்திகரிப்பு உபகரணங்களை வழங்கி வைத்தார்.

போகஸ்வெள மகா வித்தியாலயத்திற்கு வருகை தரும் 40 கிலோ மீற்றர் தூரம் கொண்ட பாதையை புனரமைத்து தருமாறு கோரிய மக்களின் கோரிக்கைக்கு ஜனாதிபதி செவிசாய்த்தார். தனிப்பட்ட ரீதியில் இதுபற்றிக் கண்டறிந்து துரிதமாக வீதியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதி வழங்கினார்.

அவ்வாறே போகஸ்வெள பாடசாலையின் குறைபாடுகளை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி ஏற்புடைய பிரிவுகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, அமைச்சர்களான கயந்த கருணாதிலக, ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் பலரும் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் படைத் தளபதிகள், சிறுநீரகநோய்த் தடுப்பிற்கான ஜனாதிபதி செயலணியின் பணிப்பாளர் அசேல இத்தவெல உள்ளிட்ட அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். (உ-வ-5)

## சூழலுக்கு

உள்ளடக்கினால்தான் அதைப் பெறமுடியும். இதற்கு அண்மையில் இடம்பெற்ற ரவி கருணாநாயக்கா தொடர்பான வாக்கெடுப்பை உதாரணமாகக் கூறலாம்.

சமஷ்டி என்றால் பிரிவினை எனவும், ஒரே நாடாக வாழ்வதே ஒற்றையாட்சி எனவும் ஓர் பிழையான கருத்தும் ஊறியுள்ளது. 1972, 1978ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட அரசமைப்பு மாற்றம், அப்போது ஆட்சியில் இருந்த கட்சிகளின் சிந்தனையை கொண்டுவந்ததாகவே கருதக் கூடியதாக உள்ளது.

ஆனால் தற்போது எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாத அரசே ஆட்சியில் உள்ளது. இந்தச் சூழலில் எனது கருத்தின் பிரகாரம் அரசமைப்பை உருவாக்குவதே சிறந்தது.

நாடாளுமன்றத்திற்கு பொறுப்புக்கூறக்கூடிய வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும். அல்லது பிரதமர் பதிலளிக்கக் கூடிய வகையில் இருப்பது அவசியம். பொறுப்புக்கூறத் தவறினால் அரசை மாற்றக்கூடிய நாடாளுமன்றம் வேண்டும்.

அதேபோன்று உரிமைகள் சாசனம் தொடர்பிலும் வலியுறுத்தப்படல் வேண்டும். அதில் வாழ்வதற்கான உரிமை, சமூக பொருளாதாரம். சிறுவர் விவகாரம், சுகாதாரம், வீடு, மருத்துவம் உள்ளிட்டவைகளும் அடங்க வேண்டும். சிறிய நாடான கிழக்குத் திமோரில் கூட சிறந்த உரிமைகள் சாசனம் உண்டு.

சர்வதேச ரீதியில் இடப்படும் ஒப்பந்தங்களை இரண்டு வருட காலத்திற்குள் நாடாளுமன்றம் ஏற்று சட்டத்திற்குள் சேர்க்கப்படவேண்டும். தவறினால் அது எமது சட்டமாக வேண்டும்.

இன்றைய அரசமைப்பிலுள்ள தேசிய கொள்கையே பல குழப்பங்களுக்குக் காரணம். இதற்கு பல உதாரணங்களும் தீர்ப்புகளும் உண்டு. இவை நீக்கப்படவேண்டும். ஏனெனில் இவ்வாறான நடைமுறை இந்தியாவில்கூடக் கிடையாது. அங்கே மாநிலங்களே கொள்கைகளை வகுக்கின்றன.

மேலும், ஆளுநர், முதலமைச்சரின் ஆலோசனையின் பிரகாரமே செயற்படவேண்டும் என அரசமைப்பில் தெளிவாகத் தற்போதும் உள்ளபோதும் நடைமுறையில் இல்லை. இதனை மேலும் உறுதிப்படுத்த வேண்டும்.

நிதி தொடர்பான சட்டங்களுக்கு ஆளுநரின் ஒப்புதல் பெறவேண்டும் என்பது நீக்கப்படவேண்டும்.

தற்போதைய நீதிமன்றங்கள் அரசமைப்புப் புலமை கொண்டதாக இல்லாத காரணத்தினால், அரசியல் விவகாரங்களைக் கையாள, தென்னாபிரிக்கா போன்று ஓர் அரசமைப்பு நீதிமன்றம் அமைத்தல் உள்ளிட்டவை இடம்பெறவேண்டும்.

இவற்றை உள்ளடக்கியதான ஓர் சூழலுக்கேற்ப திறமையான சிறந்த அரசமைப்பையே தற்போது உருவாக்க முடியும் - என்றார். (வ-101)


## மரண அறிவித்தல்கள்

### தங்கராசா சண்முகநாதன்



மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்க ராசா சண்முகநாதன் நேற்று(12.06. 2016) ஞாயிற்றுக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா-அன்னலச்சுமி தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பராணியின் பாசமிகு கணவரும் தேவகயானன் (நீரியல் அளவியலாளர் கொறவபொத்தானை), ஏகநாதன் (இரசாயன பகுப்பாய்வாளர் வடமாகாண நீரியல் திணைக்களம்), டிலக்ஷனா (வேம்படி உயர்தரப் பாடசாலை A/L -உயிரியல் பிரிவு) ஆகியோரின் அன்பு தந்தையும் விஜயாம்பாள், பூலோகராசா ஆகியோரின் சகோதரரும் லக்ஷனாவின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2016) திங்கட்கிழமை மாதகலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக போதி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாதகல் பிள்ளையார்கோயிலடி,
மாதகல்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 4934210,077 4083660



### செபஸ்ரி பேனாட்

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் இல.119.வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செபஸ்ரி பேனாட் கடந்த (10.06.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபஸ்ரி-வரவணிக்கம் தம்தியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான அத்தனாஸ்-ஞானசௌந்தரி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மேரி கிறேசின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அந்தோனி முத்து தேவராசா (ஓய்வு பெற்ற அதிபர்), மேரி பெர்னபேத்அம்மா, செலஸ்ரின்பிள்ளை மற்றும் சிப்ரியான், லில்லி மாக்றேட், றீற்றம்மா, றெஜினா, எட்மன், காலஞ்சென்ற ஜோசப் ஜெயபாலன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற மரியதாஸ் மற்றும் டெய்சி ஆகியோரின் அன்பு மைத்துனரும் மோகன் (கனடா), வசந்தி (கனடா), சுகந்தி (திருச்சிலுவை கன்னியர்), ஆனந்தி (ஆசிரியை யாழ் புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்), சாந்தி (அபிவிருத்தி உத்தியோகத்தர், நகர சபை வவுனியா), ஜானகி, அகிலன் (சுவிஸ்), கமல்ராஜ் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தி, யோகராசா, இராஜசேகர், செபஸ்ரியன், அனிஸ்லி, நிஷாந்தினி, நிஷா ஆகியோரின் அன்பு மாமனும் நிவேதா, சுவீதா, ஜோனத்தன், றெனி, நிலாந்தி, ஹெனி, தக்ஷிகா, நிலுஷிகா, தக்ஷன், நிருஷன், கிஷாறன், தமிறா, மிதுஷா, ஹறின், சதுஷன், கபிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(13.06.2016) திங்கட்கிழமை இலக்கம் 119, வேம்படி வீதியிலிருந்து மு.ப 11.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பி.ப 3.00 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இலக்கம் 119,
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:குடும்பத்தினர்
021 221 9640
(J 2116)(17,19)

## மரண அறிவித்தல்கள்

### செல்வி சந்திரலதா தம்பிராசா

(யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை-2016,
ஆசிரியை கிளி/பூநகரி நல்லூர் ம.வி)



4ஆம் கட்டை பூநகரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சந்திரலதா தம்பிராசா (யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை-2016, ஆசிரியை கிளி/பூநகரி நல்லூர் ம.வி) நேற்று (12.06. 2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் தம்பிராசா-சந்திரவதி தம்பதியரின் அன்பு மகளும் சந்திரகலாவின் (ஆசிரியை, கிளி/பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்) பாசமிகு சகோதரியும் செல்வநேசனின் மைத்துனியும் லவனிசா, செந்தாளன், சஸ்மீனா ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06. 2016) திங் கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணியள வில் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4ஆம் கட்டை,
பூநகரி.

(j 2121)(17.19)

தகவல்:
குடும்பத்தினர்.

### செல்லையா கந்தையா



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது கொக்குவில் பொற்பதி வீதியில் வசித்து வந்தவருமான செல்லையா கந்தையா 11.06.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் சந்தானலக்சுமியின் அன்புக் கணவரும் கலைச்செல்வி, திருச்செல்வி, அருட்செல்வி, உதயச்செல்வி (ஆசிரியை- யாழ். மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லோகபாலச்சந்திரன், சிவப்பிரகாஷ், ராஜ்குமார், சிவபுத்திரன் (ஆசிரியர்- யா/கோப்பாய் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பகலவன், தூயவன், வருணன், பிரணயா, ஜானவி,இலக்கியன், காவியன், வைஸ்ணவி, அக்ஷரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

64/4 D, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 869 4518


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். இந்து, ஹாட்லி அணிகள் சதுரங்கத் தொடரில் சூடின மகுடம்

யாழ்ப்பாணம், ஜூன் 13
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட சதுரங்கத் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் ஹாட்லிக் கல்லூரி அணியும் சம்பியனாகின.
யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று இறுதிப்போட்டிகள் நடைபெற்றன. 15 வயதுப் பிரிவில் 5 செற்களிலுமாகச் சேர்த்து 27 புள்ளிகளைப் பெற்று யாழ். இந்து சம்பியனானது. 25 புள்ளிகளுடன் ஹாட்லிக் கல்லூரி இரண்டாம் இடத்தையும், 20.5 புள்ளிகளுடன் கொக்குவில் இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் தமதாக்கின.
19 வயதுக்குட்பட்ட பிரிவில் 5 செற்களிலும் ஒட்டுமொத்தமாக 24 புள்ளிகளைப் பெற்று ஹாட்லி முதலிடம் பிடித்தது. கொக்குவில் இந்துக் கல்லூரி 23 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும், யாழ். இந்துக்கல்லூரி 23 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் தமதாக்கின. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 13
புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். பாரதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்செழு வளர்மதி அணியை எதிர்த்து மன்னார் சென்.அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

## காலிறுதியில் மேரிஸ் அணி

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தொடரில் வடோவிற்ரே அணியை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது சென். மேரிஸ் அணி.
கொழும்பு குரே மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதிக்குத் தகுதிபெறும் இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியைஎதிர்த்துவடோவிற்ரே அணி மோதியது. இதில் சென். மேரிஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## நவநீதனால் வவுனியா முதலாமிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 13
மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான மரதனில் எந்தவொரு மாவட்டமும் சம்பியனாகவில்லை. இருப்பினும் முதலாம் இடம் வவுனியாவுக்குக் கிடைத்துள்ளது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலாமிடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த கே.நவநீதனும், இரண்டாமிடத்தை அதே மாவட்டத்தைச் சேர்ந்த எம்.கௌரிநாதனும், மூன்றாமிடத்தை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.நிர்மலும், நான்காமிடத்தை அதே மாவட்டத்தைச் சேர்ந்த ஏ.ராஜ்குமாரும், ஐந்தாமிடத்தை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஜே.தயாளனும் ஆறாமிடத்தை கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த எம்.அன்ரனிகிளிங்ரனும் தமதாக்கினர்.
முதல் பத்து இடங்களுக்குள் எந்தவொரு மாவட்டத்தையும் சேர்ந்த ஆறு வீரர்கள் வராதமையால் எந்தவொரு மாவட்டமும் சம்பியனாகவில்லை. (ம-422)

# தென்னாபிரிக்காவுக்கு பதிலடி முறையாகக் கவனித்தது ஆஸி.

முத்தரப்புத் தொடரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் 36 ஓட்டங்களால் தென்னாபிரிக்காவை வீழ்த்தியது ஆஸ்திரேலியா.
ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வருகிறது. இலங்கை நேரப்படி நேற்றுமுன்தினம் நள்ளிரவு நடைபெற்ற ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவும் தென்னாபிரிக்காவும் பலப்பரீட்சை நடத்தின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. 13 ஓட்டங்களுடன் தாகிரின் பந்தில் போல்ட் ஆனார் பின்ஞ். 50 ஓட்டங்களை எட்டும் முன்னர் முதல் இலக்கை இழந்தாலும் வோர்ணர், கவாயாவின் இன்னிங்ஸ் ஆஸ்திரேலியாவை பதட்டத்திலிருந்து தூக்கி நிறுத்தியது. மேலதிக இலக்கை இழக்காமல் நூறு ஓட்டங்களை எட்டியது ஆஸி. இணைப்பாட்டமாகவும் நூறு ஓட்டங்கள் பகிரப்பட்டாயிற்று இலக்குச் சரிவு ஏற்பட்டபாடில்லை. 109 பந்துகளில் சதம் கடந்து 108 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் வோர்ணர். அரைச்சதத்துடன் பங்கிசோவின் பந்துவீச்சில் பவிலியன் திரும்பினார் கவாயா. மத்திய வரிசையைப் பலப்படுத்தினார் சிமித். சிமித்தின் துடுப்பில் இருந்து அரைச்சதம் ஒன்று பதிவானது. முடிவில் ஆஸ்திரேலியா 288-6.
பந்துவீச்சில் தென்னாபிரிக்காவின் சார்பாக தாகிர் இரு இலக்குகளையும் அப்பொட், ரபாடா, பார்நெல், பாங்கிசோ நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்காவுக்கு சிறப்பான ஆரம்பத்தை வழங்க மறுத்தார் குயின்டன் டி ஹொக். குயின்டனை வெளியேற்றியவர் கசில்வூட். அம்லா, பிளாசிஸ் இணை ஆஸியின் வயிற்றில் புளியைக் கரைத்தது. மேலதிக இலக்கை இழக்காமல் நூறு ஓட்டங்களை எட்டியது தென்னாபிரிக்கா. இருவரும் அரைச்சதம் கடந்தனர். 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அம்லா. அடுத்த சில பந்துப் பரிமாற்றங்களில் பிளாசிஸை வெளியேற்றினார் ஸ்ராக். சிக்சருடன் இன்னிங்ஸை கட்டமைத்தார் வில்லியர்ஸ். அவர் 39 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது கசில்வூட்டிடம் போல்ட் ஆனார். வில்லியர்ஸ் ஆட்டமிழந்த போது தென்னாபிரிக்கா 210-4 என்றிருந்தது. தென்னாபிரிக்கா வெற்றி பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருந்த போதிலும் பின்வரிசை வீரர்கள் அடுத்தடுத்து வெளியேற முடிவில் 252 ஓட்டங்களில் சுருண்டது அந்த அணி.
பந்துவீச்சில் ஆஸ்திரேலியாவின் சார்பாக ஸ்ராக், கசில்வூட், சாம்பா மூவரும் தலா மூன்று இலக்குகளை வீழ்த்தினர். வோர்ணர் ஆட்டநாயகனானார். இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்காவிடம் ஏற்கனவே அடைந்த தோல்விக்கு ஆஸி. பதிலடி கொடுத்துள்ளது.



# முல்லை. செயலகம் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 13
மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான மரதனில் பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணி சம்பியன் கிண்ணத்தை தனதாக்கியது.
இதன்படி முதலாமிடத்தை வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.சாளினி, இரண்டு முதல் ஐந்து வரையான இடங்களை முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.கேமா, எஸ்.விதுசா, எஸ்.சந்திரமதி, எஸ்.சிறிபிரியா ஆகியோர் தமதாக்கினர். ஆறாமிடத்தை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கௌசல்யா கைப்பற்றினார்.
இதில் முதல் ஆறு இடங்களுக்குள் முல்லையில் இருந்து நான்கு வீராங்கனைகள் இடம்பிடித்ததால் முல்லைத்தீவு மாவட்ட செயலக அணி சம்பியனாகியது. (ம-422)

# ஐக்கியத்தை வீழ்த்தியது பாடும்மீன்

யாழ்ப்பாணம், ஜூன் 13
கழுகுகள் வி.கழகம் நடத்தி வரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஐக்கியம் அணியை வீழ்த்தியது பாடும் மீன்.
கழுகுகளின் மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்தின் முதல் பாதியிலேயே பாடும்மீன்அணிதனதுவெற்றியை கிட்டத்தட்ட உறுதிப்படுத்தியது.
அந்த அணியின் வீரர்களான மலிக் 17ஆவது, 32ஆவது நிமிடங்களிலும், மயூரன் 34ஆவது, 35ஆவது நிமிடங்களிலும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் பாடும் மீன் 4:0 என்றிருந்தது. ஐக்கியத்தின் வியூகங்கள் இரண்டாம் பாதியிலும் பயன்தரவில்லை. பாடும்மீன் அணியின் கோபால் 52ஆவது, 82ஆவது நிமிடங்களில் இரு கோல்களைப் பதிவுசெய்ய, முடிவில் 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது அந்த அணி. (ம-23)



# அறிமுக ஆட்டத்தில் சதம் லோகேஸ் ராகுல் சாதனை

இந்தியா, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் சதம் விளாசியதன் மூலம் அறிமுக ஆட்டத்தில் சதத்தைப் பூர்த்தி செய்த முதல் இந்திய வீரர் என்ற பெருமை லோகேஸ் ராகுலுக்குக் கிடைத்துள்ளது.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 168 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 9 இலக்குகளால் வெற்றி பெற்றது. இந்த வெற்றிக்கு ராகுலின் சதம் பிரதான காரணமாக இருந்தது. 115 பந்துகளை எதிர்கொண்ட அவர் 100 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழக்காதிருந்தார். இந்தச் சதத்தின் மூலம் அறிமுக ஆட்டத்தில் சதம் விளாசிய முதல் இந்திய வீரர் என்ற பெருமை அவருக்குக் கிடைத்துள்ளது. உலக அளவில் பதினோராவது வீரராக உள்ளார். (ம)

# கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தொடர்; மானிப்பாய் ஏஞ்சல் காலிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜூன் 13
சென். அலோசியஸ்கல்லூரி அணியை வீழ்த்தி காலிறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி.
இலங்கை கூடைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டுவரும் தொடரில் 19 வயதுப் பிரிவினருக்கான காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டம் நல்லூர் டி மெசனெட் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சென். அலோசியஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதிய இந்த ஆட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 68:57 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திணைக்களங்களின் கால்பந்தாட்ட முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 13
கிளிநொச்சிமாவட்ட அரசதிணைக்களங்களுக்கு இடையிலான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சுகாதாரத் திணைக்கள அணி, மாவட்டச் செயலக அணி, தபால் திணைக்கள அணி என்பன இலகுவான வெற்றியைப் பதிவுசெய்துள்ளன.

கிளிநொச்சி உதயதாரகை மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டங்களில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் சுகாதாரத் திணைக்கள அணியை எதிர்த்து பூநகரி பிரதேச செயலக அணி மோதியது. ஆரம்பம் முதல் தனித்து ஆதிக்கம் செலுத்திய சுகாதாரத் திணைக்கள அணியின் ஆட்டத்துக்கு பூநகரி பிரதேச செயலக அணியால் ஈடு கொடுக்க முடியவில்லை. இதனால் இந்த ஆட்டம் 5:1 என்ற கோல் கணக்கில் சுகாதாரத் திணைக்கள அணியின் வசமானது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மாவட்டச் செயலக அணியை எதிர்த்து கல்வித் திணைக்கள அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் மாவட்டச் செயலக அணியின் கையே ஓங்கி இருந்தது. முடிவில் அந்த அணி 5:1 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உள்ளூராட்சித் திணைக்கள அணியை எதிர்த்து தபால் திணைக்கள அணி மோதியது. உள்ளூராட்சித் திணைக்கள அணி சிறிய எதிர்ப்புக் காட்டிய போதிலும் தபால் திணைக்களத்தை அசைத்துவிட முடியவில்லை. முடிவில் தபால் திணைக்கள அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (ம-23)




# 19 வயது வலைப்பந்தாட்டம்; சம்பியனானது விக்ரோறியா

யாழ்ப்பாணம், ஜூன் 13
வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி சம்பியனானது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பத்திலிருந்தே விக்ரோறியாவின் ஆதிக்கம் அதிகமாகவே காணப்பட முதல் பாதியின் முடிவில் 20:09 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது அந்த அணி. இரண்டாவது பாதியிலும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிய விக்ரோறியாக் கல்லூரி அணி முடிவில் 34:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை தனதாக்கியது. (ம-422)




பொதுநலவாய நாடுகளுக்கு இடையிலான பளுதூக்கல் போட்டியில் சாதித்த யாழ். மத்திய கல்லூரி மாணவன் விஸ்ணுகாந், பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வர்ணவிருது வழங்கும் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார். (ம-23)

# அராலி சரஸ்வதி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 13
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி சம்பியனானது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணியை எதிர்த்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 11:06 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்த சரஸ்வதி அணி இரண்டாம் பாதியிலும் சீரான வித்தியாசத்தைப் பேணி, முடிவில் 29:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணி தனதாக்கியது. (ம-422)



# திருக்குமரன், உருத்திரபுரம் அணிகள் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், ஜூன் 13
புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் திருக்குமரன், உருத்திரபுரம் அணிகள் வெற்றிபெற்றன.

எவரெஸ்ட் வி.கழக மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் உரும்பிராய் திருக்குமரன் அணியை எதிர்த்து விக்னேஸ்வரா அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா மூன்று கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் திருக்குமரன் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் உருத்திரபுரம் அணியை எதிர்த்து பொற்பதி அணி மோதியது. உருத்திரபுரம் அணி 3:0 என்ற கோல்களின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# வீனஸ் இருதயராஜா அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஜூன் 13
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வீனஸ், இருதயராஜா அணிகள் வெற்றிபெற்றுள்ளன.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வீனஸ் அணியை எதிர்த்து சென். சேவியர் அணி மோதியது. இதில் வீனஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதியது. இரு அணிகளும் தலா இரு கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட்டது. முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் இருதயராஜா அணி வெற்றி பெற்றது (ம-23)

# வென்றது ஆதிசக்தி

கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஆதிசக்தி அணி வெற்றிபெற்றது.

தொடர் கழுகுகளின் மைதானத்திலேயே இம்பெற்று வருகிறது. ஆதிசக்தி அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கிய அணி மோதிய இந்த ஆட்டத்தில் முதல் பாதியின் முடிவில் 1:1 என்று இரு அணிகளும் சமநிலை வகித்தன. இரண்டாம் பாதியின் 75 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி அணியின் குகராசா தனது அணியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது ஆதிசக்தி. ஆட்ட நாயகனாக குகராசா தெரிவானார். (23)

# சரஸ்வதியிடம் மற்றொரு கிண்ணம்

யாழ்ப்பாணம், ஜூன் 13
பாடசாலைகளுக்கு இடையிலான 15வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு வலைப்பந்தாட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி சம்பியனானது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி மோதியது. சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் பந்துப்பரிமாற்றங்களுக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியால் ஈடுகொடுக்க முடியவில்லை. முதல் பாதியின் முடிவில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அணி 14:02 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாம் பாதியிலும் சரஸ்வதியின் ஆதிக்கம் நீடித்து நிலைத்து நிற்க முடிவில் அந்த அணி 26:06 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. மூன்றாமிடத்தை வட இந்து மகளிர் கல்லூரி அணி தனதாக்கியது. (ம-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலையில் முடிக்க இலங்கைக்கு வாய்ப்பு

இங்கிலாந்து, இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தை சமநிலையில் முடிக்கக்கூடிய வாய்ப்பு இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 416 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கையால் முடிந்தது 288 ஓட்டங்களே. இரண்டாவது இன்னிங்ஸுக்காக இங்கிலாந்து துடுப்பெடுத்தாடி 109-4 என்றிருந்த பொழுது மூன்றாம் நாள் முடிந்தது. நேற்றைய தினம் மத்திய உணவு இடைவேளைவரை மழை நீடித்ததால் ஆட்டம் ஸ்தம்பிதமானது. மைதானம் உலர்ந்ததும் கேல்ஸ் 41 ஓட்டங்களுடனும் பின் 6 ஓட்டங்களுடனும் களமிறங்கினர். மழை அவ்வப்பொழுது குறுக்கிடுவதும் இங்கிலாந்தின் ஓரிரு இலக்குகள் சரிக்கப்படுவதுமாக நகர்ந்தது ஆட்டம். 223-7 என்ற நிலையில் இடைநிறுத்தியது இங்கிலாந்து. இலங்கைக்கு இலக்காக 362 ஓட்டங்கள். நாள் முடிவில் இலங்கை 32-0 என்றுள்ளது. ஆட்டத்தின் இறுதிநாள் இன்றாகும். முதலிரு ஆட்டங்களிலும் இலங்கை தோல்வியடைந்துள்ள நிலையில் இந்த ஆட்டத்தை சமநிலையில் முடிக்கக்கூடிய வாய்ப்பு இலங்கைக்கு உள்ளது. 90 பந்துப் பரிமாற்றங்களும் 10 இலக்குகளும் கைவசம் உள்ளன. இணைப்பாட்டம் ஒன்று நீண்டு நிலைபெற்றால் இங்கிலாந்தை வீழ்த்தவும் முடியும். (ம)

SAAMSON
Experts in English Training
SATISFACTION GUARANTEED
Spoken English
இம்முறை O/L, A/L எழுதியோர்,இளைஞர் யுவதிகளுக்கான
ஷாம்சன் ஆசிரியரின் 3வது புதிய வகுப்புகள் ஆரம்பம்
சனிக்கிழமை 18.06.2016
279, ஆஸ்பத்திரி பின்புறம்,
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

# போர்க்களமாக மாறிய இங்கிலாந்து, ரஷ்யா மோதல் ரசிகர்கள் அடாவடி; பலருக்கு இரத்தக் காயங்கள்



யூரோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுக் காலை நடைபெற்ற ரஷ்யா, இங்கிலாந்து அணிகள் மோதிய ஆட்டத்தில் ரசிகர்கள் கைகலப்பில் ஈடுபட்டதால் 31 பேருக்கு படுகாயம் ஏற்பட்டுள்ளமை கால்பந்தாட்ட உலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸின் மார்சிலே அரங்கில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கிட்டத்தட்ட 84ஆயிரம் ரசிகர்கள் குவிந்திருந்தனர். கோல்கள் எவையும் பதிவாகாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 73ஆவது நிமிடத்தில் எரிக்டையர் கோலைப் பதிவு செய்ய இங்கிலாந்து முன்னிலை பெற ஆரம்பித்தது. ஒருமுனையில் நிமிடங்கள் உருண்டோட மறுமுனையில் இங்கிலாந்தின் வெற்றி உறுதியாகிக் கொண்டிருந்தது. இங்கிலாந்தின் ரசிகர்களின் ஆரவாரத்துக்கு அளவே இருக்கவில்லை. இந்த நிலையில் 92ஆவது நிமிடத்தில் எதிர்பாரா கோலைப் பதிவுசெய்து ஆட்டத்தை சமப்படுத்தியது ரஷ்யா. இங்கிலாந்தின் ரசிகர்களை வட்டியுடன் சேர்த்து கவனித்தனர் ரஷ்யாவின் ரசிகர்கள். கூக்குரல்கள், வாக்குவாதங்கள் வானைப் பிளந்தன. இவை மைதானத்தில் எங்கோ ஓர் மூலையில் கைகலப்பாக மாறியது. காட்டுத் தீயைப் போல் இந்தக் கைகலப்பு பரவ குழுக்களுக்கு இடையிலான மோதல் இருநாட்டுரசிகர்களுக்கு இடையிலான மோதலாக தீவிரம் அடைந்தது. தண்ணீர்ப் போத்தல்கள், மதுப் போத்தல்கள், கதிரைகள் காற்றில் மாறிமாறி பறந்து திரிந்தன. அரங்குக்கு வெளியேயும் ரசிகர்கள் பல இடங்களில் நேருக்கு நேர் மோதுண்டார்கள். இதனால் பலருக்கு இரத்தக்காயங்கள் ஏற்பட்டன. பொலிஸாருடன் இணைந்து விசேட அதிரடிப் படையினர் களமிறங்கிய போதிலும் மூன்று மணி நேரத்துக்கு பின்னரே கலவரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடிந்தது. இதில் 31பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் ஆயிரம் பேருக்கு அதிகமானோர் சம்பவத்துடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளதாகவும் அறிய வருகிறது. (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.